Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 27 ஞாயிற்றுக்கிழமை (11.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

# நல்லிணக்கத்தை ஜனாதிபதியால் ஏற்படுத்த முடியும்

## இந்திய நாட்டின் ஜனாதிபதி ராம்நாத் கோவிந் தெரிவிப்பு



(டில்லி) சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி இலங்கைக்கு நீண்ட கால நன்மைகளை கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முடியும் என இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந் தெரிவித்துள்ளார்.(15-ம் பக்.)

இன்னும் சில நாட்களுக்கு

## சமூக வலைத்தளங்களை முடக்கத் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் தற்காலிகமாக தடைசெய்யப்பட்ட பேஸ்புக் வட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் இன்னும் சில நாட்களுக்கு இயங்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை 16

வன்முறையின் பின்புலமாக செயற்பட்ட

## கட்சிகள் தொடர்பில் புலனாய்வு விசாரணை

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் இன வன்முறைகள் ஏற்பட பின்புலமாக செயற்பட்ட அரசியல் கட்சியொன்று மற்றும் மூன்று குழுக்கள் தொடர்பிலான விசாரணைகளை புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்திருக்கிறது.

இந்த வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று நேற்று சனிக்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது.

கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட வன்முறைகளை 15

## தாளையடி கடலில் மீன்பிடிக்க சென்ற நபரை காணவில்லை

(மல்லாவி)

தாளையடி வெற்றிலைக்கேணி கடலில் மீன் பிடிக்கச் சென்ற 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் காணாமல் போயுள்ளார். அவர் தொழிலுக்கு சென்ற இயந்திரப் 16

வடமராட்சி பகுதியில்

## கஞ்சா கடத்தியவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

கஞ்சா கடத்த முற்பட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து நான்கு கிலோகிராம் கஞ்சாவினை மீட்ட 15

## மயங்கி விழுந்த 3 பிள்ளைகளின் தந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த யாழ்.மாநகர சபை தொழிலாளி ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். 15

## பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

எதிர்வரும் வாரம்: ஒன்றிணைந்த எதிரணி

(கொழும்பு)

பிரதமருக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணையை எதிர்வரும் வாரம் நாடாளுமன்றில் முன்வைக்க உள்ளதாக ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது.

ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித்டி சொய்சா இதனை தெரிவித்துள்ளார். குறித்த நம்பிக்கை இல்லா பிரேரணையில் தற்போது ஒன்றிணைந்த எதிரணியினர் கையொப்பமிடும் இறுதி கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பிரதமருக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணையில் ஐக்கிய தேசிய 16

கண்டி மாவட்டத்தில்

## ஊரடங்கு உத்தரவு அமுலாக்கப்படாது

பொலிஸ் ஊடக பேச்சாளர்

(கொழும்பு)

கண்டி நிர்வாக மாவட்டத்தில் நிலவும் இயல்பான நிலை காரணமாக ஊரடங்கு உத்தரவு அமுலாக்கப்படாது என பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த நாட்களில் குறி 16

## பொதுமக்களின் அசமந்தத்தால் விபத்துக்குள்ளான குடும்பஸ்தர்

அதிக இரத்தம் வெளியேறி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் இரண்டரை மணி நேரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லாது வீதியிலே அநாதரவாக கைவிடப்பட்டதால் அதிக இரத்தம் வெளியேறி உயிரிழந்த சம்பவம் ஒன்று காரைநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்தில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வேடிக்கை பார்த்திருந்த போதும் ஒருவர் கூட குறித்த நபரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கு முன்வரவில்லை என பொலிஸார் விசனம் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் களபூமியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தை 15

ஐ.நா கூட்ட தொடரில் பங்கேற்பதற்கு

## ஜெனிவா செல்கிறது அரசாங்க தூதுக்குழு

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடரில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை குறித்த முதலாவது விவாதம் நடைபெறவுள்ள நிலையில் அதில் இலங்கையின் 15

## வன்முறையில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் அறிவியுங்கள்

பொலிஸ் தலைமையகம் கோரிக்கை

(கொழும்பு)

அம்பாறை மற்றும் கண்டி பிரதேசங்களில் வன்முறைகளில் ஈடுபட்ட தனி நபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பில் தகவல்களை பெற்றுக்கொள்ள பொலிஸ் தலைமையகத்தில் விசேட நடவடிக்கை மையமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

குறித்த விசேட நடவடிக்கை மையம் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய பிரிவுகளுக்கு வழங்கப்படும் என பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

0113024892, 0113024883 ஆகிய தொலைபேசி இலக் 15

## இன வன்முறை தொடர்பில் அரபு நாடுகள் அதிருப்தி

ஜெனிவாவில் இலங்கைக்கு புதிய சிக்கல்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்றுவரும் வன்முறைகள் தொடர்பில் அரபு நாடுகள் கடும் அதிருப்தியடைந்துள்ளதாகவும், இது தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்க அந்த நாடுகள் தீர்மானித்திருப்பதாகவும் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து, கொழும்பிலுள்ள தூதுவர்களூடாக முழுமையான விவரங்களைத் 15

## உயர் நீதிமன்ற நீதிபதியாக பெர்னாண்டோ பதவியேற்பு



15

## முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைக்கு ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும்!

முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சட்டத்தையும் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கே உண்டு என முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற இன வன்முறைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பேற்க வேண்டும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார். வாராந்த கேள்வி பதிலில் முதலமைச்சர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 07



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரதமர் ரணிலுக்கு எதிராக தினேஷ் குணவர்தன தலைமையில்

## புதிய திட்டமிடல் குழு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கெதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்ற புதிய திட்டமிடல் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொது எதிரணியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் தினேஷ் குணவர்தன தலைமையில் திட்டமிடல் குழுவொன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இதேவேளை, பிரதமருக்கெதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்ற ஆதரவு திரட்டுவதற்காக கூட்டு எதிர்கட்சியினர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படவுள்ள குறித்த பிரேரணையில் பிரதமருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கடந்த 6ஆம் திகதி நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படவிருந்த நிலையில், பின்னர் குறித்த பிரேரணை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அரசியல் சுயநலத்திற்காக மக்களை ஏமாற்ற முடியாது

## வியாழேந்திரன் எம்.பி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

ஒரு சில அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் சுயநலத்திற்காக மக்களை பகடைக்காய்களாக்குவதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன ரீதியான மற்றும் மத ரீதியான வன்முறைகளை தூண்டுபவர்கள் சரியான முறையில் இனங்காணப்பட்டு கைது செய்யப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் மீள நிகழாமையினை உறுதிப்படுத்த அரசாங்கத்துடன் இருக்கும் முஸ்லிம் தலைமைகள் தமது பணியை மேற்கொள்ளவேண்டும்.

ஒரு இனம் இன்னுமொரு இனத்தினை பாதிக்கும் வகையில் செயற்படக்கூடாது என்ற ஒருமித்த கருத்தில் மிக கவனமாக அரசியல்வாதிகள் உள்ள நிலையில் அந்த கரிசனை தமிழ் மக்கள் மீதும் அவர்களுக்கு இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு சில அரசியல்வாதிகள் தங்களின அரசியல் சுயநலத்திற்காக மக்களை பகடைக்காய்களாக்குவதனை ஒருபோதும்ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார். (ம)


## மரண அறிவித்தல்

### திருமதி அருமைநாயகம் மகேஸ்வரி



அரிச்சந்திரன் வளவு புலோலி தெற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருமைநாயகம் மகேஸ்வரி அவர்கள் 10.03.2018 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் அருமைநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை-இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா-சரஸ்வதியின் அன்பு மருமகளும், பிரதீபாவின் அன்புத் தாயாரும், ஜெயானந்தனின் அன்பு மாமியும், ஆதர்சாவின் அன்பு பேர்த்தியும், சபாநாதன், லோகநாதன், ஜமுனாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அரிச்சந்திரன் வளவு" புலோலி தெற்கு, புலோலி (சி-1847) தகவல்:- குடும்பத்தினர்


# மின்சாரம் தாக்கியதில் இந்திய பிரஜை உயிரிழப்பு

(கொழும்பு)

இந்திய பிரஜையான கொழும்பு துறைமுக ஊழியரொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்சாரம் தாக்கி படுகாயமடைந்த நிலையில் குறித்த ஊழியர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். 38 வயதுடைய இந்திய பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)


யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னாரில்..
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 021-4924124
(3181)
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## மரண அறிவித்தல்

### திருமதி பவளம்மா செல்லையா

தோற்றம் 15 - 08 - 1934



மறைவு 09 - 03 - 2018

3ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும், இல.25, சங்கிலியன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம்மா செல்லையா 09.03.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதி-ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் பாசமிகு மனைவியும், சச்சிதானந்தம், சண்முகரெத்தினம், காலஞ்சென்றவர்களான கருணாகரன், இந்திரகுமார் மற்றும் மயில்வாகனம், நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி, மணிமாறன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சினிதேவி, யோகேஸ்வரி, சுலோஜனாதேவி (சட்டத்தரணி), பத்மாவதி, மகேந்திரன், மகேந்திரன் (இந்திரன்), எலிசபெத் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சதீஸ்குமார் (அவுஸ்திரேலியா), சத்தியேஸ்வரி (பிரான்ஸ்), சிந்துஜெயன் (பிரான்ஸ்), நிசாந்தி, ரேணுகாந்தன், கேமலக்ஷன், கபில்ராஜ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தாரணி மற்றும் சதுர்சன், கலைமதி, சர்மிலன், அனிஸ்ரா, ஜனகன், யதுர்சன், சகானா (லண்டன்), றொகானா (லண்டன்), பாலரிசி (அவுஸ்திரேலியா), ரமேஸ் (பிரான்ஸ்), கஜீந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், றக்ஷிகா, ஹரிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்ற குழந்தைவேலுவின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (12.03.2018) முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.25, சங்கிலியன் வீதி, நல்லூர். (3180) தகவல்: குடும்பத்தினர்



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் இராசேந்திரம் புவன்ராஜ்

(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

பிறப்பு 20 - 08 - 1968



இறப்பு 09 - 02 - 2018

அடங்கி போனதோ! அமைதி கொண்ட இதயம்
அதிர்ந்து பேசாத ஆளுமை அவனியில் வாழ்வை முடித்து
ஆண்டவனிடம் சரணடைந்தது... சகிப்புத் தன்மையை
தரணிக்கு சொன்ன சத்தியம் சாந்தமாகி சமாதி அடைந்ததோ!

(3188)

கலைவாணி மில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

குடும்பத்தினர் 0773126453

# டில்லியில் ஜனாதிபதி மைத்திரி





(டில்லி)

இந்தியாவின் தலைநகர் டில்லியில் ஆரம்பமாகும் சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இந்தியாவுக்கு புறப்பட்டுச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிற்பகல் டில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தை சென்றடைந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் மேற்கு பிராந்தியத்திற்குப் பொறுப்பான செயலாளர் திருமதி ருச்சிகன் ஷாம் விமான நிலையத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற்றார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரண் ஜித் சிங் மற்றும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திருமதி சித்ராங்கனி வாகீஸ்வர ஆகியோர் இந்நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

ஜனாதிபதி தங்கியுள்ள தாஜ் ஹோட்டலில் தூதரக அதிகாரிகள் ஜனாதிபதியை வரவேற்றனர்.

ஜனாதிபதியின் இந்த இரண்டு நாள் உத்தி யோகபூர்வ விஜயத்தில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் இணைந்துள்ளார். (இ-7)

# அமெரிக்கக் குடியுரிமையை தூக்கியெறிந்து ஜனாதிபதியாவேன்

## கோத்தபாய திட்டவட்டம்



(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டிய நிலை ஏற்படுமாயின் அமெரிக்க குடியுரிமையினை இரத்துச் செய்து கொள்வேன் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் மீது உண்மையான பற்றும் அன்பும் உள்ள ஒருவரும், யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்த ஒருவரும், இராணுவத்தினரை பாதுகாக்கும் ஒருவரும், நாட்டில் கலாசாரத்தைப் பாதுகாக்கும் ஒருவரும், சுயநலமற்ற தூய்மையான அரசியலில் ஈடுபடும் ஒருவருமே ஜனாதிபதி வேட்பாளராக நிற்க தகுதியுடையவர் எனவும் கோத்தபாய இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து "தாங்கள் குறிப்பிட்ட அனைத்துத் தகுதிகளும் உங்களிடம் இருப்பதாகவும், நீங்களே ஜனாதிபதியாக வர வேண்டும் எனவும் சிலர் கருத்து வெளியிடுகின்றார்களே...?" என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த கோத்தபாய "சிலர் அவ்வாறு கூறுகின்றார்கள். ஆயினும் காலம் அதனைத் தீர்மானிக்கும். அவ்வாறு ஜனாதிபதி வேட்பாளராக நான் களமிறங்க வேண்டுமாயின் நிச்சயமாக களமிறங்குவேன்" எனக் கூறியுள்ளார்.

அதற்கு அமெரிக்கக் குடியுரிமை தடையாக இருக்கும் பட்சத்தில் அதனைத் தூக்கியெறிவேன்..

அதேபோன்று, சிங்கள இன த்தவரின் வாக்குகள் மாத்தி ரம் இல்லாமல் தமிழ் - முஸ்லிம் என்ற சிறுபான்மை இனத்தவர் அனைவரதும் வாக்குகள் எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு எனவும் கோத்தபாய தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 2 குண்டுகள் மீட்கப்பட்ட விவகாரம்; வீட்டு உரிமையாளரின் சடலம் மீட்பு

(அம்பாறை)

ஆரையம்பதி, காங்கேயனோடை, எல்லை வீதியில் இரண்டு வீடுகளிலிருந்து நேரம் குறித்து வெடிக்கக் கூடிய இரண்டு குண்டுகள் கடந்த புதன்கிழமை மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்த வீட்டின் உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் காத்தான்குடி பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆரையம்பதியைச் சேர்ந்த 28 வயதுடைய அருள்ராஜ் ஆனந்தராஜா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது சடலம் மீட்கப்பட்ட பகுதியில் இவர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை அவரது தாய் மற்றும் மனைவி ஆகியோர் அடையாளம் காட்டினர்.

மேற்படி நபருக்கும் அவரது மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத்தகராறு நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது. இந்நிலையில் தன்னுடைய மனைவியை அச்சுறுத்துவதற்காகவே அவ்விரு குண்டுகளையும் அவர் பொருத்தியிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்விரு வீடுகளிலிருந்து இரண்டு குண்டுகளுடன் 250 கிராம் வெடி மருந்துகள், பெற்றோல் மற்றும் பற்றரி வயர் என்பன மீட்கப்பட்டன. அத்துடன், அவ்விரு வீடுகளுக்கும் முன்பாக ஐ. எஸ். ஐ.எஸ் என எழுதப்பட்ட பதாகைகளும் தொங்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ். போதனா வைத்தியசாலையில் தினமும் 4,500 பேருக்குச் சிகிச்சை

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் தினமும் 4500 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி. சத்தியமூர்ததி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்திய சாலையின் வரலாற்றை ஆவணப்படுத்தி காட்சிப் படுத்தும் அருங்காட்சியகம் நேற்று வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலை ஆரம்பத்தில் The Friend in need Society Hospital எனும் பெயரில் தான் உருவாக்கம் பெற்றது.

பின்னர் 1850-1907 இடைப்பட்ட காலப்பகுதியில் யாழ். போதனா வைத்திய சாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இங்கு 1600 உத்தியோகத் தர்களும் 77 வைத்திய நிபு ணர்களும் 244 வைத்திய அதிகாரிகளும், 494 தாதியர்களும், 97 பிஸ்.எஸ்.எம். உத்தியோகத்தர்களும் 50 மருத்துவ ஊழியர்களும், 125 பணியாளர்களும் 348 சுகாதார உதவியாளர்களும் 50 அலுவலக உத்தியோக த்தர்களும் மற்றும் பலரும் கடமையாற்றுகின்றார்கள்.

தற்போது நாளொன்றுக்கு 4 ஆயிரத்து 500 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

800 பேர் வெளி நோயாளர் பிரிவிலும், 1200 பேர் உள்ளகத்திலும், 2500 பேர் மருத்துவ சிகிச்சையும் பெற்று வருகின்றனர்.

வடக்கினுடைய ஒரு பெரும் வைத்தியசாலையாக காணப் படுகின்ற இந்த வைத்திய சாலையின் வரலாற்றை ஆவ ணப்படுத்தும் நோக்கிலேயே இந்த அருங்காட்சியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

10 மில்லியன் ரூபா செலவில் புன ரமைக்கப்பட் டுள்ள இந்த அருங்காட்சி யகத்தில் வைத்தியசாலை யின் வரலாற்று ஆவணங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

வைத்தி யசாலையின் வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களின் பெயர் விபரங்கள் ஆவண ப்படுத்தப் படவுள்ளது.

எனவே யாழ். போதனா வைத்திய சாலையின் வரலாறு தொடர்பில் யாரும் ஆவணங்கள் வைத்திருப்பின் அருங்காட்சிய நிர்வாகத்தோடு தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-4)

## பிரதமருக்கு எதிராக பிரேரணை

# தினேஷ் குணவர்த்தன தலைமையில் திட்டமிடல் குழு மகிந்தவால் நியமனம்



(கொழும்பு)

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்ற பொது எதிரணியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் திட்டமிடல் குழுவொன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

பிரதமருக்கெதிராக கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைநிறைவேற்றஆதரவு திரட்டுவதற்காக ஸ்ரீல ங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய தரப்புடன் இது குறித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளது. (இ-7)

# கண்டிக் கலவரம் குறித்து விசாரணை செய்ய விரைவில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்!



(கொழும்பு)

கடந்த சில நாட்களாக கண்டி மாவட்டத்தின் சில பகுதிகளில் இடம்பெற்ற கலவர நிலைமை தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

அந்த வகையில் ஓய்வு பெற்ற மூன்று நீதியரசர்களைக் கொண்ட குழுவொன்று விரைவில் நியமிக்கப்படவுள்ளது.

இந்த கலவர சூழ்நிலைக்கு காரணமான விடயங்களுக்கு மத்தியில் சட்டமும் ஒழுங்கும் மீறப்பட்டுள்ளதா? என்றும், உயிர், உடைமை சேத விபரங்கள் குறித்தும், இந்த நிகழ்வுகளுக்கு பின்னால் சூழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளனவா? என்பது தொடர்பாகவும், எதிர்காலத்தில் இத்தகைய நிகழ்வுகள் இடம் பெறுவதை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இந்த சம்பவங்களை கட்டுப்படுத்த அதிகாரிகள் செயற்பட்ட விதம், அவர்களது பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் குறித்து இந்தக் குழு விசார ணைகளை மேற்கொள்ளவுள்ளது. (இ-7)

## இரசிகர்களை இறுதிவரை கட்டிப்போட்ட இறுதி நாளாட்டத்தில் மதுசனின் சகலதுறை ஆட்டத்தை துசாந்தன் முடித்து வைக்க

# 112வது வடக்கின் போரில் சம்பியனானது யாழ்.மத்தி

இரசிகர்களை இறுதி வரை கட்டிப்போட்டு யாழ்ப்பாணத்திலே ஒரு சர்வதேச போட்டியை பார்த்த ஒரு திகில் அனுபவத்தை கொடுததது வடக்கின் பெரும போரின் 112ஆவது அத்தியாயம்.

2ஆம் நாளாட்டம் நிறைவடைந்தபோது ஏதோ 3ஆம் நாள் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இலகுவாக வெற்றி பெற்றுவிடும் என்றே கிரிக்கெட் இரசிகர்கள் கருதினர்.

எனினும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் கடந்த பருவத்தில் பெற்ற வெற்றியை இலகுவாக விட்டுக்கொடுக்க மாட்டோம என்று கங்கணம கட்டியதுபோல ஆட 3ஆம் நாளாடடம் சுவாரஸ்யமான ஒரு ஆட்டமாக மாறியது.

குறிப்பாக அந்த அணியின் வசந்தன் யதுசன், கனகரட்ணம் கபில்ராஜ், தேவதாஸ் செரோபன் ஆகியோர் யாழ்.மத்திய, கல்லூரி வீரர்களுக்கு தோல்விப் பயத்தை கண்ணில் காட்டினர்.

எனினும், தங்களுக்கான இந்த வெற்றியை பெற்றே தீருவோம் என களத்தில் தனியொருவனாக போராடிய சகலதுறை வீரர் செல்வராசா மதுசன் இலகுவாக கிடைக்க விருந்த வெற்றியை மத்திய கல்லூரிக்கு போராடிப் பெற்றுக் கொடுத்தார். அவருக்கு சுதர்சன் துசாந்தன் பக்கபலமாக இருந்தார்.

இநத வெற்றியுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது வெற்றிக் கணக்கை 28 ஆக உயர்த்தியது.

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான 3 நாட்களைக் கொண்ட 112 ஆவது வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் போட்டி, கடந்த 8ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்தி அணித்தலைவர் சிவலிங்கம் தசோபன் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு தேவதாஸ் செரோபனின் (65) அரைச்சதம் கைகொடுக்க சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 77.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக, விஜயகாந்த் விஜஸ்காந்த் 59 ஓட்டங்களுக்கு 4, சிவலிங்கம் தசோபன் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 16 ஓவர்களை எதிர்கொண்டு ஒரு விக்கெட்டினை இழந்து 43 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் நடந்த 2ஆம் நாள் ஆட்டத்தில், தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சிறப்பாக ஆடி




101.2 ஓவர்களை எதிர்கொண்டு 328 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அன்ரனிடயஸ் ஜெயதர்சன் 77, இராஜரத்தினம் ராஜ்கிளின்டன் ஆட்டமிழக்காமல் 54, செல்வராசா மதுசன் (52), அணித்தலைவர் சிவலிங்கம் தசோபன் (49) ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் அணி சார்பாக, கனகரட்னம் கபில்ராஜ் 94 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

111 ஓட்டங்கள் பின்னிலையில் தமது 2ஆவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென். ஜோன்ஸ கல்லூரி அணியின் துடுப்பாட்டம் ஆட்டம் கண்டது.

இதனால் 2ஆம் நாள் ஆட்டத்தின் இறுதி நேரத்தில், அடுத்தடுத்து விக்கெட்டுக்களை பறிகொடுத்து 5.2 ஓவர்களில் 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து பரிதவித்தது.

எனினும் நேற்றைய 3ஆம் நாள் ஆட்டம் வேறுவிதமாக அமைந்தது. 5 ஆவது விக்கெட் 30 ஓட்டங்களைப் பெற்றபோது வீழ்த்தப்பட்டது.

அதன் பின்னர் ஆட்டத்தைக் கையிலெடுத்த சென். ஜோனஸ் அணியின் அணித தலைவர் வசந்தன் யதுசன், தேவதாஸ் செரோபனுடன் இணைந்து, வலுவான இணைப்பாட்டத்தை வழங்கினார். அணி 80 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது யதுசன் 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சூரியகுமார் சுஜன் இவரை வெளியேற்றினார்.

தொடர்ந்து செரோபனுடன் ஜோடி சேர்ந்த தெய்வேந்திரம் டினோசன், மீண்டும் ஒரு பலமான இணைப்பாட்டத்தை வழங்கினார். இந்த இணைபபாட்டம் இன்னிங்ஸ் தோல்வி என்ற நிலையிலிருந்து அணியை கடக்க உதவியது.

அணியின் ஓட்டஎண்ணிக்கை 137ஐ எட்டிய போது 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த செரோபன், விஜஸ்காந்தின் பந்துவீச்சில் ஆட்டமிழநதார்.

களத்திலிருந்த டினோசனுடன் ஜோடி சேர்ந்த கனகரட்ணம் கபில்ராஜ், மீண்டுமொரு வேகமான இணைப்பாட்டத்தை வழங்கினார். சென்.ஜோன்ஸ் அணி 182 ஓட்டங்களைப் பெற்ற போது; 33 ஓட்டங்களுடன் டினோசன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம் புகுந்த வடிவேல் அபிலக்சன் கைகொடுக்க, கபில்ராஜ் வேகமாக அடித்தாடினார். அபிலக்சன் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கபில்ராஜ் அதிரடியாக ஆடி, 36 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்தார். 56.1 ஓவர்களில் 219 ஓட்டங்களுக்கு சென்.ஜோன்ஸ் அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக, சூரியகுமார் சுஜன் 14 ஓவர்கள் பந்துவீசி 49 ஓட்டங்களுக்கு 4, செல்வராசா மதுசன் 30 ஓட்டங்களுக்கு 3, விஜஸ்காந்த் 2, தசோபன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

109 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது 2ஆவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, ஆரம்பத்தில் வேகமாக ஓட்டங்களைப் பெற்றது. ஆனால், அணி 20 ஓட்டங்களைப் பெற்ற போது, தொடர்ச்சியாக 3 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டன. விஜயகாந்த் விஜஸ்காந்த் 19, அன்ரனிடயஸ் ஜெயதர்சன் 01, கமலராசா இயலரசன் 0 என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். மூவரில் இருவரை கபில்ராஜ் வெளியேற்றினார். இதனால் போட்டியின் போக்கு சென். ஜோன்ஸ கல்லூரியை நோக்கி மாறுவதாக இருந்தது.

எனினும் ஒருமுனையில் நிலையெடுத்து செல்வராசா மதுசன் அணியின் வெற்றிக்கான நம்பிக்கையை தனியொருவராக வழங்கிக் கொண்டிருந்தார். ஆனால் இவர் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்போது, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 7 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன் பின்னர் ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. 101 ஓட்டங்களை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி பெற்ற போது, தொடர்ச்சியாக இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன.

எனினும் இறுதி விக்கெட்டை கையில் வைத்து கடுமையாக போராடிய சுதர்சன் துசாந்தன் வெற்றிக்கான ஒரு நான்கு ஓட்டத்தை பைன் லெக் திசையை நோக்கி தட்டிவிட, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இரசிகர்கள் ஆர்ப்பரித்து மைதானத்துக்குள்ளே வெற்றிக் கரகோசங்களை எழுப்பினர். இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த துசாந்தன் 15 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ அணி சார்பாக, கனகரட்னம் கபில்ராஜ் 16.3 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

112ஆவது வடக்கின் பெரும் போரின் ஆட்டநாயகனாக சகலதுறைகளிலும் ஜொலித்து யாழ்ப்பாணம் மத்தியின் வெற்றிக்கு வித்திட்ட செல்வராசா மதுசன் தெரிவு செய்யப்பட்டார். (26)

# இந்துக்களின் போர் சமனிலையானது

டினேஸ் - சரோனின் 2ஆம் இனனிங்ஸ் துடுப்பாட்டததால், திடமான நிலைக்கு கொழும்பு இந்து முன்னேறியதால், வெற்றி பெறுவதற்கு காத்திருந்த யாழ்ப்பாணம் இந்துவின் எண்ணம் நிறைவேறாமல் போனது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கு இடையிலான 9ஆவது இந்துக்களின் போர் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி இரண்டு நாட்களாக நடைபெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கொழும்பு இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. தொடக்கத்தில் நல்ல ஆரம்பத்தை கொடுத்த கொழும்பு இந்துக் கல்லூரி அணி 108 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

எனினும் அதன்பின்னர் சிவலக்சனின் பந்துவீச்சில் விக்கெட்களை பறிகொடுத்து, 45.4 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஜி.டினேஸ் 66, ஆர்.சேவாக் 24 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்து சார்பாக எல். சிவலக்சன் 5, அணித்தலைவர் எம்.கோபிராம் 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்து அணி யு.மிலுக்சன், கே.விதுசன் ஆகியோரின் அரைச் சதங்கள் கைகொடுக்க 200 ஓட்டங்களைக் கடந்தது.



நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிவில், 49 ஓவர்களை எதிர்கொண்ட யாழ்ப்பாணம் இந்து 4 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மிலுக்சன் 72 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். விதுசன் 50, ஆர்.கஜாநந் 33 ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர்.

நேற்று 2ஆம் நாள் ஆட்டம் ஆரம்பமானதும், விதுசன் மேலதிக ஓட்டங்கள் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். மறுமுனையில் கஜாநந் அரைச்சதம் கடந்து 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 9ஆம் இலக்க வீரராக களமிறங்கிய கே. கோமைந்தன் 43 ஓட்டங்களை வேகமாக எடுத்தார். எஸ்.சநதுரு 19 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இறுதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 68.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 333 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் டி.கேநிசன் 82 ஓட்டங்களுக்கு 3, ஏ. ஆகாஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

168 ஓட்டங்கள் பின்னிலையில் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு இந்துக் கல்லூரி அணி, முதல் இரண்டு விக்கெட்டுக்களையும் 30 ஓட்டங்களுக்குள் இழந்தது.

எனினும், அதன் பின்னர் டினேஸ் மற்றும் சரோன இணைந்து அணியை ஸ்திரப்படுத்தினர். இருவரும் தமக்கிடையில் 146 ஓட்டங்களைப் பகிர்ந்து, போட்டியின் போக்கையே மாற்றினர். ஜி.டினேஸ் 80, எஸ். சரோன் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அதன் பின்னர் இரண்டு விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டன.

இந்நிலையில் 2ஆவதும் இறுதியுமான நாள் நிறைவுக்கு வர 74 ஓவர்களை எதிர்கொண்ட கொழும்பு இந்துக் கல்லூரி அணி, 6 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக கொழும்பு இந்துக் கல்லூரியின் ஜி.டினேஸ் தெரிவு செய்யப்பட்டார். (26)

# உயிரிழந்தவர்களுக்கு ரூ.5 இலட்சம் நட்டஈடு

## பிரதமர் ரணில் ஆலோசனை

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிகழ்ந்த அசம்பாவிதத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதமர் நேற்று கண்டி திகன, கென்கல்ல, பள்ளேவெல, அகுரணை ஆகிய பிரதேசங்களுக்குச்சென்று நிலைமையினை அவதானித்ததுடன் சேதமடைந்துள்ள பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்களை பார்வையிட்டதுடன் பிரதேச வாசிகளுடனும் கலந்துரையாடினார்.

மக்கள் சந்திப்பின் பின்னர் கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட பாதுகாப்பு குழுக்கூட்டத்திலும் கலந்து கொண்ட பிரதமர் குறித்த ஆலோசனையினை அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளார்.

மேலும் நட்டஈடு வழங்கும் நடவடிக்கையினை இன்று ஆரம்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# கண்டியில் வன்முறை; பொலிஸார் குறிப்பிட்ட பாதிப்பு விபரங்களில் பிழை

(கொழும்பு)

கண்டி வன்முறையின் போது பாதிப்புக்குள்ளான விபரங்கள் தொடர்பில் முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா, பொலிஸ் ஊடகப்பேச்சாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர வெளியிட்ட தகவல்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலேயே குறித்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கண்டி வன்முறையில் 4 பள்ளிவாசல்கள் மாத்திரமே



பாதிக்கப்பட்டதாக குறித்த ஊடகவியலாளர் மாநாட்டில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் (09.03.2018) வரை தொகுக்கப்பட்ட விபரங்களுக்கு அமைய பாதிப்புக்குள்ளான பள்ளிவாசல்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள், வாகனங்களின் தகவல்கள் குறித்த கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. பாதிப்பு விபரங்கள்: உயிரிழப்பு-01,காயமடைந்தோர்-12, முற்றாக சேதமாக்கப்பட்ட வீடுகள்-62, பகுதியளவில் சேதமாக்கப்பட்ட வீடுகள்-79, பாதிப்புக்குள்ளான பள்ளிவாசல்கள்-17 முற்றாக சேதமாக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள்-91, பகுதியளவில் சேதமாக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள்-22, சேதமாக்கப்பட்ட வாகனங்கள்-60, இடம்பெயர்ந்த குடும்பங்கள்-300 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஐ.நா. அதிகாரி பெல்ட்மனுடன் பாதுகாப்புச் செயலாளர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்னவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, தேசிய நல்லிணக்க செயற்பாடுகள் உட்பட காணி விடுவிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், நல்லிணக்க முன்னேற்ற செயற்பாடுகள் மற்றும் அதன் தற்போதைய நிலை தொடர்பாகவும் பெல்ட்மனிற்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பெல்ட்மன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது செயலாளர் நாயகம் ஜெப்ரியுடன், ஆசியா மற்றும் பசுபிக் தலைவர் திருமதி மாரியமாஷிதா, அமெரிக்க, இலங்கை ஆகிய நாடுகளுக்கான நல்லிணக்க மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் திருமதி கீதா சபர்வால் மற்றும் யூஎஸ்டி. டி.பி.ஏ. செயலாளர் திருமதி மாறி சாக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி ஜெப்ரி பெல்ட்மன் ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் பதவியை ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அமைச்சின் சிரேஷ்ட மற்றும் முப்படை அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985RC<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L/ பெல்ஜியம் PR<br>தொ.இ: B/8325 | பிறப்பு: 1994RC<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/8335 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/8326 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 44<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தொண்டர் ஆசிரியர்<br>தொ.இ: G/8345 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/சுவிஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/8328 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 16 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8347 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 11 செவ் 2 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/8329 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: 68<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MSc/ பொறியியலாளர் கனடா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8348 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இராசி பலன்

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**மேடம்:** கணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, அமைதிக் குறைவான நாள்.

**மிதுனம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

| சுக் புத | | | |
| --- | --- | --- | --- |
| சூரி | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி- பரணி | | ராகு |
| கேது | | | |
| சனி, செவ், சந் | குரு | | |

11.03.2018
மாசி 27, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
நவமி முற்பகல் 10.22 மணிவரை
மூலம் காலை 8.07 மணிவரை
சுபநேரம் 9.23-10.53 மணிவரை
இராகுகாலம் 4.53-6.23 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம்.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்புண்டு.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் அருங்காட்சியகம் நேற்றுத் திறப்பு


















யாழ்.போதனா வைத்தியசாலையின் வரலாற்றை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தும் அருங்காட்சியகம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் திறந்துவைக்கப்பட்டது.


யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி ரி.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி.தயாரதி சிவரட்ணமும் கௌரவ விருந்தினராக இருதயநோய் சிரேஷ்ட வைத்தியநிபுணர் பேராசிரியர் எஸ்.நிதர்சன், அவுஸ்திரேலிய கோல்ட்கோஸ்ட் வைத்தியசாலையின் புற்றுநோயியல்துறைத் தலைவர் பேராசிரியர் யசோதா சண்முகராசா,யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் வைத்தியசாலை பணியாளர்கள், ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்: உ-ாளின்)

# அன்று தமிழ் மக்களுக்கு நடந்தது இன்று முஸ்லிம் மக்களுக்கு நடக்கிறது

## வன்முறைச் சம்பவங்கள் குறித்து வடக்கு முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)



**அன்று அப்பாவித் தமிழ் மக்களுக்கு நடந்தது இன்று அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு நடக்கின்றது. இதற்கு அரசியல் உள்ளீட்டையே நான் குறைகூறுவேன் என அண்மையில் நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வாரத்திற்கு ஒரு கேள்விக்கு முதலமைச்சர் பதிலளித்து வருகிறார். அதன்படி:

**கிழக்கு மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் நடைபெற்று வரும் வன்செயல்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?**

**பதில்:** இவ்வாறான வன்செயல்கள் இலங்கையில் புதிதல்ல. பெரும்பான்மையினத்தினர் சிறுபான்மையினத்தினர் மீது கட்டவிழ்த்து விடும் வன்செயல்களே இவை என்பதிலும் பார்க்க நான் வேறு கோணத்தில் இருந்தும் பார்க்கின்றேன்.

குற்றம் புரிந்தவர்களை அல்லது குற்றம் புரிந்ததாகச் சந்தேகப்படுபவர்களை சமுதாயமானது, நீதி, சட்டம் போன்றவற்றின்கண்கொண்டு பார்க்க வேண்டுமேயொழிய சாதி, சமூக, மத, மொழி வாரியான கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடாது. இரு இளைஞர்கள் சேர்ந்து இன்னொரு இளைஞரைக் கொலை செய்தார்கள் என்பதே தகனவிலிருந்து நாம் கேட்ட செய்தி. உடனே பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? கொன்ற இளைஞர்கள் முஸ்லிம்கள் என்பதும், கொல்லப்பட்டவர் சிங்களவர் என்றும் கதை பரவியதால் இளைஞர்களுக்கிடையில் நடைபெற்ற மோதல் இனங்களுக்கிடையில் நடைபெற்ற மோதலாகச் சித்திரிக்கப்பட்டு இன முறையிலான போராட்டமாக மாறியது. இவ்வாறான செயல்கள் நடக்காதா என்று ஏங்கியிருந்தவர்களுக்கு இது கொழுக்கட்டை கொடுத்ததாக ஆகிவிட்டது. குற்றவாளிகளை அவர்களின் இனத்தவர் எமது மக்கள் என்றோ எம்மவர் என்றோ எண்ணி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அது இன முறுகல்களையும், மோதல்களையும், கோபதாபங்களையும் உண்டாக்குகின்றன.

நடந்து முடிந்த வட- கிழக்கு மாகாணப் போரில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் நம்மவர்கள் என்று உயர் அரசியல்வாதிகள் அடையாளப்படுத்தியதால்தான் இன்று நிலைமை சர்வதேச மட்டத்திற்குச் சென்றிருக்கின்றது.

இராணுவமோ, கடற்படையோ, விமானப்படையோ தம்முள் குற்றம் இழைத்தவர்களைத் தாமே இனம் கண்டு அவர்களைத் தமது படைகளில் இருந்து நீக்கி அப்போதே தண்டனைக்குள்ளாக்கியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததற்குக் காரணம் அரசியல் உள்ளீடுகளே.

நடப்பது என்ன? சட்டத்தையும் ஒழுங்கையும் நாட்டில் சமாதானத்தையும் நிலைநாட்ட அல்லது உருவாக்க வேண்டியவரான ஜனாதிபதி கூட குற்றஞ் செய்தோரைத் தமது இனத்துடன் அடையாளப்படுத்தி அவர்களை ஒரு போதும் தண்டனை அனுபவிக்க விடமாட்டேன் என்று வெளிப்படையாகக் கூறி வந்துள்ளார், கூறி வருகிறார்.

எனவே குற்றம் புரிந்தவன் என்ன் நினைக்கின்றான்? நான் எது செய்தாலும் எனக்கு ஜனாதிபதியும், அரசாங்கமும், அரசியல்வாதிகளும் உடந்தையாக இருப்பார்கள். ஆகவே தொடர்ந்து நான் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வரலாம் என்று சிந்திக்கின்றான்.

பொலிஸார் என்ன நினைக்கின்றார்கள்? நாம் அரசியல்வாதிகள் நினைப்பது போல் அல்லது கோருவது போல் செயற்பட்டால் எமது உத்தியோக வாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும் நன்மை பெறலாம். சட்டத்தைக் கடைப்பிடித்து நடந்தோமானால் அரசியல்வாதிகள் எம்மை தண்ணியில்லாக் காட்டுக்கு அனுப்பிவிடுவார்கள் என்றே சிந்திக்கின்றார்கள்.

எனவே அரசியல்வாதிகளின் ஒரு தொலைபேசி அழைப்புப் போதும் பொலிஸார் தமது கடமையைச் சட்டப்படி செயற்படுத்தாதிருக்க!

அரசியல் ரீதியாக சிலர் சந்தர்ப்பங்களையும் தருணங்களையும் எதிர்பார்த்திருந்ததையும், எதிர்பார்த்திருப்பதையும் நாம் உணர வேண்டும். 1983இல் வடமாகாணத்தில் யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட செல்லக்கிளி சம்பந்தமான ஒரு நிகழ்வு நடக்க அவ்வாறான செயல்களை எதிர்பார்த்திருந்த ஒரு தெற்கத்தையக் குழுவினர் உடனே கொழும்பு பொரளையில் செயற்படத் தொடங்கி விட்டார்கள். பொரளையிலும் அரசியல் பேசியது. அரசியல்வாதிகள் தெரிந்தும் தெரியாதது போல் வாழாதிருக்க பொலிஸார் முன்னிலையிலேயே அனர்த்தங்கள் நிகழ்ந்தன. பல வீடுகள் சூறையாடப்பட்டன, கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன, அவை தீ வைக்கப்பட்டன. தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் எத்தனையோ நிகழ்வுகள் பொரளையில் இருந்து தொடர்ந்து மேல் மாகாணம் பூராகவும் நடந்தன. அதற்கப்பாலும் நடந்தன. பொரளையில் இவ்வாறான ஒரு நிகழ்வு நடந்ததெனத் தெரிந்தவுடன் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். எடுக்கவில்லை. எடுக்காததற்குக் காரணம் அரசியல்வாதிகளின் குறுக்கீடு.

அன்று அப்பாவித் தமிழ் மக்களுக்கு நடந்தது இன்று அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு நடக்கின்றன. இதற்கு அரசியல் உள்ளீட்டையே நான் குறை கூறுவேன்.

அன்று தமிழ் மக்கள் அரச சேவையில் பெரும்பாலும் இணைந்துள்ளார்கள் என்பதால் "சிங்களம் மட்டும்" சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததும் 1958ம் ஆண்டின் கலவரங்கள் வெடித்தன. தமிழ் மக்கள் தமது ஆற்றாமையால் 1976ம் ஆண்டில் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தைக் கொண்டு வந்ததால் அதன் எதிரொலியாகவே திட்டமிட்டு 1983ம் ஆண்டில் கலவரங்கள் காடையர்களால் முடுக்கி விடப்பட்டன. பின்னணியில் அரசியல்வாதிகள் இருந்தனர். 1981ஆம் ஆண்டு யாழ். நூலகம் எரிந்த போதும் அரசியல்வாதிகளே காரணமாக இருந்தார்கள். ஒரு அரசியல்வாதி மதுபோதையில் யாழ். அரச விடுதியில் இருந்து கொண்டு "முள்ளந்தண்டு நிமிர்ந்த ஒரு சிங்களவனாவது இங்கில்லையா?" என்று சிங்கள மொழியில் கேட்டிருக்கின்றார். உடனே இராணுவ வீரர்கள் சிலர் போய் யாழ். நூலகத்திற்குத் தீ வைத்திருக்கின்றார்கள். எனக்கு இதை அடுத்த நாட்காலை சாவகச்சேரி பொலிஸார் (சிங்களப் பொலிஸ் அத்தியட்சகர்) கூறினார். நான் அப்போது சாவகச்சேரி மாவட்ட நீதிபதி.

இன்று முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதன் காரணம் இரண்டு என நினைக்கின்றேன். ஒன்று முஸ்லிம் சகோதரர்கள் வாணிபத்தில், வணிகத்தில் கொடிகட்டிப் பறக்கின்றார்கள். அதனை தொடர்ந்து நடக்க விடப்படாது. அன்று தமிழர்கள் அரச சேவையில் கொடிகட்டிப் பறக்கின்றார்கள். விடக் கூடாது என்று நினைத்தார்கள். இன்று முஸ்லிம்கள் வாணிபத்தில் கொடிகட்டிப் பறக்கின்றார்கள் என்று ஆதங்கம். அதனால் தான் அவர்களின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. அடுத்த காரணம் சனப்பெருக்க வீதம் சுமார் 5 சதவீதமாக முஸ்லிம் மக்கள் பெருகி வர, சிங்களவரின் பெருக்கம் சுமார் 2 சதவீதம் என்றும் தமிழ் மக்களின் ஜனப் பெருக்கம் 1 சதவீதம் என்றும் கூறப்பட்டு வருகிறது. அதற்கேற்றாற் போல் சில அரசியல்வாதிகள் 2040ல் நாமே இலங்கையின் பெரும்பான்மையினர் என்று வெளிப்படையாகக் கூறி வருகின்றார்கள். தற்போது பொருளாதார ரீதியாக முஸ்லிம் சமூகம் பாதிப்படைந்துள்ளது. இறப்புக்கள் அதிகமில்லை. தொடர்ந்து இவ்வாறான செயல்கள் முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராக வருங்காலத்தில் நடைபெறப் போகும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அடுத்த முறை உயிர்ச்சேதம் வெகுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இவ்வாறான செயல்கள் இனப் பிரச்சினையாக மாறாதிருக்க பொலிஸார் போதிய பயிற்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் பொலிஸ் படையினர் அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இயங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சுதந்திரமான பயிற்சி பெற்ற பக்கச் சார்பற்ற பொலிஸ் படையினரை நாம் உருவாக்க வேண்டும். ஒரு கூட்டுத்தாபன அந்தஸ்தில் பொலிஸ் படை இயங்க நாம் ஆவன செய்ய முடியாதா என்று பரிசீலித்துப் பார்க்க வேண்டும். கொள்கைகளை அரசாங்கம் பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப்படுத்தலாம். நடைமுறைப்படுத்தல் அவர் வசமும் மற்றைய உப பொலிஸ் அதிபர்கள் வசமும் இருக்க வேண்டும். தேர்தல் ஆணையாளர் போன்று சுதந்திரமாக பொலிஸ்மா அதிபர் நடந்து கொள்ள இடமளிக்க வேண்டும்.


யாழ். நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் 80களில் ஒரு கொலை நடைபெற்றது. ஒரு கிராமத்தில் நடந்த சாதிச் சண்டையினுள் தன் நண்பனைக் காப்பாற்ற உள் நுழைந்த இரு சாதியருக்குஞ் சம்பந்தப்படாத, ஒருவர் தற்பாதுகாப்பாக அவர்களுள் ஒருவரைக் கொன்று விட்டார். பார்த்த சாட்சியங்கள் இருந்தன. பாவிக்கப்பட்ட கத்தி பொலிஸாருக்குக் கிடைத்திருந்தது. சந்தேக நபர் நீதவான் முன்னிலையில் ஆஜராக்கப்பட்டார். பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று சந்தேக நபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். நீதவான் தன் முன்னிருந்த சந்தேக நபர் தனது நெருங்கிய சொந்தக்காரர் என்பதை அடையாளம் கண்டிருந்தார். விளக்க மறியலில் வைத்த பின் அரசியல்வாதிகள், உறவினர்கள், சட்டத்தரணிகள், நண்பர்கள் என்று பலர் சந்தேக நபருக்கு பிணை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். எதற்கும் அசையவில்லை நீதவான். ஆறு மாதங்களுக்கு விளக்க மறியலில் இருந்த கைதியை ஆறு மாதங்களுக்குப் பின்னர் அரச பகுப்பாளர் அறிக்கை கிடைத்த பின் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார். வெளிவந்த ஒரு வாரத்தினுள் கைதி கொலை செய்யப்பட்டார். உண்மையில் அதுவரையில் குறித்த கைதியை நீதிபதிதான் உயிருடன் இருக்க உதவினார் என்று கூடக் கூறலாம்.

அரசியல்வாதிகளின் அல்லது உறவினர்களின் கோரிக்கையைக் கேட்டு முன்னரே பிணை அளித்திருந்தால் கைதி ஏற்கனவே கொலை செய்யப்பட்டிருப்பார் என்று கொள்ள இடமிருக்கின்றது. ஆனால் சாதிச் சண்டையும் தீ மூட்டலும் உருவாகாது தடுத்தார் நீதிபதி.

வன்செயல்கள் உருவாக அரசியலும் அரசியல்வாதிகளுமே காரணமாக இருக்கின்றார்கள் என்பதே என் கருத்து. வருங்காலத்தில் தமிழர்களுக்கு ஏற்பட்டது போன்று மீண்டும் மீண்டும் இவ்வாறான கலவரங்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. தமிழர்கள் போன்று முஸ்லிம் மக்களும் சிங்களப் பிரதேசங்களில் இருந்து மேலும் மேலும் துரத்தப்படுவார்கள். இதற்காகத் தான் நாடு பூராகவும் சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சி உரித்தை ஒன்பது மாகாணங்களுக்கும்வழங்க வேண்டும்என்றுகேட்டுவருகின்றேன்.

அப்பொழுது தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களில் பெரும்பான்மையினர் கொடுமைகள் நடக்கமாட்டா. ஆனால் தமிழரோ, முஸ்லிம்களோ, மலையகத் தமிழரோ தம் மத்தியில் வசிக்கும் சிங்கள மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# சிங்களப் பேரினவாத அரசின் பௌத்த மதத் தீவிரவாதத்தை புரிந்து கொள்ள வேண்டும்



## உலகநாடுகளிடம் சீமான் வலியுறுத்து

(சென்னை)

இலங்கையில் வாழும் இஸ்லாமியத் தமிழர்களின் பாதுகாப்பான வாழ்க்கையினை உறுதிப்படுத்த வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பூர்வக்குடிகளான தமிழர்கள் மீது வன் முறையையும், காட்டுமிராண்டித்தனத்தையும் எப்போதும் கட்டவிழ்த்து விட்டு வேடிக்கை பார்க்கும் சிங்களப் பேரினவாத அரசு தற்போது இலங்கையில் வாழும் இஸ்லாமியத் தமிழர்களையும் திட்டமிட்டுத் தாக்கத் தொடங்கியிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்ட இனத்துவேசத் தாக்குதலையும், வன்முறை வெறியாட்டத்தையும் போல மீண்டும் ஒரு கலவரத்தை ஏற்படுத்த முனைந்து வருவது கண்கூடாகத் தெரிகிறது.

அம்பாறையில் உள்ள ஒரு உணவகத்தில் தொடங்கப்பட்ட இவ்வன்முறை வெறியாட்டம் பள்ளிவாசல் மீது தாக்குதல், இஸ்லாமியர்களின் உடைமைகளைச் சேதப்படுத்துதல் என நீண்டு இஸ்லாமியத் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களாக சிங்களப் பேரினவாதிகளால் மாற்றி நிறுத்தப்பட்டிருக்கிறது.

அம்பாறையில் தொடங்கிய இவ்வன்முறை வெறியாட்டமானது பிறகு கண்டி மாவட்டத்தில் பெரும் கலவரமாக உருவெடுத்திருக்கிறது.

கண்டியின் திகன பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் மற்றும் இஸ்லாமியர்களின் வணிக வளாகங்கள் மீது திட்டமிட்ட கோரத்தாக்குதலைத் தொடுத்து மீண்டும் ஒரு இனக்கலவரத்தை உண்டாக்கி யிருக்கின்றனர்.

புத்த பிக்குகள் தலைமையில் நடைபெற்ற இவ்வன்முறை வெறியாட்டத்தில் இஸ்லாமிய தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்பதன் மூலம் இக்கலவரத்தின் வீரியத்தை அறிந்து கொள்ளலாம்.

சிங்களப் பௌத்த மதவெறி அமைப்புகள் இப்பிரச்சினையை ஊதிப் பெரிதாக்கி அதன்மூலம் இஸ்லாமியர்கள் மீதான தங்களது இனத்துவேசத்தையும், வன்மத்தையும் வெளிக் காட்டியிருக்கின்றன.

கடைகளும், பள்ளிவாசல்களும் பெருமளவு தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டிருக்கின்றன. இதனையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டிய இலங்கை அரசின் பாதுகாப்புப்படையினரோ கலவரக்காரர்களுக்கு ஆதரவாக இருந்திருக்கின்றனர்.

சிங்களப் பௌத்தத் தீவிரவாத நாடான இலங்கையின் இஸ்லாமியத் தமிழர்களுக்கு எதிரான இக்கொடுங்கோல் போக்கைக் கண்டித்து கிழக்கு மாகாணத்திலுள்ள இஸ்லாமியத் தமிழர்கள் கடையடைப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவிருந்த நிலையில்தான் அவசர நிலையினை பிரகடனம் செய்திருக்கிறது இலங்கை அரசு.

அதன்பிறகும்கூட இஸ்லாமியத் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதன் மூலம் இவை யாவும் தமிழர்கள் மீதான சிங்களப் பயங்கரவாத அரசின் திட்டமிட்ட தொடர்தாக்குதல்கள் என்பது ஐயமின்றி புலனாகிறது.

இலங்கையில் இஸ்லாமியத் தமிழர்கள் மீது தாக்குதல் தொடுத்து வரும் கலவர க்காரர்களையும், இனத்துவேச நடவடிக்கையில் ஈடுபட்டு கலவரத்தை உருவாக்கும் சிங்கள இன வெறி அமைப்பினரையும் உடனடியாகக் கைது செய்ய வேண்டும் எனவும், இலங்கையில் வாழும் இஸ்லாமியத் தமிழர்களின் பாது காப்பான வாழ்க்கையை உறுதிப் படுத்த வேண்டும் எனவும் வலியுறு த்துகிறேன்.

இஸ்லாமியத் தமிழர்கள் மீதான தாக்குதலுக்கு எதிராக இந்திய அரசும், சர்வதேச சமூகமும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோருகிறேன்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் தமிழர் சுய நிர்ணய போராட்டத்தை ஒடுக்கிய சிங்கள அரசை ஆதரித்த உலக நாடுகள் இனியேனும் அவர்களின் பௌத்த மதத் தீவிரவாதத்தை புரிந்து கொள்ளவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை உறுதிசெய்ய ஜப்பான் கடற்படை முழுமையான ஆதரவு வழங்கும்



(கொழும்பு)

இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கு ஜப்பானிய கடற்படை முழுமையான ஆதரவை வழங்கும் என ஜப்பானிய பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி அட்மிரல் கட் சுரோஷி கவானா, உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அட்மிரல் கட்சுரோஷி கவானா நேற்று முன்தினம் இலங்கை ஜனா திபதி மைத்திரிபால சிறி சேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி இல்லத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம் பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை கடற் படையினருக்கு ஜப்பானில் பயிற்சி வாய்ப்புக்களை அதிகரிக்குமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கையையும், அட்மிரல் கட்சுரோஷி கவானா ஏற்றுக் கொண்டுள்ளார்.

போதைப்பொருள் கடத் தலைத் தடுக்கும் வழிமுறை கள் குறித்தும் கலந்துரையா டப்பட்ட இந்தச் சந்திப்பின்போது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தொழில்நுட்ப அறிவைப் பரிமாறிக் கொள் வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இலங்கை வந்துள்ள ஜப்பானிய பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி அட்மி ரல் கட்சுரோஷி கவானா நேற்று முன்தினம் இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று பாது காப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவையும் சந்தித்தார்.

மேலும், கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்னவுடனும், அவர் பேச்சுவார்த்தை மேற்கொண்டார். (7-10)

# பாதாள உலகக்குழு உறுப்பினர்களின் சிவப்பு எச்சரிக்கை பிடியாணை ரத்து

(கொழும்பு)

பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 17 பேருக்கு எதிரான இன்டர்போலின் சிவப்பு எச்சரிக்கை பிடியாணை ரத்துசெய்யப்பட்டுள்ளது.

பாதாள உலகக்குழு உறுப்பினர்களுக்கு எதிராக கடந்த எட்டு ஆண்டுகளாக சிவப்பு எச்சரிக்கை பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இத்தாலி, பிரிட்டன், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சுவிட்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் இந்த பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவப்பு எச்சரிக்கை பிடியாணை ரத்து செய்யப்பட்டுள்ளதனால் இவர்களை அந்தந்த நாடுகளின் பொலிஸார் கைது செய்யவில்லை.

இதற்கு முன்னதாக 87 தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான சிவப்பு எச்சரிக்கைகள் ரத்தாகியிருந்தன.

அரசாங்கத்தின் கோரிக்கை மற்றும் குறித்த நபர்கள் உயிரிழத்தல் ஆகிய காரணிகளின் போது இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை ரத்தாகும் என இன்டர்போல் தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கை பொலிஸாரிடம் குறித்த நபர்கள் மரணித்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் ஏதும் இதுவரை கிடைக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (7-10)

# பாடசாலையின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்துகொள்வார். (10)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நிலைய மண்டபத்தில் தலைவர் ந.சிவராசா தலைமையில் இடம்பெறும். (10)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 45 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 63 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 52 | 70 | 80 | 70 |
| தக்காளி | 40 | 30 | 20 | 30 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 30 | 30 | 70 | 60 | 70 |
| கரட் | 90 | 100 | 80 | 100 | 120 | 70 |
| பூசணி | 80 | 40 | 35 | 40 | 60 | 50 |
| புடோல் | 60 | 80 | 30 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 67 | 80 | 80 | 120 |
| பாகற்காய் | 120 | 140 | 45 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | — | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 35 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 140 | 200 | 110 | 140 | 160 | 160 |
| பீற்றூட் | 40 | 60 | 30 | 50 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 70 | 100 | 100 | 150 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 450 | 550 | 800 | 600 |
| போஞ்சி | 80 | 140 | 70 | 220 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | — | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 30 | 70 | 80 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 35-90 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 200 | — | 170 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 80 | 70 | 100 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 50 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 60 | 40 | — | 60 | 80 | 70 |

# கண்டிக் கலவரங்களுக்கு அமைச்சர் ஒருவரே காரணம்

## வாசுதேவ எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

கண்டியில் இடம் பெற்ற கலவரங்களுக்கு தற்போதைய அரசாங்கத்தில் உள்ள பிரபல அமைச்சர் ஒருவரே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும், மஹாசேன பலகாய அமைப்பிற்கு ஆதரவுகளை வழங்கி நாட்டில் கலவரங்களை ஏற்படுத்தும் நோக்கத்தில் 'குறித்த அமைச்சரே செயற்பட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று இனவாத செயற்பாடுகளுக்கு காரணமானவர் எனக் கருதப்படும் அமித் வீரசிங்கவிற்கு உத்தரவுகளை பிறப்பித்து அவரை இயக்கியதும், அரசாங்கத்தில் உள்ள அமைச்சரே எனவும், இந்த விடயங்கள் புலனாய்வுப்பிரிவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விரைவில் இந்த கலவரங்களுடன் தொடர்புடைய அமைச்சர் தொடர்பான உண்மைகளை நாட்டுக்கே அம்பலப்படுத்த தான் தயாராக இருப்பதாகவும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கண்டியில் இடம்பெற்ற முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் வன்முறைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரே காரணம் என அமைச்சர் ராஜித சேனாரட்னவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கூறியிருந்தனர்.

எனினும் குறித்த வன்முறைகளுடன் எந்தவொரு அரசியல்வாதியும் சம்பந்தப்படவில்லை என சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் தற்போது குறித்த வன்முறைகளுக்கு அரசாங்கத்தில் உள்ள அமைச்சரே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பலரும் பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றமை அரசியல் ரீதியிலான செயற்பாடுகளா? என அரசியல் அவதானிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தவை பழிவாங்க போவதில்லை சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவையோ அல்லது வேறு தரப்பினரையோ தாம் பழிவாங்கப் போவதில்லை என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

குற்றம் இழைத்திருந்தால் தராதரம் பார்க்காது தண்டனை விதிக்கப்படும்.

எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளை பழிவாங்குவதனை விடவும் குற்றம் இழைத்தவர்களை தண்டிப்பதே நோக்கமாக அமைந்துள்ளது.


மனச்சாட்சிக்கு அமைய சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மிகச் சிறந்த சேவையை வழங்கி வருகின்றனர். அவர்களை மேலும் மேலும் ஊக்கப்படுத்த வேண்டியது அவசியமானது.

இந்த அதிகாரிகள் உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் ஒரு சிலர். களங்கம் கற்பிக்கவும் செய்கின்றனர் என்பதனை மறுப்பதற்கில்லை.

வன்முறைகளை தூண்ட முயற்சிக்கும் அனைவரையும் தராதரம் பாராது தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# அறுவடைக்குத் தயாரான நெற்பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கி முற்றாக சேதம்



(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நேற்றுக்காலை பெய்த கன மழையால் அறுவடைக்கு தயாராகவிருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர். (7-10)

# புலம்பெயர் தமிழர்கள் இலங்கை சொத்துக்களை கையகப்படுத்த முயற்சி

## இராவணா பலய விசமம்



(கொழும்பு)

இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் தற்போது இலங்கையின் சொத்துக்களை கையகப்படுத்தும் முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளதாக சிங்கள பௌத்த பேரினவாத அமைப்புக்களில் ஒன்றான இராவணா பலய அமைப்பு தெரிவித்துள்ளது.

புலம்பெயர் தமிழர்களின் இந்த சூழ்ச்சிகளுக்கு தற்போதைய மைத்திரி -ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் ஒரு தரப்பே துணை போவதாகவும் குற்றம்சாட்டியுள்ள இராவணா பலய அமைப்பின் தலைவர் இத்தகந்த சத்தாதிஸ்ஸ தேரர், ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு இந்த சதியை முறியடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டில் தற்போது அமைதி நிலவுவதால் அதிகமாக முதலிட முன்வருமாறு புலம்பெயர் தமிழர்கள் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன-பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக அறைகூவல் விடுத்துவரும் நிலையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட சிங்கள பௌத்த பேரினவாத அமைப்புக்களில் ஒன்றான இராவணா பலய அமைப்பின் தலைவர் இந்த கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# வீட்டின் கதவை உடைத்து பணம், நகைகள் திருட்டு

(மல்லாவி )

மல்லாவி திருநகர் கிராமத்தில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் வீட்டார் வழிபாட்டிற்காக ஆலயத்திற்கு சென்றிருந்த வேளை வீட்டின் பின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் சுமார்72, ஆயிரம் ரூபா பணம் 23, பவுண் நிறையுடைய தங்க நகைகள், இலத்திரனியல் பொருட்கள் உட்பட பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிக் கொண்டு திருடிச் சென்றுள்ளதாக வீட்டின் உரிமையாளரினால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மல்லாவியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றி வரும் திருநகர் கிராமத்தில் வசிக்கும் ஆசிரியர் ஒருவர் தனது குடும்பத்தினருடன் வவுனிக்குளத்தில் உள்ள அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயத்திற்கு சென்றுள்ளார்.

இதனை அவதானித்த திருடர்கள் வீட்டின் பின்புறம் உள்ள கதவை உடைத்துக் கொண்டு உள் நுழைந்து அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பணம், நகை மற்றும் இலத்திரனியல் பொருட்களையும் திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப் பெற்றதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் தடயவியல் நிபுணர்களின் உதவியுடன் தடயங்களைச் சேகரித்துடன், புலன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# இந்திய நிறுவனத்திடம் வைத்தியசாலை சலவைப்பணிகள்

## அரச வைத்தியர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளின் ஆடை சலவை செய்யும் பணிகளை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு பாரப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான பணியாளர்கள் தமது தொழில்களை இழப்பார்கள் எனவும் அந்த சம்மேளனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சம்மேளனத்தின் பேச்சாளர் வைத்திய கலாநிதி சமந்த ஆனந்த இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில்,

சுக்ரன் வைத்தியசாலை சொலுசன் என்ற நிறுவனத்துக்கே இந்த பணிகள் பாரப்படுத்தப்படவுள்ளன.

இதற்காக 7.5 மில்லியன் டொலர்கள் செலவாகின்றன. இந்தநிலையில் ஜனாதிபதி இது தொடர்பில் தலையிட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (இ-7)

# மாடிக்கட்டடத்திற்கு வர்ணம் தீட்டியவர் கீழே விழுந்து மரணம்



(மருதமுனை)

மருதமுனை பிரதான வீதியிலுள்ள வீடு ஒன்றில் வர்ணம் பூச மாடி வீட்டின் உயரத்திற்கு ஏறிய ஒருவர் நேற்று சனிக்கிழமை தவறுதலாக கீழே விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மருதமுனை பிரதான வீதியிலுள்ள வீடு ஒன்றில் வர்ணம் பூச வேலைக்கு வந்த பாண்டிருப்பு-02 ஐ சேர்ந்த ஆறுமுகம் தயாபரன் (வயது 56) என்பவர் வர்ணம் பூசிக் கொண்டிருந்த போது தவறுதலாக உயரத்திலிருந்து கீழே விழுந்து ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பாதுகாப்பற்ற முறையில்மாடி வீட்டின் உயரத்தில் நின்று கொண்டு வேலை செய்தமையாலயே இந்த பரிதாபகரமான விபத்து நேர்ந்துள்ளதாக அறிய முடிகிறது. (இ-7)

# பெற்ற குழந்தையை விற்ற தாய் கைது

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் குழந்தை திருட்டுப்போனதாக தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த குழந்தை அநுராதபுரத்தில் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் குழந்தையை பெற்ற தாயாரே தனது குழந்தையை விற்றுவிட்டு திருட்டு போய்விட்டதாக நாடகமாடியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் குறித்த குழந்தையின் தாயாரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அநுராதபுரத்தில் மீட்கப்பட்ட குழந்தையுடன் குழந்தையை வாங்கியவர் என சந்தேகிக்கபடும் பெண்மணி ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் இருவரையும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (2-250)

# சிங்கள மக்களின் மனங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அச்ச உணர்வே வன்முறைக்குக் காரணம்!

## ஜே.வி.பி. எம்.பி.பிமல் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சிங்கள மக்களின் மனங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவையற்ற அச்சமே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்குக் காரணமாகியிருப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வணிக கப்பற்தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சிங்கள இளைஞர் உயிரிழந்தமையே திகன வன்முறைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. எனினும், உயிரிழந்த இளைஞரின் கிராமத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக எந்தவொரு வன்முறையும் இடம்பெறவில்லை.

2000ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நாட்டை ஒரு நிலைக்குக் கொண்டு வருவதற்கு மக்கள் மூன்று சந்தர்ப்பங்களை வழங்கியிருந்தனர். முதலாவது சந்தர்ப்பம் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் பின்னரான நிலைமையாகும்.

இதனால் நாட்டுக்கு பாரிய அழிவு ஏற்பட்டிருந்தாலும் நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கு சகலரும் இலங்கையர் என்ற ரீதியில் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு வழி ஏற்படுத்தியிருந்தனர்.

அதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர் இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. எனினும், தனது அதிகார மோகத்தினால் அதனைத் தவறவிட்டிருந்தார்.

2015ஆம் ஆண்டு மற்றுமொரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. மக்களால் வழங்கப்பட்ட ஆணையும் இந்த ஆட்சியாளர்களால் நிறைவேற்றவில்லை. எமது நாட்டு மக்கள் 13 வருடங்களில் நாட்டை தேசிய ரீதியில் ஓரிடத்துக்குக் கொண்டுவந்து முன்னேற்றிச் செல்லுவதற்கான சந்தர்ப்பத்தை மூன்று தடவைகள் வழங்கியிருந்தார்கள்.

ஆனால் எத்தனை சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டாலும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல தம்மால் முடியாது என்பதை ஆட்சியாளர்கள் நிரூபித்துள்ளார்கள்' என பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இனவாத மோதல்களால் ஆபத்தான கட்டத்தில் 10லட்சம் இலங்கையர்கள்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத மோதல்கள் தொடர்ந்தும் அதிகரித்தால் பல இலட்சம் பேருக்கு ஆபத்தாக முடியும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைப்பாடு காரணமாக மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளில் தொழில் புரியும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மிகப் பெரிய ஆபத்தை எதிர்நோக்கக் கூடும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்த நிலைமை காரணமாக இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிந்து வருவதால், கிடைத்து வரும் 50 ஆயிரம் கோடி ரூபா அந்நிய செலாவணியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் தொழில் புரியும் நோக்கில் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை வருடந்தோறும் அதிகரித்து வருகிறது. இவர்களில் அதிகளவானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கே செல்கின்றனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டில் மாத்திரம் மூன்று இலட்சம் பேர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக சென்றுள்ளனர்.

10 இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மத்திய கிழக்கில் முஸ்லிம் நாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர். எனினும் இலங்கையில் முஸ்லிம்மக்களின் மொத்த எண்ணிக்கை 19 இலட்சத்து 67 ஆயிரத்து 523 என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனிப்பட்ட பிரச்சினைகளை யாரும் இனவாதமாக்குவது முட்டாள்தனம்

## கொழும்பு பேராயர் தெரிவிப்பு

இனங்களுக்கு இடையில் காணப்படும் பல்லின தன்மையை மதித்து சகலரும் நடந்துகொள்ள வேண்டும் என கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற சமய மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஆயர்,

மனிதர்களை கொல்வது தேசப்பற்றல்ல. அனைத்து மக்களையும் ஒன்றாக கட்டியெழுப்புவதே தேசப்பற்று. அனைவரும் சரிநிகர் சமமானவர்கள் என்று நினைக்க வேண்டும்.

அப்படி நினைக்க முடியாது என்றால், அது இயற்கைக்கு எதிரானது. நமது நாட்டில் பல இனங்கள் இருப்பது வலுவானது. அந்த பல்லினத்தன்மையை பாதுகாக்க வேண்டும்.

தனிப்பட்ட பிரச்சினைகளை இனவாத பிரச்சினைகளாக கருதி செயற்படுவது முட்டாள்தனம். புத்த பகவான் போதித்தது போல் அனைத்து மதங்களையும் மதிக்க வேண்டும்.

பெரும்பான்மை சமூகம், சிறுபான்மை சமூகங்களில் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். சிறுபான்மையினருக்கு பெரும்பான்மையினர் தொடர்பில் அச்சம் இருந்தால், அந்த அச்சத்தை போக்கி சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும் எனவும் கொழும்பு பேராயர் மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# வீதியில் பயணித்த வாகனம் தீக்கிரை



(கொழும்பு)

வாரியபொல - பாதெனிய - அநுராதபுர வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வாகனம் ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகி இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிற்றூந்து விபத்துக்குள்ளானதனை தொடர்ந்து, தீ பிடித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சாரதியால் சிற்றூந்தை கட்டுப்படுத்த முடியாது போனதால் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதுடன், சிற்றூந்து முழுமையாகச் சேதமடைந்துள்ளது. (இ-7)

# உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் அச்சிடும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்களின் பெயர் விபரங்களை அச்சிடும் பணிகள் இடம்பெறுவதாக அரசாங்க அச்சுத் திணைக்கள அதிபர் கங்கானி லியனகே தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவினால், நேற்று முன்தினம், குறித்த பெயர் விபரங்கள் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 340 உள்ளூராட்சிமன்றங்களுக்காக 8 ஆயிரத்து 689 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதை மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு பிற்போட்டிருப்பதாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும், குறித்த பணிகள் கடந்த 6 ஆம் திகதி மேற்கொள்ள முன்னதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய, உள்ளூராட்சி மன்றங்களை நிறுவும் பணிகள் பிற்போடப்பட்டதாக அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார். (7-10)

# உறைபனியில் புதைந்திருந்த மனிதக்கைகள் ரஷ்யாவில் மீட்பு





(மொஸ்கோ)

ரஷ்யாவில் காட்ரோவல்க் பகுதியில் இருந்த பனிக்கட்டி பையிலிருந்து 54 வெட்டப்பட்ட கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது.

ரஷ்யாவின் சீனா எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் ஆமூர் ஆறு அமைந்துள்ளது. அங்கு நிலவிவரும் கடும் குளிரால் ஆறு உறைந்து அதன் மீது பனிக்கட்டி படலங்கள் படர்ந்துள்ளன. பனிக்கட்டி படலத்தை கட்டுமான பணி ஒன்றுக்காக நேற்று முன்தினம் வெட்டி எடுத்துள்ளார்கள்.


அப்போது அங்கு பை கண்டெடுக்கப்பட்டுள்ளது. அந்த பையில் 54 வெட்டப்பட்ட கைகள் இருந்துள்ளன. அதாவது 27 ஜோடி கைகள் கண்டெடுக்கப்பட்டன. 27 கைகளில் பல கைகளில் கைரேகை அழிக்கப்பட்டு இருக்கிறது. ஒரு கையில் மட்டுமே கைரேகை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இந்த கைகள் யாருடையது, ஏன் வெட்டப்பட்டது என்று தெரியவில்லை. அதே போல் இந்த கைகளை வெட்டியது யார் என்ற விபரமும் இதுவரை வெளியாகவில்லை. எந்த காலத்தில் வெட்டப்பட்டது என்பதும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் அவை வெட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கும் குறைவாகவே இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கைகளை சோதனைக்காக கொண்டு சென்றுள்ளனர். இதுகுறித்து அந்நாட்டு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (10)

# இலங்கையில் இனவாதம் அவசியமில்லை

## இசுர தேவப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

இனவாதம், மதவாதம் எமது நாட்டுக்கு அவசியமில்லையென மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் உருவாகியுள்ள இனவாத பதற்ற நிலைமை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இந்நாட்டை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்பதற்கு சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய அனைவரும் இணைந்தே பாடுபட்டனர்.

இந்த நாட்டிலுள்ள சகலரும் மீண்டும் நாட்டைப் பிரித்துவிடாமல், சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் வாழுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# பாதசாரிகள் கடவையில் படுத்துக்கிடந்து பாராளுமன்ற உறுப்பினர் ஆர்ப்பாட்டம்







(கண்டி)

கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே பாதசாரிகள் கடவையில் படுத்து ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டுள்ளார்.

நாவலப்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்த ராஜபக்ஷவை இடமாற்றம் செய்யக்கோரியே நேற்று அதிகாலை 5 மணி முதல் இவ் ஆர்ப்பாட்டத்தில் அவர் ஈடுபட்டுள்ளார்.

கண்டி அட்டன் பிரதான வீதியின் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாலுள்ள பாதசாரிகள் கடவையில் படுத்த வண்ணமே மேற்படி ஆர்பாட்டம் இடம்பெற்றதால் குறித்த பகுதிக்கான போக்குவரத்து மாற்று பாதையினூடாக இடம்பெற்றதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தையடுத்து சம்பவ இடத்திற்கு கம்பளை மாவட்ட பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் வருகைத்தந்துள்ள போதிலும் நீதியை சரியாக கடைப்பிடிக்காத பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்யும் வரை ஆர்ப்பாட்டத்தை தொடரப்போவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே தெரிவித்தார். (இ-7)

# கண்டி கலவர களத்திற்கு பிரதமர் நேரில் விஜயம்







(கண்டி)

கண்டியில் வன்முறைகள் இடம்பெற்ற பகுதிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக்கிழமை காலை விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

பிரதமரின் இந்த விஜயத்தில் அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, ரவூப் ஹக்கீம் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கண்டியின் சில பகுதிகளுக்கு விஜயம் செய்த பிரதமர் உள்ளிட்ட குழுவினர், தாக்குதல் நடத்தப்பட்ட மற்றும் சேதங்களுக்கு உள்ளாகிய வர்த்தக நிலையங்கள், பள்ளி வாசல்கள், வீடுகளுக்கும் சென்று பார்வையிட்டனர். (இ-7-10)

# ஊவா மாகாண சபை குறைநிரப்புப் பிரேரணை நேற்று நிறைவேற்றம்

(கொழும்பு)

மகிந்த ஆதரவு அணியின் பலத்த எதிர்ப்பின் காரணமாக முடங்கிப்போயிருந்த ஊவா மாகாண சபை குறைநிரப்புப் பிரேரணை நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபையின் மேலதிக செலவுகளை ஈடுகட்டும் நோக்கில் கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி குறித்த குறைநிரப்புப்பிரேரணையொன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ உள்ளிட்ட மகிந்த ஆதரவு அணியினர் குறித்த குறைநிரப்புப் பிரேரணையை கடுமையாக எதிர்த்ததால் நிறைவேற்றிக் கொள்ள முடியாது போனது. இந்நிலையில் முதலமைச்சர் சாமர சம்பத் பிரேரணையை ஒத்தி வைத்தார்.

நேற்று மீண்டும் குறைநிரப்புப் பிரேரணை முன்வைக்கப்பட்டபோது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்களுடன் ஐ.தே.க. உறுப்பினர்களும் இணைந்து ஆதரவாக வாக்களித்ததால் குறைநிரப்புப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (7-10)

# நல்லூரில் யோகா பயிற்சி நெறியை யாழ்.யோகா உலகம் ஆரம்பிக்கிறது

யாழ்.யோகா உலகம் நல்லூர்த் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது. இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் க.சோதிதாசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் இறுதி ஆண்டு மாணவன் வி.ஆதவனின் யோகா பற்றிய கருத்துரையும் யாழ். யோகா உலகம் அமைப்பின் யோகா மாணவர்களின் யோகா அசைவுகள் Live Show நிகழ்வுகள் நடைபெறும்.

யோகா வகுப்புக்கள் காலை 6.00 மணி தொடக்கம் காலை 7.00 மணிவரையும் மாலைநேர வகுப்புக்கள் முறையே 4.30 மணி தொடக்கம் 5.30 மணிவரையும் மற்றும் 6.00 மணி தொடக்கம் 7.00 மணி வரையும் மேலும் இரவு 7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரையும் நான்கு பயிற்சிநெறிகள் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள் அனுபவம் உள்ள ஆசான்களால் நுணுக்கமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான யோகா மேலதிகப் பயிற்சிகள் பெண் ஆசிரியரால் கற்பிக்கப்பட்டு கையேடு, சான்றிதழ் என்பனவும் வழங்கப்படும்.

யோகா பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொள்வது அவசியமானது. ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சி நெறிகளில் இணைந்து பயனடைய முடியும் என்று யோகா உலகம் அழைப்பினர் அறிவித்துள்ளனர். (இ-7)

# கெஹலியவின் மகன் அதிரடியாகக் கைது!

(கொழும்பு)



முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெல நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நாரஹேன்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இவர் கடந்த 2016 ஆம் ஆண்டு கொழும்பு சுதந்திர சதுக்கப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்தி, விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகனான ரமித் ரம்புக்வெல இலங்கைக் கிரிக்கெட் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ்.குடாநாட்டின் எதிர்காலம் குறித்து இன்று விசேட உரை

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக்கூடம் எஸ்.எல்.என். ரூறிஸ்ரர் இணைந்து வழங்கும் அளிக்கையும் கலந்துரையாடலும் எனும் இரு தலைப்புக்களில் யாழ். குடாநாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியா? என்பது பற்றி இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் இல. 121 இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் எந்திர விவசாய பொறியியலாளர் மாவை நித்தியானந்தன் உரை நிகழ்த்துவார் தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் காங்கேசன்துறை வீதி மாவிட்டபுரம் மாவை பாரதி சனசமூக நிலையத்திலும் உரை நிகழ்த்துவார். (இ)


# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த பெப்ரவரி மாதத்தில் அதிகரித்துள்ளது.

இது 19 தசம் 3 சதவீத அதிகரிப்பாகும்.

சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் இருந்து கடந்த பெப்ரவரி மாதத்தில் 2 இலட்சத்து 35 ஆயிரத்து 618 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது. (இ-7)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியில் நேற்று முன்தினம் சிறார்களின் கணிதமொழி, சுற்றாடல் ஆற்றலை விருத்தியாக்கும் சந்தைச் செயற்றிட்டத்தை முன்பள்ளி பணிப்பாளர் திருமதி கர்ணி தடையாலன் திறந்து வைப்பதையும் சிறார்கள் பொருட்களை விற்பனை செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# இடியன் துப்பாக்கி வெடித்து இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மல்லாவி )

புளியங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள நெடுங்கேணி ஊஞ்சல் கட்டு பிரதேசத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இடியன் துப்பாக்கி வெடித்து சம்பவ இடத்தில் ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

புளியங்குளம் பகுதியில் வயல் ஒன்றிற்குள் பன்றியை வேட்டையாடுவதற்காகச்சென்ற குடும்பஸ்தர் பன்றிக்கு வைத்த வெடி வெடித்ததில் அதை இயக்கிய நபரான நெடுங்கேணியைச் சேர்ந்த சிதம்பரம் விஜய் (வயது-30) என்ற நபர் உயிரிழந்துள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸாரிற்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், சம்பவ இடத்தில் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியையும் மீட்டுள்ளனர். (2-250-15)




# கேரளக்கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா புதிய பேருந்து நிலைய்த்தில் இரண்டு கிலோ 800கிராம் நிறையுடைய கேரள கஞ்சாவுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம்குறித்து மேலும் தெரியவருவதாவது, வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இரண்டு கிலோ 800 கிராம் நிறையுடைய கேரள கஞ்சாவுடன் புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்த நுவான் தர்சன (வயது-38) என்ற நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250-15)

## சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய

# உணவகம், தேநீர்ச்சாலை உரிமையாளர்களுக்கு தண்டப்பணம்

(மல்லாவி )

பாண்டியன் குளம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள பாண்டியன் குளம் மற்றும் பாலிநகர் ஆகிய பகுதிகளில் சுகாதார விதி முறைகளை மீறி சுகாதார மற்ற வகையில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தமை உட்பட பல்வேறு சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகம் மற்றும் தேநீர்ச்சாலையினதும் உரிமையாளர்கள் மீது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி செல்வநாயகம் - லெனின் குமார் முன்னிலையில் முற்படுத்திய போது சந்தேக நபர்கள் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு 35, ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளதாக பாண்டியன்குளம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் ச.சர்மிலன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாண்டியன் குளம் பகுதியில் உள்ள உணவகங்களின் மீது பாண்டியன் குளம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்ட உணவகம் ஒன்றின் உரிமையாளர் மீது வழக்கு தாக்கல் செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய போது சந்தேகநபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து உணவக உரிமையாளருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், உணவகத்தின் குறைபாடுகளை சீர்படுத்தி பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆய்வின் பின்னர் உணவகத்தை மீளத்திறக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதே போன்று, பாலிநகர் பகுதியில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய தேநீர்ச்சாலையின் உரிமையாளர் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் அவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சுகாதார நலனை பாதிக்கும் வகையில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தமை தொடர்பாக மேலும் ஒரு தடவை நீதிமன்றத்தில் உணவகங்களின் உரிமையாளர்கள் முற்படுத்தப்பட்டால் அவர்களின் உணவகங்களின் வியாபார உரிமம் இரத்து செய்யப்படும் என நீதிபதியினால் எச்சரிக்கையும் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக பாண்டியன் குளம் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (2-15)

# குடிநீர் வழங்கும் நிலையம் திறப்பு





(குருமன்காடு)

வவுனியா நெடுங்கேணியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி வர்த்தக நிலையங்களை மையப்படுத்தியும் போக்குவரத்தில் ஈடுபடும் மக்களின் நலன்கருதியும் இந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நெடுங்கேணி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையாக இருந்த சிறுநீரகப் பிரச்சினையை கருத்திற் கொண்டு சுமார் பத்து இலட்சம் ரூபாவில் வவுனியா வடக்கு பிரதேச சபை மற்றும் ஜி.ரி. லிங்கநாதனின் வடமாகாண சபை குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன் தினம் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச சபையின் செயலாளர் க.சத்தியசீலன், செட்டிகுளம் பிரதேச சபை செயளாளர், வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு தெரிவான எஸ்.இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் 2018ஆம் ஆண்டுக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் டிஎம்.சுவாமிநாதன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோரது இணைந் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என பிரதேசசெயலாளர் ம.பிரதீபன் அறியத்தந்துள்ளார். (2)

# நடத்துநர்கள் மீது இளைஞர்கள் தாக்குதல்; சிற்றூர்தி உரிமையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு





(கண்டாவளை)

கிளிநொச்சி தனியார் சிற்றூர்தி உரிமையாளர்கள் நேற்றுக் காலை முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக முறிகண்டி தொடக்கம், பரந்தன் வரையில் சிற்றூர்தி சேவையை நம்பி போக்குவரத்து சேவையை பெற்றுக் கொள்ள வேண்டிய மக்கள் வீதிகளில் பெரும் சிரமங்கள் மத்தியில் காத்திருந்தனர். நீண்ட நேர காத்திருப்பின் பின்னர் வெளிமாவட்ட மற்றும் இ.போ.ச. பேருந்துகளில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர். போக்குவரத்து பாதிக்கப்பட்டமையால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதேவேளை குறித்த சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் அனைவரும் பரந்தன் பகுதியில் ஒன்றுதிரண்டு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர். இதன்போது குறித்த பகுதிக்கு பொலிஸார் வருகை தந்திருந்ததுடன், போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கைக்கமைய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்திருந்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பும், நேற்று முன்தினமும் தனிநபர்கள் குறித்த சேவையில் ஈடுபடும் நடத்துநர்களை தாக்கியதாக தெரிவித்தே பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 40 பேருந்துகள் குறித்த சேவையில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று அனைத்துப் பேருந்துகளும் சேவை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். தாக்குதல் நடத்தப்பட்ட நபர்கள் தொடர்பில் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்தே குறித்த போராட்டம் வலுப்பெற்றது.

இதன்போது பரந்தன் பகுதியில் குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என தெரிவிந்து அடையாளம் காட்டப்பட்ட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை தாம் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக சேவையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பேருந்தில் பயணிக்கும் பாடசாலை மாணவிகள் மீது தகாத முறையில் நடந்துகொள்ளும் இளைஞர்களை நடத்துநர் கண்டிக்க முற்பட்டபோதே இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிற்றூர்தி நடத்துநர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் தாம் அச்சுறுத்தலின் மத்தியில் சேவைகளை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளதாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் தமது வாக்குமூலங்களையும் அவர்கள் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-355-312)

# தீக்காயங்களுடன் குடும்பப்பெண் வைத்தியசாலையில் அனுமதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் சங்கிலியன் வீதி,உடையார்கட்டு தெற்கு மூங்கிலாற்றுப் பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்றில் கணவன்-மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்கு வாதத்தைத் தொடர்ந்து மனைவி மண்ணெண்ணெய் ஊற்றி தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 8ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கணவன் நித்திரையாக இருந்த சமயம் மனைவி உடலுக்கு மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதன்போது கணவன் நித்திரை முழித்து பார்த்தபோது மனைவி உடல் தீயினால் எரிவது தெரிந்துள்ளது.

இந்நிலையில் குறித்த பெண்ணின் தீயை அணைக்க முற்பட்ட போது கணவனின் கையிலும் தீக்காயம் ஏற்பட்டுள்ளது. அயலவர்களின் உதவியுடன் இருவரும் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிசிச்சைக்காக மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் குறித்த பெண் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். (2-281)

நோயைத் தொடக்கத்திலேயே குணப்படுத்துங்கள். கடனை சிறிதாகவே இருக்கும்பொழுதே செலுத்தி விடுங்கள். — கதே

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கைவிடப்பட்டதாகக் காலம் கடந்து போகிறது

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் அரசியலமைப்பின் இடைக்கால வரைபு பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்பதாயிற்று.

ஆட்சியைக் காப்பாற்றுவதா? அல்லது இடைக்கால வரைபு பற்றிப் பேசுவதா? என்ற கேள்விக்கு மத்தியில் ஆட்சியைக் காப்பாற்றுவோம் என்பது முடிவாகிறது.

ஆக, நல்லாட்சியிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியப்படமாட்டாது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை என்ற விடயத்தை வெளிநாடுகளேனும் பேசுமா என்றால்,

ஐயா இப்போதைக்கு அதைப்பற்றிக் கதைக்காதீர்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தென்பகுதியில் ஆதரவு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை அவசரப்படுத்தினால், மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி மீண்டும் அரங்கேறிவிடும். ஆகையால் பொறுத்திருங்கள் என்பதே சர்வதேசத்தின் பதிலாக இருக்கும்.

தமிழ் மக்கள் போரில் பாதிக்கப்பட்டவர்கள். இன அழிப்பு என்று விபரிக்கக்கூடிய அளவில் தமிழ் மக்கள் இழப்புக்களைச் சந்தித்தவர்கள்.

போர்ப் பாதிப்பின் வடுக்களை இன்னமும் சுமந்து கொண்டு வாழும் தமிழ் மக்கள் இனிமேலாவது நிம்மதியாக – சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற நினைப்பு நம் அரசியல் தலைமையிடமும் அதனூடு சர்வதேச சமூகத்திடமும் ஏற்பட வேண்டும். அப்போதுதான் எங்களின் பிரச்சினைக்கு முடிவு எட்டப்படும்.

எனினும் தமிழ் மக்களுக்கு எதுவும் கொடுக்கலாகாது என்ற நிலைப்பாட்டை சிங்கள மக்கள் கொண்டிருப்பதாகவே கருதப்படுகிறது.

இந்த நாட்டின் பூர்வீகத்தை கொண்ட தமிழ் மக்களின் வரலாறு, ஆட்சி அதிகாரங்களுடன் சம்பந்தப்பட்டது.

காலசூழ்நிலைகளால் இலங்கையில் ஆட்சிப் பீடம் சிங்கள மக்களின் கைகளுக்குக் கிடைத்துவிட,

தாமே இந்த நாட்டின் சொந்தக்காரர்கள் என்றும் தங்களின் பௌத்த மதமே முதன்மையானது என்றும் கூறிக்கொண்டு தமிழ் மக்களின் உரிமையை வழங்குவதைத் தடுப்பது அல்லது காலம் கடத்தி அந்தப் பிரச்சினையை மழுங்கடிக்கச் செய்வதென்பது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

எனவே தமிழ் மக்களுக்கான உரிமையை அதிகாரத்தை வழங்குவது தொடர்பில் கடுமையான உத்தரவைப் பிறப்பிக்கின்ற ஒரு சூழ் நிலைக்குள் இலங்கையைக் கொண்டு வர வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்து விடுவார் என்பதோ அல்லது தமிழ் மக்களுக்கு உரிமையை வழங்குவதை சிங்கள மக்கள் விரும்பவில்லை என்பதோ தேவையற்ற காரணங்கள்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும். இதுவே முக்கியமான விடயம்.

இதைவிட்டு எல்லா விடயத்திலும் தமிழ் மக்கள் விட்டுக்கொடுக்க வேண்டும். அவர்களே பொறுமை காக்க வேண்டும் எனக் கூறுவது அடிப்படை நியாயமற்றதாகும்.

# இன வன்முறையாளர்களை தடுக்க நல்லாட்சி அரசாங்கம் தவறியுள்ளது

## கொழும்பு மாநகர சபை முதல்வர் ரோசி சேனாநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இன வன்முறைகள் அதிர்ச்சியையும் கவலைகளையும் ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு மாநகர சபை முதல்வர் ரோசி சேனாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அதேவேளை இந்த இன வன்முறைகள் பரவவிடாது ஆரம்பத்திலேயே தடுக்காதிருந்த அரசாங்கத்திற்கும் அவர் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

எமது சகோதரர்கள் மீதான இன வன்முறைகளை நிறுத்துவோம் என்ற தலைப்பில் கொழும்பு மாநகர சபை முதல்வர் ரோசி சேனாநாயக்க நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு,

ஒரு தேசத்தைச் சேர்ந்த மக்களான நாம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இன வன்முறைகள் மற்றும் இனவாத நடவடிக்கைகள் தொடர்பில் உதாசீனமாக இருந்தால் இவை எமது எதிர்கால சந்ததியினரையும் அழித்து விடும் என்றும் எச்சரித்துள்ளார்.

இதனால் கண்டியில் கட்டவிழ்த்துவிடப்பட்டது போன்ற இன வன்முறைகளுக்கான முழுப் பொறுப்பையும் நாட்டின் மக்களாகிய அனைவரும் ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு நமக்கிடையிலேயே குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டு மீண்டும் ஒரு முறை இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாது தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை இவ்வாறான இன வன்முறைகள் ஏற்படாது தடுக்க ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆட்சியில் உள்ளவர்களுக்கு மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டியது அவசியம் என்றும் ரோசி சேனாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும் அம்பாறை - கண்டியில் நாம் அதனை செய்யாது விட்டதால் தோல்வியடைந்துள்ளது மாத்திரமன்றி பெரும் அழிவையும் சந்தித்துவிட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நாம் இன்னமும் தாமதமாகவில்லை என்று தெரிவித்துள்ள அவர் குரோதத்தையும் இன - மத வாதத்தையும் பரப்புபவர்களுக்கு எதிராக இலங்கையர்கள் என்ற ரீதியில் அனைவரும் அணி திரண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்என்றும்இதுவே தேசப்பற்றாகும் என்றும் ரோசி சேனாநாயக்க தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# கேப்பாப்புலவு மக்களின் போராட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

நாட்டில் தற்போதைய அரசியல் நிலைமையினையும் அசாதாரண சூழ்நிலையினையும்கருத்தில்கொண்டு இன்று (11.03.18) பாரிய போராட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்திருந்தோம். இந்நிலையில் இந்த போராட்டத்தினை எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளதாக கேப்பாப்புலவு மண்மீட்பு போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

கேப்பாபுலவில் நாம் முனனெடுத்துவரும் போராட்டமானது வெறுமனே கேப்பாபுலவு நிலமீட்பு போராட்டமல்ல இது ஒரு உரிமை சார்ந்த போராட்டம். எனவே வட கிழக்கில் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் அனைத்துமே விடுவிக்க வேண்டியவை இதனை வலியுறுத்தி எதிர்வரும் 18 ஆம் திகதி காலை போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளதாகவும் இந்த போராடடத்துக்கு வட கிழக்கிலுள்ள கட்சி பேதங்கள் இன மத பேதங்களை திறந்து அனைத்து அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகத்தினர் பல்கலைக்கழக மாணவர்கள் சிவில் அமைப்புக்கள் நலன் விரும்பிகள் பொதுமக்கள் என அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைந்து இந்த போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு கோரியுள்ளார். (ம-281)

# அரசு செய்ய வேண்டிய பணியை கூட்டு எதிர்க்கட்சி செய்கின்றது

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

இன முரண்பாட்டைத் தீர்க்க அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை கூட்டு எதிர்க் கட்சி செய்து வருவதாக முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிங்கள - முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

சிங்களவர்களும் முஸ்லிம்களும் பொறுமையாக செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டதாகவும், அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையை கூட்டு எதிர்க்கட்சி செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சி இந்த இனப்பிரச்சினைக்கு கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள இரு பாராளுமன்ற உறுப்பினர்களை குற்றம் சாட்டுகின்றனரே என அவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போது,

அவர்கள் குற்றம்சாட்டும் இருவரும் இந்த இன முரணபாட்டை தீர்ப்பதற்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர்.

அவர்கள் இன முரண்பாட்டை ஏற்படுத்துபவர்களாக இருந்தால், இதில் கலந்துகொண்டிருக்க வேண்டியதில்லை.

இனப் பிரச்சினையை ஐக்கிய தேசிய கட்சி ஒவ் வொருவரின் தலையிலும் சுமத்துவதற்கு முயற்சிக்கின்றது எனவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார். (ம)

# முஸ்லிம் பிரதிநிதிகளுடன் விகாராதிபதி சந்திப்பு

## அசம்பாவிதம் குறித்து கலந்துரையாடல்

தமது பிரதேச மக்களினால் எந்தவித பாதிப்புக்களும கஹட்டோவிட்ட வாழ முஸ்லிம்களுக்கு ஏற்பட மாட்டாது என ருவன்புர ஸ்ரீ விஜயாராம புரான மகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி தலம்பிட்டியே சுமங்கள மகா தேரர் தெரிவித்தார்.

கஹட்டோவிட்ட பிர தேசத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தையடுத்து நிட்டம் புவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தில்ருக்கின் ஆலோசனையின் பேரில் கஹடடோவட்ட பெரிய பள்ளிவாசல முக்கிய பிரமுகர் சகிதம் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றுக் காலை ரவன்புர ஸ்ரீவிஜயாராமபுரான மகா விகாரையின் விகாராதிபதியைச் சந்தித்து விசேட கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே விகாராதிபதி இதனைக் கூறினார்.

எமது கிராமத்து மக்கள் இதுவரை காலமும் எந்த விதப் பிரச்சினையுமின்றி அயல் கிராமத்து முஸ்லிம் மக்களுடன் சமாதானமான முறையில் வாழ்ந்து வருகின்றனர்.

இதனைச் சீர்குலைக்க எந்தவொருவருக்கும் நாம் இடமளிக்க மாட்டோம். வெளியில் இருந்து வந்து அசம்பாவிதங்களில் ஈடுபட்டாலே தவிர எமது பிரதேசத்து சிங்கள மக்கள் அசம்பாவித நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் எனவும் விகாராதிபதி குறிப்பிட்டார். (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் ஏ9 வீதியில் (புங்கன்குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதி சந்தி வரை), பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பேரின்ப நாயகம் வீதி, காட்டுக்கந்தோர் வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கொக்கிளிபவிலிருந்து ஓமந்தை வரை, Raj Fishering Net Factory, Union Allience Ltd, Senok, AMP Ceylon Pvt Ltd, ஓமந்தை தொழில் நுட்பக்கல்லூரி, பம்பைமடு கிராமம், கற்பக புரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வீடு கட்ட ஆரம்பிக்கும் முறைகள் எவை?**

வடகிழக்கு பகுதியில் அடிக்கல் நாட்டி பஞ்சபூதங்களுக்கு பூஜை செய்தல்

முதலில் மதில் சுவரை கட்டுதல் சிறப்பு (அல்லது) தடுப்புக் கட்டுதல்

தென்மேற்கு மூலையை சரிமட்டமாகச் செய்தல்

கடைகால் வடகிழக்கு மூலையில் தோண்ட தொடங்குதல்.

(தொடரும்)

# அம்பாந்தோட்டை அணியை வீழ்த்தி சம்பியனாகியது முல்லைத்தீவு அணி









முல்லைத்தீவு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற துடுப்பாட்ட போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணி வெற்றி பெற்றுள்ளது.

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தளபதி மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுருவின் எண்ணக்கருவிற்கு அமைய 59 ஆவது படைப் பிரிவின் தளபதி பிரிகேடியர் ருவான் வணிக சூரியவினது வழிகாட்டலின் கீழ் 59-2 ஆவது படைத்தளபதியின் கட்டளை அதிகாரி கேணல் சாணக்க ரந்நாயக்கவினது தலைமையில் இனங்களுக்கிடையில் சமாதான நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் அம்பாந்தோட்டை மாவட்ட துடுப்பாட்ட சம்மேளன அணிக்கும் முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சம்மேளன அணிக்குமான போட்டி முள்ளிவளை வித்தியானந்தா கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை 2.30 மணிக்கு நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக 59 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி பிரிகேடியர் ருவான் வணிக சூரிய மற்றும் சிறப்பு விருந்தினர்களாக முல்லை. கல்வி வலய பணிப்பாளர் சு.பிரபாகர். வித்தியானந்தா கல்லூரி அதிபர் க.சிவலிங்கம், அம்பாந்தோட்டை விளையாட்டு சபையின் பணிப்பாளர் வைத்திய சஞ்சீவ சேனரத்ன ஆகியோர் கலந்து கொண்டுள்ளதுடன் இந்தப் போட்டியின் நடுவர்களாக வவுனியா விளையாட்டு சபையின் நடுவர் ஆரியரத்தினம். ரவிகரன் மற்றும் ராஜேந்திரன் தசநீந் ஆகியோர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

நாணயச் சுழற்சி மூலம் வெற்றிபெற்ற முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சம்மேளன அணி துடுப்பெடுத்து ஆட தீர்மானித்தது. இதனடிப்படையில் 20 ஓவர்கள் கொண்ட போட்டியில் 9 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அம்பாந்தோட்டை மாவட்ட துடுப்பாட்ட சம்மேளன அணியினர் அனைத்து விக்கெட்டுகளை இழந்து 123 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டார்கள். இதில் இரண்டு ஓட்டங்களால் முல்லைத்தீவு மாவட்ட சம்மேளன அணியினர் வெற்றியினை தனதாக்கிக் கொண்டுள்ளார்கள்.

போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக அம்பாந்தோட்டை மாவட்ட அணியினை சேர்ந்த பி.கே.லசந்த சிறீலால் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த ஆட்டத்தில் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சிறந்த ஆட்ட நாயகனாகவும் முல்லைத்தீவு மாவட்ட சம்மேளன அணியின் அருணச்சலம் சஞ்சயன் 41 ஓட்டங்களை எடுத்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

போட்டியில் கலந்து கொண்ட இரண்டு அணியினருக்கும் சான்றிதழ்கள் வழங்கி மதிப் பளிக்கப்பட்டுள்ளதுடன் சிறந்த வீரர்களுக்கு கேடயங்களும் வழங்கப்பட்டன. (க-281)

# இரட்டைச் சத வெற்றிக்கிண்ணம்

## புதிய சாதனை படைத்தார் சாகித்தியன்





இரட்டைச் சத வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தும் 3 ஒரு நாள் தொடரில் (BATTLE OF THE BLUES) 2 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது ஹாட்லியைற்ஸ் அணி யாழ். சென்றல் அணியை 3 இலக்குகளால் வெற்றி பெற்று தனது 2 ஆவது வெற்றியை பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 49.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. பாலேந்திரா- 28, றஜீவ் குமார்-78, மதுாளன்-28, கவி- 10, சுதர்ஸன்-15, கிரிசாந்- 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாத்-01, றஜீவன்-01, சாகித்தியன்-02, பிரதீப்-03, நிஹறாக்தன்- 01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 32.01 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சாகித்தியன் ஆட்டமிழக்காது 165 ஓட்டங்களை பெற்றுள்ளார். இவர் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற வீடி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத் தொடரில் 3 ஆவது காலிறுதிப் போட்டியில் ஸ்ரான்லி அணிக்கு எதிராக விளையாடிய பற்றீசியன்ஸ் அணி வீரர் 160 ஓட்டங்களைப் பெற்று சாதனை ஒன்றினை நிலை நாட்டி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கடந்த ஞாயிற்றுக்கிழமை இச் சாதனை சாகித்தியனால் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சதீஸ்-17, றஜீவன்-10, ராகவன்-17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லதுாஸன்-01, சலீஸ்ரன்-05, மதுாஸன்-01 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியிலும் சாகித்தியன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். தொடரின் முதலாவது போட்டியிலும் சாகித்தியன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொடரின் 3 ஆவது போட்டியும் இறுதிப் போட்டியும் இன்று ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் 3 போட்டிகளிலும் சிறந்த வீரருக்கான பரிசிலும் தொடர் நாயகனுக்கான பரிசிலும் தொடரை கைப்பற்றும் அணியினருக்கான பரிசிலும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் இத்தொடரில் விசேட பரிசிலும் ஒன்று வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் ஹாட்லிக் கல்லூரி அதிபர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார். (கு)

# மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி

சங்கானை வை.எம்.சி.ஏ. விளையாட்டுக்கழகம் மாபெரும் மென்பந்தாட்டக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

அணிக்கு ஏழுபேர் ஆறு ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் பங்கு பற்றவிரும்பும் அணிகள் 077 4662 8180 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என சங்கானை வை.எம்.சி.ஏ. விளையாட்டுக்கழகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (கு)



வடமாகாண மேசைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய மாபெரும் மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய கிண்ணம் வென்ற வீரர்களுடன் விருந்தினர்கள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மற்றும் நடுவர்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (கு)

## வன்முறையில் ஈடுபட்ட...

கங்கள் மூலம் பொதுமக்கள் தகவல்களை வழங்க முடியும்.

phqops@police.lk என்ற மின்னஞ்சல் மூலமும் தகவல்களை வழங்க முடியும் என பொலிஸ தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம)

## கஞ்சா கடத்தியவர்...

மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவற்றை பருத்தித்துறை பொலிஸில் பாரப்படுத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் வடமராட்சியின் வல்லிபுரம் வீதி வழியாக கஞ்சா கடத்தப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலையடுத்து அப்பகுதியில் மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர் .

சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரை சோதனை மேற்கொண்டபோது அவரிடம் கஞ்சா காணப்பட்டதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் உடுத்துறை வடக்கைச் சேர்ந்த 39 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரும் கஞ்சாவும் பருத்தித்துறை பொலிஸில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ம-60)

## நல்லிணக்கத்தை...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இருநாடுகளுக்கிடையிலான பொருளாதார, கலாசார, வர்த்தக தொடர்புகளுக்கு புதியதோர் பலம் கிடைக்கப்பெற்றுள்ளதாக இந்திய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந் அவர்களுக்குமிடையில் நேற்று பிற்பகல் 'இந்திய ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லமான ராஸ்ரபதி பவனில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்திய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சூழலை பாதுகாப்பது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை பாராட்டியுள்ள இந்திய ஜனாதிபதி, இலங்கை தற்போது சூரியசக்தி துறைக்குள் பிரவேசித்திருப்பதை தான் பின்னரேயே அறிந்துகொண்டதாக தெரிவித்தார்.

முழு உலகமும் மின்சக்தி பிரச்சினைக்கும், பூகோள வெப்பமாதல் அதிகரிப்பது தொடர்பான பாரிய பிரச்சினைக்கும் முகங்கொடுத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இத்தகைய மாநாடு நடைபெறுவது மிகவும் காலத்திற்குப் பொருத்தமானதாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

30 வருட காலமாக யுத்தம் இடம்பெற்ற வேளையிலும், அதன் பின்னரும் இலங்கையின் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளில் வீடமைப்பு, சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம் மற்றும் கலாசாரம் போன்ற துறைகளில் இந்தியா வழங்கிவரும் உதவிகளுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பலப்படுத்தவும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் பல்வேறு விரிவான நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, சில அடிப்படைவாதிகள் நாட்டில் கலவர சூழ்நிலையை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக குறிப்பிட்டார்.

எவ்வாறான போதும் கடந்த சில நாட்களாக இலங்கையில் சில பிரதேசங்களில் இடம்பெற்ற கலவர சூழ்நிலை தற்போது முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி இந்திய ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட இந்திய ஜனாதிபதி, மிக விரைவில் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இந்திய ஜனாதிபதியின் செயலாளர் பரன் லால், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரான்ஜித் சிங் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம)

## பொதுமக்களின்...

யான மாணிக்கம் மகாலிங்கம் (வயது 55) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் காலை காரைநகர் பிரதேச செயலகத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். ஆனால் தலைக்கவசம் அணியாமலேயே சென்றுள்ளார். பின்னர் பி.ப 2 மணிக்கு நீதிப்பந்தல் அம்மன் கோவில் சந்தியில் அதி வேகமாக வந்துள்ளார். வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே இருந்த மதில் மேல் மோதியுள்ளார்.

சம்பவ இடத்திலேயே படுகாயமடைந்து மயக்கமடைந்த குறித்த நபர் இரண்டரை மணித்தியாலங்களாக வீதியிலேயே கிடந்துள்ளார்.

சுமார் 500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இவரை சுற்றி நின்றிருந்தும் ஒருவர் கூட குறித்த நபரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முன்வரவில்லை. இரண்டரை மணித்தியாலங்களுக்கு பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த நபரை உடனடியாக காரைநகர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால் குறித்த நபர் அதிக இரத்தம் வெளியேறிய காரணத்தினால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். அவ்விடத்தில் கூடியிருந்த பொதுமக்கள் விரைந்து செயற்பட்டிருந்தால் குறித்த நபரின் உயிரை காப்பாற்றியிருக்க முடியும் என்றும் பொதுமக்களுடைய இவ்வாறான அசமந்த செயற்பாடுகள் கண்டிக்கப்பட வேண்டும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் தமக்கு தேவையற்ற மேலதிக விசாரணைகள் வரும் என்று ஒவ்வாருவரும் ஆளுக்காள் ஒதுங்கி ஓடியதுடன் உயிரை சிறிதும் மதிக்காமல் மனிதாபிமானமற்ற முறையில் வேடிக்கை பார்த்திருந்தார்கள் என மேலும் குற்றம் சாட்டியிருந்தனர்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## இன வன்முறை தொடர்பில்...

திரட்டிவரும் இந்த நாடுகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இதற்கெதிராக கூட்டு எதிர்ப்பை வெளியிட தீர்மானம் எடுத்துவருவதாக அரபு நாடொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் கொழும்பிலுள்ள உயர்மட்ட தூதுவரொருவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டங்களில் எதிர்த்து வாக்களித்த போதும், இப்போது இலங்கையில் நடைபெறும் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளை நோக்குகையில் அந்த ஆதரவு நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்யவேண்டிய நிலை எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வன்முறைகள் குறித்து இலங்கை அரசும் முறையான தகவல்களை இராஜதந்திரிகளுக்கு வழங்காதிருப்பதன் மூலம் வன்முறைகள் தொடர்பிலான அரசின் உண்மைத் தன்மையை சந்தேகிக்கவேண்டியுள்ளதென்றும் மேற்படி தூதுவர் தெரிவித்தார்.

சவூதி அரேபியா, கட்டார், குவைத், பங்களாதேஷ், இந்தோனேசியா, மலேஷியா, ஐக்கிய அரபு இராச்சியம், பாகிஸ்தான், ஈரான் உட்பட்ட நாடுகளின் இராஜதந்திரிகள் இந்த வன்முறைகள் குறித்து தீவிர கரிசனை கொண்டிருப்பதுடன், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அடுத்த வாரம் பயணம் மேற் கொள்ளவும் உத்தேசித்துள்ளனர்.

இந்த வன்முறைகளால் அரபு நாடுகளுடனான வர்த்தக உறவுகளும் பாதிக்கப்படக் கூடுமென சொல்லப்படுகிறது என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மின்கம்பத்துடன் கார் மோதி விபத்து யாழின் பெரும்பாலான பகுதிகளில் 17 மணித்தியாலங்கள் மின்சாரம் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள மின்கம்பத்துடன் நேற்று அதிகாலை கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் யாழ் நகரின் பெரும்பாலான பகுதியெங்கும் சுமார் 17 மணித்தியாலங்கள் வரை மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

விபத்தினை ஏற்படுத்திய வாகன உரிமையாளர் பொலிசாரிடம் சரணடைந்ததுடன் இழப்பீட்டினையும் செலுத்தியுள்ளார்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற துடுப்பாட்ட போட்டியினை பார்வையிடுவதற்காக கொழும்பில் இருந்து காரில் வந்திருந்த சிலர் நேற்று அதிகாலை பலாலி வீதி வழியாக சென்றுள்ளனர்.

நித்திரை தூக்கம் காரணமாக கார் வீதியை விட்டு விலகி பரமேஸ்வரா சந்திக்கு அருகில் உள்ள உயர் மின்அழுத்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இதில் மின்கம்பம் முழுமையாக முறிந்து விழுந்ததுடன் அருகில் இருந்த மதிலும் சேதமடைந்தது. அருகில் நின்றிருந்த வண்டில் ஒன்றும் சேதமடைந்தது. ஆனால் விபத்தை ஏற்படுத்தியவர்கள் அவ்விடத்தை விட்டு சென்றிருந்தனர்.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகை தந்த இலங்கை மின்சார சபையினர் அப்பகுதிக்குரிய மின்சாரத்தை நிறுத்தியதுடன் அந்த பகுதியில் இருந்து மீட்கப்பட்ட வாகன இலக்கத்தகட்டினையும் எடுத்துச் சென்றுள்ளனர். பின்னர் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

பின்னர் விபத்தினை ஏற்படுத்திய வாகன உரிமையாளர் நேற்று காலை இ.மி.சபையினரை தொடர்பு கொண்டு தான் இழப்பீட்டை செலுத்துவதாக இணங்கியுள்ளார்.

அதன்படி இ.மி.சபையினருக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் மதிலிற்கான செலவாக 10 ஆயிரம் ரூபாவும் வண்டில் செலவாக 11 ஆயிரம் ரூபாவினையும் செலுத்தியிருந்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

# இலங்கையுடன் இணைந்து பிராந்திய ஒத்துழைப்பு

## பாகிஸ்தான் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடன் இணைந்து தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டை புதுப்பிக்க விரும்புவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் ஷஹிட் ககான் அப்பாசி இதனை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் எல்.கே. ஜெயநாத் சீ.பெரேரா நேற்று பாகிஸ்தான் பிரதமரின் அழைப்பை ஏற்று அவரை சந்தித்தப் போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான துடிப்பான தளமாக விளங்கும் சார்க் மாநாட்டை புதுப்பிக்க இருதரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் பாகிஸ்தான் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

இதனிடையே, இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கு வருகை தருபவர்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம)

## ஜெனிவா செல்கிறது...

சார்பில் ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி பங்கேற்று உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் இலங்கை குறித்த இரண்டாவது விவாதத்தில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் இந்த கூட்டத்தொடரில் இலங்கையின் சார்பில் பங்கேற்கவுள்ளனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு மீண்டும் 2017ஆம் ஆண்டு இரண்டு வருட கால நீடிப்புக்கு உட்பட்ட இலங்கை குறித்த பிரேரணையின் அமுலாக்கத்தை அடிப்படையாகக்கொண்டே இந்த விவாதம் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இலங்கை குறித்த பூகோள காலக்கிரம மீளாய்வு அமர்வு கடந்த நவம்பர் மாதம் நடைபெற்றது. அதன்போது இலங்கை குறித்த பல்வேறு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அந்த அறிக்கையில் 50க்கும் மேற்பட்ட நாடுகளினால் 100க்கும் மேற்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் அவை திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இலங்கை அரசாங்கம் சர்வதேச பங்களிப்புடன் பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டவேண்டுமென தெரிவித்து 2015ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமை பேரவையின் 30ஆவது கூட்டத்தொடரில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்தப் பிரேரணைக்கு இலங்கை அரசாங்கமும் அனுசரணை வழங்கியிருந்தது.

அந்தப் பிரேரணையானது கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நா மனித உரிமை பேரவையின் 34ஆவது கூட்டத்தொடரில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இலங்கைக்கு மேலும் இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்பட்டது. அதன்படி எதிர்வரும் 2019ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ம)

## உயர் நீதிமன்ற...

சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திருமதி எம்.என். பிதுஷினி பெர்னாண்டோ உயர் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ கலந்துகொண்டார். (ம)

## மயங்கி விழுந்த...

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான அன்ரனி ராசு (வயது 39) என்பவரே மேற்படி உயிரிழந்துள்ளார்.

யாழ்.மாநகர சபையில் வேலை செய்யும் குறித்த தொழிலாளி நேற்று சின்னக்கடை சந்திப்பகுதியில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்தார். முற்பகல் 11 மணியளவில் திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளார்.

உடனடியாக அவர் சக ஊழியர்களால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாக தெரிவித்தனர்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## கட்சிகள் தொடர்பில்...

தொடர்ந்து மாவட்டத்திற்கு வெளியே இடம்பெற்ற சில கலவரங்களுக்குப் பின்னால் அரசியல் குழுவொன்று செயற்பட்டிருப்பது பற்றி புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இனவாத செயற்பாடுகள் தொடர்பாக அண்மையில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட சிலரும் இந்த வன்முறைகளுக்குப் பின்னால் செயற்பட்டிருப்பதாகவும் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது. (ம)

## சமூக வலைத்...

இடம்பெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் இத்தடையை நீக்குவது குறித்து தீர்மானிக்கப்படும் என தெரியவருகின்றது.

எனினும், குறித்த தடையினால் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வந்த பெருமளவான பொய் பிரசாரங்கள் முடக்கப்பட்டதாக தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பேஸ்புக், வைபர், வட்ஸ்அப் போன்ற சமூக வலைத்தளங்களின் மீது விதிக்கப்பட்டுள்ள தற்காலிகத் தடை நேற்று சனிக்கிழமை நீக்கப்படும் என, இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தாளையடி கடலி...

படகு வலைகளுடனும் மற்றும் அவர் பிடித்த ஒரு தொகுதி மீன்களுடன் கரை ஒதுங்கிய நிலையில் மீனவர் தொடர்பில் தகவல் ஏதும் கிடைக்காத நிலையில் வெற்றிலைக்கேணி, மாத்தளன், இரணைப்பாலை, அம்பலவன் பொக்கணை ஆகிய பகுதி மீனவர்கள் இயந்திரப் படகுகளுடன் கடலில் பலத்த தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

வெற்றிலைக்கேணி பகுதியைச் சேர்ந்த தேவதாஸ் யூலி அலைச்சன் (வயது - 36) என்ற 3 பிள்ளைகளின் தந்தையான மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இயந்திரப் படகில் வெற்றிலைக்கேணி கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ளார்.

இவர் வழமையாக அதிகாலை நேரத்தில் கரை திரும்புவது வழக்கமாக உள்ள நிலையில் நேற்று சனிக்கிழமை அதிகாலையாகியும் கரை திரும்பவில்லை.

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு, மாத்தளன் சாலைப் பகுதியில் மீனவர் சென்ற இயந்திரப் படகு மட்டும் வலைகளுடனும் மற்றும் ஒரு தொகுதி மீன்களுடன் கரை ஒதுங்கியுள்ளது.

இதனையடுத்து, நேற்று 11 மணியில் இருந்து வெற்றிலைக்கேணி மீனவர்கள் 7 இயந்திரப் படகுகளில் ஆழ்கடற் பகுதியில் தேடுதலில் ஈடுபட்ட போதும் மீனவர் தொடர்பில் தகவல் ஏதும் கிடைக்காத நிலையில நேற்று இரவு முதல் மாத்தளன், இரணைப்பாலை, அம்பலவன்பொக்கணை ஆகிய பகுதி மீனவர்களும் தற்போது காணாமல் போன மீனவரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ம-9-15-60-64)

## ஊரடங்கு உத்த...

தத பகுதியில் நிலவிய குழப்பநிலை காரணமாக அங்கு ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு வந்தது.

இந்தநிலையில் அங்கு தற்போது சாதாரண சூழ்ல் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் ஊரடங்கு உத்தரவு அமுலாக்கப்படாது எனவும் ருவன் குணசேகர மேலும் குறிப்பிட்டார். (ம)

## பிரதமர் ரணிலு...

கட்சியின் சில உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களிடமும் கையொப்பங்கள் பெறப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, மூன்று தரப்பினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் நம்பிக்கையில்லா பிரேரணையை நாடாளுமன்றில் முன்வைக்கவுள்ளதாகவும் ரஞ்ஜித் டி சொய்சா குறிப்பிட்டார். (ம)


CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மனிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us: cnrworldwideexpress
(சு-1829)





வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள Softlogic காட்சியறைக்கு ஆண்/பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். பணிபுரிய ஆர்வமுள்ளோர் 12.03.2018 திங்கட்கிழமை சுயவிபரக்கோவையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

Softlogic Show room
63-65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 912 7954
(C-1832)



Vacancies பணிநிலை வெற்றிடம்

எமது நிறுவனத்தில் ஆண், பெண் இருபாலாருக்குமான பணிநிலை வெற்றிடம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இஸ்லாமியர்களும் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளத்துடன் அத கொடுப்பனவுகளும் வழங்கப்படும். விவசாய உபகரண, உதிரிப்பாக விற்பனைக்கும் அனுபவம் உள்ளவர்கள் வேண்டப்படுகின்றனர்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
All Ceylon Distributors
212 & 214, K.K.S Road, Jaffna.
(சி-1793)



வேலைவாய்ப்பு

077 999 4807, 077 802 1371 இவ் இலக்கங்களுக்கு அழைத்து முற்பதிவினை பெற்றுக்கொள்ளுங்கள்.

GMI கம்பனியின் புதிய பயிற்சியுடன் கூடிய முகாமைத்துவம் சார்ந்த பதவி வெற்றிடங்கள். O/L பயின்றவர், 30 வயதுக்கு உட்பட்டவர் நேர்முகத்தேர்விற்கு வருகை தரலாம்.

பயிற்சிக் காலத்தில் 15,000/= - 18,000/= வழங்கப்படும். பின்னர் பதவி நிரந்தரமாக்கப்படுவதுடன் 40,000/= மேல் வழங்கப்படும்.

No.423, Stanly Road, Jaffna.
(3173)



காணி விற்பனைக்கு

கொக்குவில் - பொற்பதி வீதி - காளி கோயில் ஒழுங்கைக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. (3169)
தொடர்பு: 077 458 6569



அறிமுகம் - Rs. 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(C-1813)



இயந்திரங்கள் விற்பனைக்கு

நெல் உடைக்கும் இயந்திரம், புல் கொட்டை அரிப்பான், கொப்பறா வெட்டும் கட்டர் ஆகியன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 473 8986, 077 999 7814
(C-1842)



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V1 TRAVELS
(C-1828)





வீடு விற்பனைக்கு

வி.எம். றோட், பருத்தித்துறையில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 704 6623,
076 983 5181
(C-1841)



விற்பனை

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, சிங்கராயர் வீதியிலுள்ள 7 பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
078 962 2666
(3174)



கடை வாடகைக்கு

பலாலி வீதி உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 415 7062
(3135)



வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் போன் சொப் ஒன்றுக்கு பெண் வேலையாட்கள் தேவை. (அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.) தொடர்பு: 0773652050



சைவம், அசைவம்
ஒடியல் கூழ்
பைறட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chickan - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800



வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | பீசாலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1790)



வீட்டுப் பணிப்பெண் தேவை

கலகல்றோட், கொழும்பு 05ல் வசிக்கும் கணவன் மனைவி இருவருக்கும் சகல வீட்டு வேலைகள் செய்வதற்கு (சமையல் உட்பட) அனுபவம் வாய்ந்த பணிப்பெண் தேவை (வயது 40-55) சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
021 225 1457, 075 053 2761
(3135)



BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
Excellent Teachers' Panel & Individual Attention

Diploma / Advanced Diploma in English
ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என விரிவாகக் கற்பிக்கப்படும்.

IELTS Life Skills
A1 Exam - Sponsor / Settlement Visa
மூலம் UK செல்பவர்களுக்கு British High Commission னால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

Spoken English With Grammar - Quick Learning Course
குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமானதாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

IELTS (Academic / General)
Student Migration Visa
மூலம் செல்பவர்களது Approved Centre for Registering Online (ORS) Candidates

Spoken Sinhala
சிங்களத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்கு உகந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்கள், தொழில் புரிவோர், சிங்களம் கற்க விரும்புவோர் அனைவருக்கும்
Diploma in Sinhala
ஓரளவு சிங்கள அறிவு உள்ளவர்கள் மேலும் சிங்கள அறிவை விருத்தி செய்ய, சிங்களத்தினை மேலும் விரிவாகக் கற்றுக் கொள்ள விரும்புபவர்களின் தெரிவு.
வகுப்புக்கள் ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
(சி-1843)

Young Learners English (YLE)
வயதெல்லை 7 - 15 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேசப் பரீட்சை உடன் University of Cambridge இனால் சான்றிதழ் வழங்கப்படும்.

Jaffna Branch :
No.15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.
Tel : 021 222 4550 / 076 536 7818


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 157


வள்ளுவர் ஆண்டு 2048 | 11.03.2018 | தொலைபேசி : 021 222 3378

# கண்டியில் கலவரம்











உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**கங்காணியார்:** இராத்திரி ஒரு கனவு...

**மூப்பர்:** கங்காணியார் அதென்ன கனவு.

**கங்காணி:** புத்தபிரான் கண்ணீர் விடுவதுபோல அந்தக் கனவு இருந்தது.

**மூப்பர்:** கடவுள் கண்ணீர் விடுகிற அளவில ஏதோ துன்பம் நடக்கப் போகுது போல..

**சாத்திரியார்:** அப்படியொன்றும் இல்லை. கண்டியில முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடந்த வன் செயலைப் பார்த்துத்தான் புத்தபிரான் கண்ணீர் விட்டிருக்கிறார் போல.

**விதானையார்:** சாத்திரியார் சொல்லுறதுதான் சரி. முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரத்தின் பின்னணியில பௌத்த பிக்குகள் சிலரும் இருந்ததான தகவல்கள் உண்டல்லோ.

**பண்டிதர்:** புத்தபிரானின் போதனையைப் பின்பற்றுவதாகச் சத்தியம் செய்து வெளிக்கிட்ட பௌத்த துறவிகள் சிலர், செய்கின்ற செயல்கண்டு புத்தபிரான் நிச்சயம் கண்ணீர் விடுவார். அதுதான் கங்காணியாற்ற கனவில புத்தபிரான் கண்ணீர் விடுகிற காட்சி தெரிந்திருக்குது.

**வாத்தியார்:** என்னைப் பொறுத்தவரை தென்பகுதியில வாழுகின்ற தமிழ்- முஸ்லிம் மக்களுக்கு எப்பவும் பெரும்பான்மை இனத்தால ஆபத்து என்றுதான் சொல்லுவன்.

**பண்டிதர்:** உலக நாடுகளும் ஐ.நா. சபை போன்ற அமைப்புகளும் தலையிட்டாலே ஒழிய இலங்கையில சிறுபான்மை இனத்துக்கு எதிரான வன்செயல் நடந்துகொண்டுதான் இருக்கும்.

**விதானையார்:** உலக நாடுகள் எங்க தலையிடப் போகுது. அந்த நாடுகளுக்கு தங்கட தங்கட பிரச்சினை.

இலங்கையில சீனா தங்குவது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பிடிக்காது. அதால இலங்கையில நடக்கிற பிரச்சினையில அந்த நாடுகள் தலையிடுவினம்.

இலங்கை அரசும் சீனாவுக்கு இடம்கொடுத்ததால் தனக்குப் பலம் என்று நினைக்குது.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். உலக நாடுகளும் தங்கட தங்கட நலன். தமிழ் மக்களுக்காகக் கதைக்கிறதோ அல்லது இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துறதோ எதுவுமில்லை.

தங்கட நலனுக்கு ஏற்ற மாதிரி வியூகம் அமைக்கப் படுகுது. இலங்கையில தமிழ் மக்கள் பட்ட துன்பம் கொஞ்ச நஞ்சமோ. இன்றுவரை எங்கட பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்காவோ, இந்தியாவோ நடவடிக்கை எடுக்கவில்லை.

**வாத்தியார்:** இந்த நிலைமை உலக நாடுகளில மட்டுமல்ல எங்களுக்குள்ளும் இருக்கத்தான் செய்யுது.

**கங்காணியார்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** கங்காணியார் தமிழ் மக்களின்ர பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நினைப்பில எங்கட அரசியல்வாதிகளும் உறுதியாக இருக்கவேண்டும்.

இதைவிட்டிட்டு அரசியலில பதவி கிடைத்துவிட்டது. இனி எங்கட நலனைப் பார்ப்பம் எண்டு நினைத்தால் எல்லாம் அம்போதான்.

**சாத்திரியார்:** நாங்களும் அரசியல்வாதிகள் மாதிரி தொடர்ந்து அரசியலைப் பற்றிக் கதைக்காமல் எங்களைச் சுற்றி நடக்கிற சமாச்சாரங்கள் பற்றியும் கதைக்கிறதுதான் நல்லது.

**கங்காணியார்:** ஓம் சாத்திரியார் இப்ப எங்க பார்த்தாலும் வெளி நாட்டவர்கள்- வெள்ளைக்காரர்கள் யாழ்ப்பாணத்தில அதிகமாகத் திரியினம்.

**மூப்பர்:** வெள்ளைக்காரர்களின்ர வருகை யாழ்ப்பாணத்தில கண்டபாட்டில அதிகரித்திருக்கிது. அதோட ஹோட்டல்களில தங்கியிருக்கிற



## நல்லூர்க்கந்தனைத் தரிசிக்கும் வெள்ளைக்காரர்களை பாருமினே!

இவர்கள் யாழ்ப்பாணத்தில இருக்கிற சாதாரண சாப்பாட்டுக் கடைகளில சாப்பிடுகினம் எண்டால் அவர்களிட்ட இருக்கிற செலவுச் சிக்கனம் எப்படி என்பதை அறிய முடியுது தானே.

**விதானையார்:** நாங்கள் சாப்பிடுகிறதுக்கு கரண்டி தேடிக்கொண்டிருக்கிறம். ஆனால் யாழ்ப்பாணத்தில வெள்ளைக்காரர் கையால சாப்பிட்டிட்டுப் போகினம்.

**சாத்திரியார்:** யாழ்ப்பாணத்திற்கு வாற வெள்ளைக்காரர்கள் அத்தனை பேரும் நல்லூர்க் கந்தசுவாமியார் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வதைப் பார்த்து நான் ஆச்சரியப் பட்டுப் போனன்.

**வாத்தியார்:** உண்மைதான். வெளிநாடுகளில இருந்து யாழ்ப்பாணத்திற்கு வாற அந்த நாட்டவர்கள் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்கு வந்து பௌவ்யமாக நின்று வணங்குவதைப் பார்த்து எல்லோரும் வியப்படைகின்றனர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குள்ள வாறதில வெளிநாட்டவர்கள் காட்டுகின்ற கரிசனை ஏன்? என்ற கேள்வியைக் கூட எங்களிட்டை ஏற்படுத்தியுள்ளது.

**வாத்தியார்:** சைவ சமயத்தில மறுபிறப்புக் கொள்கை இருக்குதல்லோ. ஒரு காலத்தில இலங்கையில வெளிநாட்டவர்களின்ர ஆட்சி இருந்தது. அந்தக் காலத்தில நல்லூர்க் கந்தசுவாமி கோவிலோட தொடர்புபட்டவர்கள் தான் இப்ப இங்கு வந்து நல்லூர் முருகனை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கினம் போல.

நல்லூருக்கு வாற வெள்ளைக்காரர்களைப் பாருங்க. அவர்கள் நல்லூர்க் கோவிலையும் முருகனையும் உற்றுப் பார்க்கிறதைப் பார்க்கும் போது ஏதோவொரு ஞாபகத்தில பார்ப்பது போல இருப்பதைக் காணமுடியும்.

**பண்டிதர்:** நல்லூருக்கு வாற வெள்ளைக்காரர்கள் ஆலய நடைமுறைகளைப் பின்பற்றுவதிலும் அதிக கவனம் செலுத்துகினம். இவற்றைப் பார்க்கும் போது முற்பிறப்பில இவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோவிலை அண்மித்து இருந்திருக்கினம் போல.

அதாலதான் வெளிநாட்டில பிறந்தாலும் யாழ்ப்பாணத்திற்கு வந்து நல்லூர்க் கந்தனிட்டப் போய் வழிபடுகினம். நல்லூர் முருகனைத் தரிசிக்கின்ற பேறு பெற்ற இவர்கள் நிச்சயம் பாக்கியவான்கள்தான்.

இவ்வாறு பண்டிதர் சொல்ல, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழ்-முஸ்லிம் மக்கள் இணைந்து சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்த வேண்டும்



## இலங்கை ஆட்சியாளர்களால் சிறுபான்மை இனத்தை காக்கமுடியுமா?



முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கண்டியில் நடந்த கலவரம் இலங்கையின் நன்மதிப்பை மீண்டும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

சிறுபான்மை இனங்களுக்கு எதிரான போக்கு இன்னமும் குறைவடையவில்லை என்பது இதிலிருந்து உறுதியாயிற்று.

சுருங்கக்கூறின் தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்களத் தரப்புகள் காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்து விட்ட இனக்கலவரங்களின் போதெல்லாம் முஸ்லிம் சகோதரர்கள், ஆட்சியாளர்களின் பக்கமே நின்று கொண்டனர்.

தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களத்தரப்புகள் வன்மத்தில் ஈடுபடுவது தமது பலத்தை அதிகரிப்பதற்கும் அரசியல், அரச பதவிகள், பொருளாதார வர்த்தக கட்டுமானங்க்ள் என்பவற்றில் தங்களை உயர்த்திக்கொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பமாகக் கருதிய முஸ்லிம் மக்களும் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் சிங்கள மக்கள் தமக்கு எதிராகக் கலகம் செய்ய மாட்டார்கள் என்றே நம்பியிருந்தனர்.

ஆனால் அவர்களின் நினைப்பைக் கடந்து, உங்களின் இருப்பையும் விட்டு வைக்க மாட்டோம் என்பது போல சிங்களத்தரப்புகள் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தமது போக்கை அம்பாறையிலும் கண்டியிலும் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு அடி விழுந்த போது அதற்கு எதிராகத் தாம் குரல் கொடுத்திருக்க வேண்டும் என்ற நினைப்பு இப்போது முஸ்லிம் மக்களிடம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இது காலம் கடந்த விடயம் என்பது நிதர்சனமான உண்மை.

இலங்கையில் சிறுபான்மையின மக்களுக்கான தீர்வு என்பது வலியுறுத்தப்பட்டு அதனை அமுலாக்கியிருந்தால், முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறை கண்டியில் நடந்திருக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது என்பது தெளிவானது.

உண்மையில் தமிழ் மக்களின் போராட்டம் என்பது தனித்து அவர்களுக்கானது மட்டுமல்ல. மாறாக ஒட்டுமொத்த சிறுபான்மையின மக்களுக்குமானது.

இருந்தும் இலங்கையில் இருக்கக் கூடிய சிறுபான்மையின மக்களாகிய முஸ்லிம்களும் அவர்களின் அரசியல் தலைமையும் இதனை உணர்ந்து கொள்ளத் தவறிவிட்டன.

இதன் விளைவுதான் கண்டியில் நடந்த களேபரம்.

முப்பது ஆண்டுகால யுத்தத்தில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட கொடுஞ் செயல் நடந்த போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணம் சிங்களத் தரப்புகளிடம் அறவே இல்லை எனலாம். இவ்வாறான ஒரு நிலைமைக்குக் காரணம் இனவாதத் தீயைக் கக்குகின்ற சிங்கள அரசியல்வாதிகளும், பௌத்த பிக்குகளும் வலிமை பெற்றிருப்பதேயாகும்.

ஆக, இலங்கையில் இன ஒற்றுமை என்பதும் சிறுபான்மையின மக்களுக்கு ஆட்சியாளர்கள் உரிமை வழங்குதல் என்பதும் ஒருபோதும் சாத்தியமாகாது என்பது நிறுதிட்டமான உண்மை. இந்த உண்மையின் மத்தியில் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து ஒரு சரியான பொறிமுறைக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான பொறிமுறை என்பது சர்வதேசத்தின் தலையீடு; சர்வதேசத்தின் அழுத்தம் என்பதாகவே இருக்க முடியும்.

ஆம், இலங்கையில் சர்வதேசத்தின் தலையீட்டுக்கு அல்லது அழுத்தத்திற்கான கோரிக்கை முன்வைக்கப்படுவது கட்டாயமானதாகும்.

இந்தக் கோரிக்கையானது வன்னி யுத்தத்தின் போது நடந்த தமிழின அழிப்பு என்பதிலிருந்து எழவேண்டும்.

உண்மையில் வன்னி யுத்தத்தைத் தொடர்ந்து சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை நடந்திருக்குமாயின், தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம் மக்களுக்குமான உரிமைகளும் அதிகாரங்களும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆனால் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்ற விடயத்தில், முஸ்லிம் தரப்புகள் இலங்கை அரசுடன் சேர்ந்து நின்று சர்வதேச போர்க்குற்ற விசாரணையை இல்லாமல் செய்வதற்குப் பேருதவி செய்தன.

ஆனால், அந்த உதவிகளையும் தூக்கி எறிந்த சிங்களத் தரப்புகள், முஸ்லிம் மக்களுக்கு அடி கொடுக்கத் தலைப்பட்டுள்ளன.

ஆக, இப்போதிருக்கக்கூடிய சூழ்நிலையில் சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளை மீள வலியுறுத்துவதே ஒரே வழியாகும்.

இதற்காக முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களுடன் இணைந்து கொண்டு சர்வதேச போர்க்குற்ற விசாரணையை இலங்கையில் உடனடியாக மேற்கொள்ளுமாறு வலியுறுத்த வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து தமிழ்-முஸ்லிம் மக்கள் மீதான வன்மங்கள் சிங்களத் தரப்புகளிடம் நீடிக்கவே செய்யும்.

இதை நாம் கூறும் போது நல்லாட்சி அரசு இவ் வன்முறையைக் கட்டுப்படுத்த அதி தீவிரம் காட்டியது என்ற வாதத்தை யாரேனும் முன்வைக்கலாம்.

ஆனால் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கண்டியில் நடந்த கலவரத்தின் பின்னணியில் முன்னாள் படையினர் சம்பந்தப்பட்டிருப்பதுடன் முன்னாள் ஆட்சியாளர்களுக்கும், பௌத்த பிக்குகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆக, இத்தகைய தொடர்புகள் குறித்து ஆராயப்பட்டு சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நல்லாட்சி தயாரா? என்ற கேள்விக்குப் பின்னால், பௌத்த பிக்குகளையோ அன்றி முன்னாள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்களையோ கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த முற்பட்டால், நல்லாட்சியின் ஆயுட்காலம் மத்திமம் என்பதாகிவிடும் என்பதால் கண்டிக் கலவரக்காரர்களை சட்டத்தின் முன் நிறுத்துதல் என்பது சாத்தியமாகாது. எனவே இலங்கையில் சிறுபான் மையின மக்களின் பாதுகாப்பு என்பது சர்வதேசத்தின் கைகளில் உள்ளதென்பது நிதர்சனமான உண்மை.

விதுரான்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# பொன் மொழிகள்

- மனச்சான்று நீதிபதியாயிருந்து தண்டனை தருமுன் நண்பனாய் இருந்து எச்சரிக்கை செய்யும்.
  **ஸ்டானிங் லாஸ்.**
- மனச்சாட்சிக்கு உறுத்தாத சந்தோஷங்களே நிறைவு **-டாக்டர் இராதாகிருஷ்ணன்**
- மனம் சுத்தமாக இருந்தால் செயல் நல்வழியில் செல்லும்-**லெனின்.**
- மனம் அமைதி அடையும் போதுதான் ஆற்றல் பிறக்கும்-விவேகானந்தர்.
- மனம் போன போக்கில் எல்லாக் காரியங் களையும் செய்தால் நிம்மதி கிடைக்காது- **பீல்.**
- வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு: தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு. - **வைரமுத்து.**
- எது உன்னை அச்சம் கொள்ளச் செய்கிறதோ அதை அஞ்சாமல் எதிர்கொள்.

வொ.கனிஷா
சதயம் இல்லம்
எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமம்

# பொது அறிவு

- உலகில் மொத்தம் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன?
  **12,500**
- புயல் பற்றிய எச்சரிக்கை கொடுக்கத் தொடங்கிய ஆண்டு ?
  **1886.**
- அமெரிக்காவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே கத்தோலிக்க ஜனாதிபதி யார்?
  **ஜான் எப் கென்னடி**
- மஞ்சள் ஆறு என அழைக்கப்படும் ஆறு ?
  **குவாங்கோ ஆறு**
- தீவுகளின் எஜமானி என அழைக்கப்படும் நாடு எது ?
  **இங்கிலாந்து**
- இந்தியாவையும் இலங்கையும் பிரிக்கும் நீரிணை?
  **பாக்கு நீரிணை**
- எவரெஸ்ட் சிகரத்தின் உயரம்?
  **8848 மீற்றர்கள்.**
- எகிப்து நாகரிகம் எந்த நதிக்கரையில் தோன் றியது?
  **நைல் நதி**
- எகிப்து நாகரிகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
  **நைல் நதியின் நன்கொடை, நைல் நதியின் மகள்.**
- பண்டைய எகிப்தியரின் எழுத்து என்ன?
  **ஹெறய்ரோகிளிபிக்ஸ்**
- சீன நாகரிகம் எந்த நதிக்கரையில் தோன்றியது?
  **குவாங்கோ நதி (மஞ்சள் நதி)**
- அணு எண் என்றால் என்ன?
  **அணு எண் என்பது ஒரு அணுக்கருவில் உள்ள ப்ரோட்டான்களின் (Protons) எண் ணிக்கையாகும்.**

த.தானியா
கொக்குவில்.



# குட்டி கதை

ஒருவன் தன்னுடைய தொழிலில் படுதோல் வியடைந்த நிலையில் தான் நடந்து வந்த வழியில், தெரு முனையில் போவோர், வருவோரை மிகுந்த மனவேதனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது எதிரில் உள்ள குப்பைத்தொட்டியில் ஒருவர் தனக்கு தேவை யான பழைய பேப்பரை எடுத்து சாக்கில் நிரப்பி சென்றார். சிறிது நேரத்தில் இன்னொரு நபர் அதே குப்பை தொட்டியில் தனக்கு தேவையான போத்தல்களை நிரப்பி எடுத்து சென்றார். மீண்டும் ஒருவர் தனக்கு தேவையான பழைய பிளாஸ்டிக் தட்டு, பேப்பரை எடுத்து சாக்கில் நிரப்பி சென்றார். அதன்பின் ஒரு நாய் வந்து எச்சில் இலையில் இருந்த சாப்பாட்டை சாப்பிட்டு சென் றது. கடைசியாக வந்த ஒரு பசு குப்பையில் கிடந்த பச்சிலையை சாப்பிட்டு தன் பசியை போக்கி கொண்டது. இதைப் பார்த்த படு தோல்வியடைந்த அந்த நபர் கூறிய வார்த் தைகள் ,

ஒரு சிறிய குப்பைத்தொட்டியில் இத்தனை பேர் பிழைத்து வாழ்கிறார்கள் என்றால், இந்த பரந்து, விரிந்து கிடக்கும் இவ்வுலகில் நாம் அனை வரும் எப்படி எல்லாம் பிழைத்து வாழலாம் என்று தன் மனதை திடப்படுத்திக்கொண்டு இனி தனக்கு தோல்வியே கிடையாது , இனி வரும் காலங்கள் பொற்காலமே , மிக பெரிய வெற்றியே என தன்னம்பிக்கையுடன் தன் பழைய தொழிலை தொடங்க சென்றார்.

**“இந்த பரந்த உலகில் நாம் அனைவரும் ஜெயிக்க மட்டுமே பிறந்தவர்கள்”**



சி.லக்‌ஷன் - 1 ஐ
யா/நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயம்.



# பழமொழிகள்

ஆடத்தெரியாதவன் அரங்கு கோணல் என்றானாம்.
ஆபத்துக்குப் பாவமில்லை.
ஆயிரம் வேரைக் கண்டவன் அரை வைத்தியன். (மருவி ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்று வழங்குகின்றது)
ஆரால் கேடு. வாயால் கேடு.
ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
ஆலும் வேலும் பல்லுக்குறுதி. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
ஆழமறியாமல் காலை விடாதே.
ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு.
ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
ஆனைக்கும் அடிசறுக்கும்.
ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே, கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே.








## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3.2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை தொடர்ந்து...

தமிழ் தலைமை அரசுக்கு விட்டுக் கொடுக்க இனி என்ன இருக்கிறது?

நல்லாட்சியிலும் இனக் கலவரமா?

**மதன் — சங்கானை**

**யாழ்ப்பாணத்து நிலை என்ன?**

மனிதாபிமானம் மரித்து நாளாகி விட்டது. பணம் ஒன்று தான் இப்போது அவர்களின் குறிக்கோள். தோட்டக்காணிகளை விற்று - வாங்கி அதில் வீடு, கடை கட்டுகிற நிலைதான் அதிகம்.

வீட்டுக்கு வீடு கடை இருந்தால் கடையில் பொருட்கள் வாங்க ஆள் இருக்க வேண்டுமே. என்ன செய்ய இருக்கும் காசை வைத்து ஒரு கடை கட்டினால் எமது சந்ததி நோகாமல் நொங்கு குடிக்கும் என்று நினைத்து நாச மறுக்கிறார்கள்.

**அபி — யாழ்ப்பாணம்**

**காதலிக்கும் பெண் கைவிட்டு போகிறேன் என்று சொன்னால்?**

அடே அபி உனக்கு உடம்பு பூரா மச்சம் இருக்கு போல. இந்தச் சந்தர்ப்பம் உடம்பு முழுவதும் மச்சம் இருப்பவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும். அதனால் இதைச் சரியா பயன்படுத்தி ஒழித்தப்பி விடு. இல்லையேல் காதலியால் உன் கதை காலி.

**தனு — மானிப்பாய்**

**காதலியை திருமணம் செய்வது சொர்க்கம் தானே?**

காதலிக்கும் போது அவளுக்காக உன்னை வெயிலில் காய வைப்பாள். கல்யாணத்துக்குப் பின் அவள் புடைவையை துவைக்க வைத்து வெயிலில் காய வைப்பாள். இதுதான் மனைவி அதிகாரம்.

**கலா — வதிரி**

**எதுக்கு எடுத்தாலும் தூக்கி எறிந்து பேசுபவர்களை என்ன செய்ய?**

இப்போது மனிதர்களுக்கு மதிப்பளிக்கும் கலாசாரம் அறுந்து விட்டது. கதிரைகளும் பதவிகளும் மற்றவர்களை கீழ்நிலைப்படுத்தி அதில் திருப்தி காண்கிறது.

தவறுகள் திருத்தப்பட வேண்டியதுதான். அதை சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டிய விதத்தில் சொன்னால் மாற்றம் ஏற்படும் என்பது மட்டும் உண்மை.

**நிலா — சுழிபுரம்**

**உண்மையான காதலின் உச்ச எல்லை எது?**

காதலுக்கு இரு வீட்டிலும் எதிர்ப்பு. இரண்டு காதலர்களும் குளத்தில் குதித்து தற்கொலை செய்வதாக முடிவெடுக்கிறார்கள். அதன்படி இருவரும் குளத்தில் குதிக்கிறார்கள். காதலன் இறந்து போகிறான் காதலி நீந்திக் கரை சேர்கிறாள். இந்த எல்லை போதுமா இன்னும் எல்லை வேணுமா?

**கரன் — இணுவில்**

**வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்படுமா?**

ஒரு நாட்டில் வேலை இல்லாதவர்களை விட வேலை நேரத்தில் வேலை செய்யாமல் இருப்பவர்களே அதிகம் என்கிறது ஓர் ஆய்வு.

**பரமேஸ் — வதிரி**

**நல்லாட்சியிலும் இனக் கலவரமா?**

இந்த நாடு சிங்களவருக்கே உரியது என்கின்ற எண்ணம் சிங்கள மக்களிடம் இல்லாது போகும்வரை சிறுபான்மை இனத்தவர்க்கு பாதுகாப்பு இல்லை என்பதை கண்டி கலவரம் எடுத்துக் காட்டி இருக்கிறது.

அன்பையும், அரவணைப்பையும், போதிக்கின்ற பௌத்த துறவிகளே இனவாதக் கொள்ளிக் கட்டையை சிங்கள இனத்தவர்களிடம் எடுத்துக் கொடுக்கிறார்கள் எனின் இந்த நாடு உருப்படுவதற்கான வாய்ப்பு கொஞ்சமும் இல்லை என்பதே பொருள்.




**அரிமா — யாழ்ப்பாணம்**

**தத்துவம் ஒன்று சொல்லுங்க வியாசர்?**

கோபத்தில் மிருகத்தை மிஞ்சுகிறான் மனிதன் பாசத்தில் மனிதனை மிஞ்சுகிறது மிருகம்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**மனிதன் பிறக்கும் போதும் இறக்கும் போதும் சிரிப்பதில்லையே?**

பிறக்கும் போது எப்படியோ ஒருநாள் இறக்கப் போகிறேனே என்று எண்ணி அழுகிறான். இறக்கும் போது இனி நான் பிறக்க மாட்டேன் என்று அழுகிறான்.

**சுதன் — குப்பிளான்**

**தமிழ் தலைமை அரசுக்கு விட்டுக்கொடுக்க இனி என்ன இருக்கிறது?**

அரச அட்டைகள் எம் தலைமையில் ஒட்டி இருந்து உறிஞ்ச வேண்டியதை எல்லாம் உறிஞ்சி விட்டது. பதிலுக்கு எம் தலைமையும் அரசில் இருந்து உறிஞ்சிக் கொண்டிருக்கிறது. இதில் என்ன வேடிக்கை என்றால் பாதிக்கப்படுவது தமிழினம் என்பதுதான்.

ஒட்டுங்கள், உறிஞ்சுங்கள், இந்த போர்க்குற்ற விசாரணையாவது நடத்துங்கள் என்று சர்வதேசத்திடம் சம்பிரதாயத்திற்கேனும் கேளுங்களேன். உங்கள் சந்ததி இந்த பூமியில் தானே வாழப்போகிறது. நாம் பார்த்துக்கொள்கிறோம்.

**நந்தகுமார் — மானிப்பாய்**

**சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை தொடர்ந்து நடக்கிறது. பலன் கிடைக்குமா?**

கடமையைச்செய் பலனை எதிர்பாராதே. இதைத்தான் காணாமல் போனவர்களுக்கான அமைப்பு செய்கிறது.

எதிர்க்கட்சிக் கதிரைக்காய் வாய்பொத்தி, கண் பொத்தி, காது பொத்தி இருக்கும் எம் தலைமை நினைத்தால் நடக்கும். என்ன செய்ய அதைவிட இது (கதிரை) அவர்களுக்கு முக்கியமாச்சே.

**அன்பானந்தன் — யாழ்ப்பாணம்**

**நான் இரண்டாவது திருமணம் செய்யலாம் என நினைக்கிறேன்?**

அடப்பாவி அவன் அவன் ஒண்டுக்கே வழியில்லாமல் அல்லாடிட்டு இருக்கான். நீர் இரண்டாவதோ. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது நல்லதில்லைத் தம்பி.

**பவானி — புன்னாலைக்கட்டுவன்**

**இ.போ.சவுக்கும் தனியார் பேருந்துக்குமான போட்டி எப்போது ஓயும்?**

இதைக் கேட்கும் போது காசு பணம் துட்டு மணி மணி என்ற பாடல்தான் நினைவுக்கு வருகிறது. இரண்டு பேருந்துகளும் ஆளுக்காள் போட்டி போட்டு இப்படி ஓடி என்னத்தைச் சாதித்து விடப் போகிறது? எவ்வளவு உழைத்து விடப் போகிறது.

கோண்டாவில் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம்வரை முந்தி முந்தி ஓடி ஒரு நாலுபேரை ஏற்றினால் வரக்கூடிய பணம் உயிர்களுடனான விளையுடன் ஒப்பிடப்படுகிறது என நினைக்கும் போது தான் வேதனையாகவும் வெறுப்பாகவும் இருக்கிறது.

## மனிதம் மாய்ந்துபோன சிரியா உனக்கிது சரியா?

அரும்புகளை தினம்
அள்ளித் தின்னும் சிரிய மண்ணே!
ஆறு ஆண்டுகளாய்
மறந்து போனாய் மனிதம் தன்னை...

உனது பேசும் படங்களால்
எத்தனை பேனா முனைகள்
புதிதாய் பிறக்கிறது
உன்னுடன் யுத்தம் செய்ய...

இலட்சம் இலட்சமாய்- உன்
மண்ணில் கிடப்பது தோட்டாக்களா?
இன்று நேற்று பூத்த பூக்களும்
உந்தன் வீட்டுச் செடிகளுமல்லவா?

ஏன்?
இந்தச் சுடுகாட்டுக் கோலம்
சூடிக்கொண்டாய்?

அலையோடும் அணுவோடும்
அல்லாடிப் போகும்
உன் எச்சங்கள்
மிச்சங்கள் இன்றி- அதை
மீட்காமல் செய்கின்றாய்
யுத்தங்கள்...

வல்லரசுப் போட்டிக்கு- உன்
வயிற்றுப் பசிக்குள் இடம்கொடுத்தாயா?
அவை வளரட்டும் என்று
மறவாதே!
உன் வரலாறு வற்றுகின்றது

ஸ்ரீயோதா
மண்டைதீவு




## தலைவனுக்கு...

பேனா பிடித்த கரங்கள்
பாதியிலே ஆயுதம்
தாங்கியதுதான் ஏனோ?

சிறைப்பட்டிருந்த ஈழத்தமிழ்
அன்னையை மீட்க
கொண்ட கோலம் மாறி
களம் காண நுழைந்திட்ட
நிகரற்ற தலைவன் நீயே...!

அந்நியவனுக்கு அஞ்சி
அதிகாரத்துக்கு அடங்கி
சுயமிழந்து சுகமிழந்து
உடைமை இழந்து
உரிமைகள் இழந்து
இருளில் வாடிய எமக்கு
வெளிச்சம் கொடுத்த
விடிவெள்ளி நீயே...!

ஈழத்தில் கடைசி தமிழனின்
மூச்சு நிற்கும் வரை
அவரின் உயிரில்
உந்தன் மூச்சும் கலந்திருக்கும்...
உனக்காய் விடுவதற்கு
அவன் இரு விழிகளிலும்
கண்ணீர் காத்திருக்கும்...!

த.மோகனரூபன்
சுழிபுரம்

## வாழ்வுக்கு வழி!

வாழ்க்கை ஒருவட்டம்
நீண்ட பயணம்
சுற்றிவர முடியாது
குறுகிய காலத்திலும் முடியலாம்
நீண்டகாலமும் செல்லலாம்
சூரியனை எட்டாத தூரம்
எண்ணுவது எளிது நினைப்பது சுகம்
ஆழ்கடலின் எல்லை எல்லையில்லா வானம்
முடிவில்லா எண்ணம் முடியாத தூரம்
நிலைக்கும் என்று எண்ணுமுன்
முடிந்துவிடும்
முடிந்துவிடும் என்பது நிலைத்துவிடும்
வாழ்க்கை என்பது வசந்தகாலம்
வாழ்வும் தாழ்வும் அவரவர் கையில்
கையில் இல்லாததற்கு
கலங்கிப் பார்க்காதே
கையில் கிடைத்ததை விட்டு விடாதே
வார்த்தை என்பது எண்ணத்தின் முடிவு
வார்த்தையை விட்டு
வாழ்க்கையை பெற்றுக்கொள்
சொல்லிடும் வார்த்தை திரும்ப வராது
அதுவே உன்னை திருப்பி அடிக்கும்

பா.வரன்
குட்டிநகர்

## சங்கதி

மேகங்களை முட்டும் முகில்கள்
தாகங்களை மூட்டும்
பாலைவனங்களை
கடந்துதான் செல்கிறது
ஆனால் கருணைதான் இல்லை
முகில்களுக்கு

அம்மண மேனியுடன்
பச்சிளம் பிஞ்சுகள்
உணவின்றித் தவித்திட
பட்டாசு வெடிகளோ தாராளம்
பகட்டான உலகினில்

சந்திகள் எங்கிலும்
எம்மினம் சந்ததி சங்கதி பேசுது
சரித்திரம் காண்பது எப்போது?

வஞ்சக நெஞ்சங்கள்
வங்கியில் பணம் சேர்த்து
கங்கையில் மூழ்குது
காசிக்குச் செல்லுது

எம்மினப் பெண்களின்
கண்களின் கண்ணீர்
கரைஞ்சு போகுது கடல்ல சேருது
தொலைக்காட்சித் தொடரால

வெளிநாட்டுக் காசில
வேண்டின வாகனம்
வீதி விபத்தில முடிஞ்சு போகுது

போன உசிருக்குப் புறத்தால
பக்கம் பக்கமா மரண அறித்தல்
பறந்து போகுது கரைஞ்சு போகுது

குஞ்சைக் காக்கும்
கோழிகள் போல்-நாம்
கட்டிக் காத்த கலாசாரம்
கவிண்டு கிடக்குது புரண்டெழும்புது

என்ன நடக்குது ஏது நடக்குது
சொல்லத் தெரியல்ல
சோகம் முளைக்குது

நெல்லுக்கிறைத்த நீர்
புல்லுக்குப் போகுது
புல்லு முளைக்குது
நெல்லு மடியுது

பல்லுப் போகுது
சொல்லும் போகுது
பார்க்கும் இடமெல்லாம்
பகட்டாத் தெரியுது

மாவை. நா.கஜேந்திரன்





# மௌனத்தின் தேடல்- 390

## புதியபூமி

போரின் கொடுமையால்
இழந்த வாழ்வை
எண்ணி ஏங்கும் இதயம்
வளங்கள் இழந்து
வறண்ட நிலையுடன்
வாடிய முகங்கள்
சூழ்ச்சியால் வந்த துயரங்கள்
வாட்டி இங்கு வதைத்திட
ஆட்சி பிடிப்போரின்
அக்கிரமப் போரில்
அகப்பட்டோரின் அவலநிலை
பிணைப்பைக்காட்டி
பிள்ளையை அணைத்து
வறுமையின் பிடியில்
வாடியதாயின் குமுறும் நெஞ்சம்
உறவுகள்கூட
உள்ளம் மாறாதோ?
புதிய பூமி உதயமாக
விடிவு சூழாதோ துயரோட...

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி.

## தண்டனை

சிரிக்க மட்டுமே
தெரிந்த
சிரியா குழந்தைகள்
இன்று செயற்கை சுவாசத்துடன்
இங்கு தண்டிப்பது
வேறு மதத்தை அல்ல...

ஆ.நிரூஷினி
யாழ்ப்பாணம்

## மாயம்

நம்மினத்தின் மீது
நாசம் நடந்த போது
கண்களை மூடி
காணாதிருந்த
உலகமையா இது
இந்த கொடூரங்களை
கண்டா
கண் திறக்கும்
வெட்கம் கெட்ட
அரசியல்
மனித வலிமைகூட
உணர மறுக்கிறது

தேன்நிலா
நல்லூர்

## உள்ள உத்தரவு

யாரின் கொடுமையின்
பாடமிது
பெற்றவர் பிரிவின்
சிறிது நேரத்தில்
காமுகர் எய்த
குண்டில்
சிக்கிய குழந்தையின்
தாய்மனம்
பரிதவிக்கின்றது
சேய் மனம்
உயிர் தவிக்கிறது

சி.துஜூஷின்
அல்லாரை

## சோகத்தில் பூமி

வரண்ட பூமியில்கூட
இயற்கை வளங்களை
இறைவன் அமைதியாய்
வாழப்படைத்துவிட்ட போதும்
சோதித்துப் பார்க்க முடியாத
சொற்களை மட்டுமே நம்பி
சொர்க்கத்தில் வாழ்க்கை
சோகத்தில் பூமி! நம்பிக்கை
ஆற்றுப்படுத்தட்டும் மனதை!
அறிவை வாழப் பயன்படுத்திக்
கொள்ளுங்கள்!

இ.ஜெ.பாலன்

## மனிதம் மரணித்துவிட்டது

மனிதம் மரணித்து விட்டது
வல்லரசுகளின் ஆதிக்கத்தால்
பசியின் கோரப் பிடி
பாலகனை வருத்த
சிரிய தேசத்தினில்
சிதறிய யுத்த சன்ன மழையில்
சிசுவை அணைத்து
பசியினைப் போக்க
பால்கொடுக்கும்
அன்னையின்
உயிர்மூச்சு உறைவட
உலக வல்லரசுகளின்
அதிகாரப் பசிக்கு
பலியாவது இவ்
அப்பாவி உயிர்களா

பீ.மேரிசிந்துஜா
பிருசுவில்

## சீழ் வடிக்கும் சிறுசுகள்

நச்சுக் குண்டுகள்- ஆங்கே
நாசூக்காய் வீசப்படுகின்றது
முன்னிப் பருவ காலையின்
நகலொன்றாய்ப் படுகின்றது
கந்தகக் கசிவுகளும்
சல்பர் புளோரைட்டுகளும்
சிறுசுகளைக் கருக்க
சிறகடித்துப் பறக்கும்
மழலைகளும் -இங்கே
சீழ் வடித்துக் கிடக்கிறது
வல்லரசுப் பேய்களும்
கணைகளை வாரி
இறைத்து மகிழுது
அப்பாவிச் சிரியரின்
கொலைக்களத்து
நிணக்கூழை ஐ.நாவோடு
உண்டு களிக்க

முல்லைப்பார்த்தா
கற்சிலைமடு

# மௌனத்தின் தேடல் -391



**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் விமாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 14.03.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

சிறுகதை

மா.சிவா, கரவெட்டி மேற்கு.



# திசைமாறிய பறவைகள்

காலக்களைக் கழுவ எண்ணி தொட்டியை நெருங்கினேன். சனம் முண்டியடித்துக்கொண்டு நின்றது. சற்று நேரத்தின் பின் நானும் கால்களைக் கழுவிக்கொண்டு கோயிலினுள் நுழைகிறேன். என் மனைவி சேட்டை வாங்கிக்கொள்கிறாள். மகள் ராதை என் வேட்டித் தலைப்பை பிடித்துக் கொண்டு நிற்கிறாள். அவள் முகத்தில் இருந்த இரண்டு கயல்களும் கடைகளையே மேய்கிறது.

" அப்பா எனக்கும் பொட்டு வைச்சு விடுங்கோ" என்று சிணுங்கினாள். அவளுக்கு அந்த நேரத்திரல் செய்வதற்கு அதிக வேலைகள் காத்துக் கிடந்தன.

"கொஞ்சம் இரும்மா" என்று மகளுக்கு கூறியபடி சனத்தை விலக்கிக்கொண்டு நடக்கிறேன். அவளும் பின்னாலேயே வந்தாள்.

"அக்கா கொஞ்சம் விலத்துங்க" என்று கூறியபடியே முன்னால் நின்ற பெண்ணை விலத்திக்கொண்டு சந்தனத்தை எடுத்துக்கொண்டு நிமிர்ந்தேன். என் பின்னால் நின்ற அப்பெண்னின் நெற்றியில் படீர் என்று முட்டிக் கொண்டேன். ஐயோ... சொறி... சொறி... என்று நிமிர்ந்து அப்பெண்ணை ஏறிட்டேன்.

என் உதடுகள் வார்த்தைகளைப் பிரசவிக்க மறுத்து துடித்தது. கண்கள் அப்பெண்ணையே நிலை குத்தி நின்றன. சுருக்கென்று முள் ஒன்று இதயத்தில் தைத்து வலித்தது. மனத்தின் ஆழத்தில் ஆனந்தமும் கலக்கமும் ஒன்று சேர்ந்து அழுத்திக் கொண்டிருந்தது. சட்டென்று சுக்கல்களாய் இதயம் நொருங்கி வீழ்ந்து கதறியழுதது. மனம் அவளை விலக மறுத்து துடித்தது.

"அப்பா இஞ்சால் வாங்க" என்று வேட்டியை பிடித்து இழுத்து மகள் என்னை நினைவுக்குள் கொண்டு வந்தாள்.

கீர்த்தனா என்றதும் சட்டென்று வாயடைத்துப் போனாள் அவள். நான்கு கண்கள் நிலைகுத்திய பார்வையை கழற்றாமலேயே நான் மகளோடு நடக்கிறேன். மனம் பின்னோக்கி ஓடுகிறது.

அன்றுடன் பல்கலைக்கழகத்தின் கடைசி நாள் முடியப் போகிறது. நான் இரவோடு இரவாக கீர்த்தனாவுக்காக வார்த்தைகளைச் செதுக்கிக் கொண்டேன். உதிர்ந்த வார்த்தைகளோடு சேர்ந்து இதயத்தில் மலர்ந்த காதலையும் சேர்ந்து உறையில் பத்திரப்படுத்திக்கொண்டேன்.

மூன்று வருடங்கள் நான் அவளுக்காக பயணித்துக் கொண்டிருந்தேன். மாலையிடாமல் மஞ்சள் பூசாமல் கனவுகளோடு வாழ்ந்த காலங்கள் கடந்தோடியது. காலை ஒன்பது மணியிருக்கும். நான் றூமில் நுழையும் போதே என் கண்கள் அவளைத் தேடின. அதே இருக்கையில் அவள் ஒரு தேவதையைப் போல் வீற்றிருந்தாள்.

" விமல் கிளாஸ் முடிய உங்களோட கதைக்க வேணும்" என்றாள்.என் உதடுகள் பிரசவிக்க இருந்த வார்த்தைகளை அவள் உதடுகள் உச்சரித்து ஓய்ந்தது. வெயில் சற்று சூடேற்றிக் கொண்டிருந்தது. பெஞ்சில் நானும் அவளும்...

நீண்டநேரம் வார்த்தைகளை தேடிக்கொண்டிருந்தேன். நான் எடுத்த வந்த மடல் கொப்பியினுள் காத்துக்கிடந்தது.

கீர்த்தனா நான் வந்து... வந்து... உங்களை என்று இழுத்துக்கொண்டிருக்கும்போதே... சட்டென்று என் வாயைப் பொத்திக் கொண்டவள்... அவள் காதலை கண்கள் பேசி உதடுகள் புன்னகைத்து அடங்கின. காதல் முகிழ்ந்து எழுந்தது. கடிதங்கள் பரிமாறின. உள்ளங்கள் இடம்மாறின.

எங்கள் காதலும் இனிதாகவே கடந்தது கொண்டிருந்தது. எனது ஊரின் பக்கத்து ஊர்தான் கீர்த்தனாவினதும் ஊரும். பல்கலைக்கழகத்தில் இருந்து காதல் நதி வற்றாது ஓடிக் கொண்டிருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை நான் கல்லறையாணிடம் போய்விட்டு வாறது வழக்கம். அன்றும் அப்படித்தான் போய்த் திரும்புகையில் " விமல் கொஞ்சம் நில்லடா" என்று பின்னால் இருந்து ஒரு குரல். சட்டென்று சைக்கிள் பிரேக்கை அமத்தி நிப்பாட்டினன்.

"உன்ன எத்தின நாளா சந்திக்கச் சொன்னன். ஏன்டா"

"இல்லடி ராதேயனுக்கு சுகமில்ல. வார்ட்டில. நேற்றுத்தான் வந்தான்" அதுதான்.

மாமாவின்ர மகன் கனடாவால வந்து நிக்கிறான். அவன் என்ன கட்டவேணும் என்று சொல்லியிருக்கான், என்னடா செய்யுறது" என்றாள்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஸ்தம்பித்துப் போனேன். மாமாக்கள் நாளையின்டைக்குப் புறப்படப் போயினம். என்னையும் வரச்சொல்லி நிக்கினம் என்றாள்.

"ஏன் எங்கட பிரச்சினை ஏதும் வீட்டை தெரிஞ்சிற்றோ" ஆரேனும் சொல்லிற்றினமோ" என்றேன்.

"எனக்கு ஒன்றும் தெரியேல்ல. நீ என்ன முடிவெடுத்தாலும் சரி நாளைக்கு இரவுக்குள்ள" என்று கூறும்போதே கண்களில் இருந்து முத்துக்கள் உதிர்ந்து வீழ்ந்தன.

"பயப்படாதடி நான் இருக்கிறன்" என்ற போது என் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள்.

" எப்படியாவது என்னைக் கூட்டிட்டுப் போ" என்று அவள் மன்றாடுவது போல் எனக்குள் ஒடியது. சட்டென்று என் கைகளை முத்தமிட்டவள் "சரிடா நான் வாறன்" என்று சொல்லிவிட்டு சைக்கிளை மிதித்துக்கொண்டு போனாள். நான் அவளையே பார்த்துக் கொண்டு நிற்கிறேன். எனக்குள் அவள் ஆலிங்கனம் செய்து கொண்டிருந்தாள்.

அன்றிரவு ராதேயனும் நானும் அந்த மதவில் அமர்ந்திருக்கிறோம். அவள் இன்னும் வரவில்லை. அவள் வருவாள் நிச்சயம் வருவாள் என்று மனம் இடையிடையே தன்னைத் தான் தேற்றிக்கொண்டு ஆறுகிறது.

"டேய் ராதேயா அவள் வருவாள்தானே" என்று அடிக்கொரு முறை அவனைக் கேட்டுக்கொண்டேயிருந்தேன்.

"ஓமடா மச்சான் வருவாள்" என்று அவன் கூறியபோது என் ஒட்டுமொத்த நம்பிக்கையும் வலுப்பெற்று எழுகிறது.

" டேய் மச்சான் இதில கனநேரமா நிக்கேலாதுடா என்ன செய்வம்" என்றான் ராதேயன்.

"டேய் தற்சலா நாங்கள் போயிட்டா அவள் வந்தா" என்று என் மனம் சட்டென்று இறுகிக்கொண்டது.

" ஹம் ஹம் பார்ப்பம் கொஞ்ச நேரம்" என்ற போது சற்றே என் மனம் அமைதி கொள்கிறது.

நேரம் ஆக ஆக மனதில் பீதி அது பாட்டுக்கு மேற்கிளம்பி வந்து கொண்டிருந்தது. அடிக்கடி படபடத்து ஓயும் இருதயம். மூச்சு அதிகமாகி இருக்கும். பின் அடங்கிப் போய்விடும். இருள் பகலை முழுவதுமாக விழுங்கி விட்டது.

" டேய் ஒருக்கா அவளின்ர வீட்டடிக்குப் போயிட்டு போவமடா" என்ன என்று ராதேயன் கேட்டபோது எனக்குள் இருந்த நம்பிக்கை வேர்கள் ஒவ்வொன்றாய் அறுந்து கொண்டிருக்கத் தொடங்கியது.

" டேய் இதில நிண்டு பாப்பம்" என்றதும் சைக்கிள்கள் வேலியோரமாக சாத்தப்பட்டது.

சுவாமிநாதன் அண்ணை வெளியில மரத்தின் கீழ் லாம்பு வெளிச்சத்தில் ஏதோ செய்து கொண்டிருக்கிறார். பக்கத்தில அவர் மனைவி " கப்பல் கவிழ்ந்தது போல" வெளிச்சத்தில நிலத்தில் நிலை குத்திய பார்வையோடு இருக்கிறாள்.

" அடியே...என்ன வேலயடி செய்யப் பார்த்த"

"என்ர குடியக் கெடுக்கப் பாத்தனியோ கண்டறியாத படிப்பு படிச்சிட்டாளாம்" என்றெல்லாம் பேத்திக் கிழவி திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாள்.

" நீ இதில நிண்டு சத்தம் போடாத. அங்கால அயலட்டைக்கு தெரிஞ்சா மனுஷர் வெளியில தல காட்டேலா" என்று சுவாமிநாதன் பேசிய போது"

" இஞ்ச நீ அவள சாப்பிடக்கேள். சனியன் சாப்பிடாமப் படுக்கப் போகுது"நேரமாக ஆக மனம் ஒரு நிலைப்படாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறது.

" டேய் விமல் வாடா கொஞ்ச நேரம் கழிச்சு வந்து பாப்பம்" என்று ராதேயன் கூறியதும் சைக்கிளில் இருந்த பையை எடுத்து தோளில் போட்டுக்கொண்டு மீண்டும் சைக்கிள் கற்களுக்கிடையே வீழ்ந்து மாட்டு வண்டிலைப் போல அசைகிறது. எந்தச் சலனமும் அற்ற வீதி. நேரம் பத்தைக் கடந்துவிட்டது. சற்று நேரம் கழித்து சைக்கிள் மூச்சை இழுத்துக்கொண்டு ஓய்ந்தது. குளக்கட்டில் இருவரும் தலை வைத்தபடி படுத்திருக்கிறோம். மீண்டும் பல மணிநேரத்தின்பின் சைக்கிள் அசைகிறது. கண்கள் தூக்கத்தை இழந்து அல்லாடுகிறது. வாழ்க்கைக்கான போராட்டம். வாழ்க்கை ஒருமுறை அவளோடு வாழ்ந்துவிட போராட்டம் தொடர்கிறது. எங்களுக்கு முன்பாக ஒரு சைக்கிள் முயல் வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. அது அவர்களுக்காகத்தான் இருக்கவேண்டும்.

மீண்டும் சைக்கிள் நிறுத்தப்பட்டபோது " ஆரெண்டாலும் வரட்டும். இன்டைக்கு மேடர்தான் நடக்கும் என்று சுவாமிநாதர் உச்சஸ்தாயியில் குரலை விட்டுக்கொண்டிருந்தார். அரவம் ஓயவில்லை. மீண்டும் குளக்கட்டை நோக்கி சைக்கிள் திரும்புகிறது.

" அப்பனே வைரவா நீதான் என்று மனம் வேண்டி" அடங்கிப் போகிறது. சைக்கிளை தூணோடு சாத்திவிட்டு குளக்கட்டில் மீண்டும் தலைசாய்த்துக் கிடந்தோம்.

சற்று நேரத்திற்கெல்லாம் கண்ணயர்ந்த போது கண்கள் மூடும் தருணம். பளீர் என்று ஓர் வானின் ஒளி எங்களை நோக்கி வருகிறது. நாங்கள் சட்டென்று எழுந்து உட்கார்ந்தோம். வான் எங்களைத் தாண்டி மின்னல் வேகத்தில் கடந்து போனது.

"டேய் மச்சான் இது அவங்கள்தான். அவள கூட்டிற்றுப் போறாங்களோ" நாத் தழுதழுத்தது. குரல் அடைக்கிறது. சட்டென்று கண்களில் நீர் உகுத்து எழுகிறது. நான் விம்மி விம்மி அழுது கொண்டிருக்கிறேன். " ராதேயா என்று அவன் தோள்களை பற்றிக் கொண்டு சாய்கிறேன்.

" அப்பா வாங்கப்பா வாங்க" என்று மகள் என்னை இழுத்தபோது தூணுக்கருகில் சாய்ந்தபடி இருந்தேன்.

" ஏனப்பா அழுகிறியள்" என்று ராதை கேட்டபோது " இல்லடா திருநீறு கண்ணுக்க விழுந்திடுத்து" என்று பொய்யை சொல்லி ஓய்கிறேன்.

வெயில் நேரத்திற்கு இதமாக வில்வமரத்தின் கீழ் ஒதுங்கலாம் போல் இருந்தது.

" இஞ்சேரப்பா பிள்ளைக்கு ஏதும் வாங்கிக் குடு" என்று சொல்லிவிட்டு மரத்தின் கீழ் ஒதுங்கினேன்.

" என்ன விமல் எப்பிடி இருக்கிறாய்" என்று ஆவலோடு ஒரு குரல்.திரும்பிய பார்வையில் என் கண்கள் முழுமையும் நிறைந்து கொண்டு நின்றாள் கீர்த்தனா. வார்த்தைகள் எழவில்லை. கண்களை வேட்டித் துண்டால் துடைக்கிறேன்.

" சரிடா என்ன செய்யிறது. நாங்க சேர்ந்து வாழ கடவுள் எழுதல" என்று கூறும்போது அவள் கண்களின் ஓரம் நனைந்தது. "கீர்த்தனா வெளிக்கிடுவம்" என்று வாட்டசாட்டமான ஒருவர் அருகில் வந்து கூறினார்.

"இஞ்சருங்கோ இவர் இன்னோட படிச்சவர்" என்று கூறியபோது ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு திரும்பினார்.

" சரி வாறன் போயிட்டு" என்று கூறிவிட்டு அவள் சென்று கொண்டிருந்தாள்.என் மனமும் அவள் பின்னால் ஓடிக் கொண்டிருந்தது. " அப்பா அப்பா இந்தப் பொம்மைய பாருங்க" என்ற ராதையின் குரல் சட்டென்று நிறுத்தியது.

" நான் ராதையைக் கட்டி அணைத்துக் கொண்டேன்" கண்ணீர்த்துளிகள் என் கால்களை நனைக்கிறது.மீண்டும் அடி மனதில் குடிகொள்கிறது அவள் நினைவுகள்...

# முடக்கப்படும் போராட்டங்கள்






**போ**ராட்டம் என்பது மனிதனுக்கு மட்டுமல்ல இந்த உலகில் வாழும் ஜீவராசிகள் அத்தனைக்கும் கடவுள் கொடுத்த வரம்–சாபம்.

போராடாத இனம் வாழ்ந்ததாகவும் போராடும் இனம் வீழ்ந்ததாகவும் சரித்திரம் இல்லை என்கிறது வரலாறு.

ஒரு பெரிய காடு. மாதம் மும்மாரி பொழிகிறது. மரம், செடி, கொடி என செழித்து வளர்ந்து நிற்கிறது. பச்சைப்பசேலென பார்ப்பவர் கண்ணைக் கவரும் அந்தக் காட்டில் அழகிய மானும் இருக்கிறது. அசுர சிங்கமும் இருக் கிறது.

இங்குதான் வாழ்வுக்கான போராட்டம் உச்சம் பெறுகிறது. இறைவனின் படைப்பில் மிச்சம் விளங்குகிறது.

மழை பொழிவதால் பச்சைப் பசேலென இருக்கும் இலை, தளை, புற்களை உண்டு வாழ்கிறது மான். அதே மான்களை அடித்து உண்டு வாழ்கிறது சிங்கம்.

தம்மை அடித்து உண்கிறது சிங்கம் என எண்ணி மான்கள் காடுகளை விட்டு வெளியேறச் சிந்தித்ததில்லை.

உணவு சரியாகக் கிடைக்கவில்லை என்பதற்காய் தன் உணவுக்கான தேடலை விட்டுவிடுவதும் இல்லை சிங்கம்.

சிங்கத்தால் அடித்து உண்ணப்படும் மானினம் அழியும் மிருகப் பட்டியலுக்குள் வரவுமில்லை.

தன் இனம் அடித்துக் கொல்லப்பட்டாலும் தன் இனத்தின் இருப்புக்காய் அத்தனை போராட்டங்களைச் சந்தித்தும் தன் இனத்தின் வளர்ச்சிக்காகவும் விருத்திக்காகவும் பாடுபடுகிறது.


இந்தப் போராட்டம் ஐந்தறிவு படைத்த காட்டில் வாழும் மிருகங்களுக்கே எனின் ஆறறிவு படைத்த இந்த மனித குலத்தின் நிலையினை நினைத்துப் பார்க்கவேண்டியது அவசியமாகின்றது.

ஒரு இனம் கால் நூற்றாண்டுகள் கடந்தும் தன் இனத்தின் இருப்புக்காகப் போராடிக் கொண்டிருக்கிறது.

போராடாத இனம் வாழ்ந்ததாகவும் போராடும் இனம் வீழ்ந்ததாகவும் சரித்திரம் இல்லை என்கின்ற அந்த வார்த்தையைத் தாரக மந்திரமாய்க்கொண்டு இன்றுவரை போராடிக் கொண்டிருக்கிறது.

தமிழரின் ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட ஒரு நல்ல தலைமை இன்றி இன்றுவரை தவித்துக் கொண்டிருக்கிறது தமிழினம்.

காலங்காலமாய் ஆட்சி ஏறிய இலங்கை ஆட்சியாளர்களால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டே வருகிறது.



தீர்வைத் தருவதாகச் சொல்லிச் சொல்லி மிட்டாய்க்கு அழும் குழந்தையை ஆறுதல்படுத்துவது போல ஆட்சி மாற்றங்களின் ஆரம்பங்களில் வெறும் பேச்சளவில் வழங்கப்படும் வாக் குறுதிகளை நம்பி மோசம் போனதைவிட வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்ற மீறல்களை விசாரணை செய்ய வேண்டும் என கோரிக்கை எழ அது ஐ.நா. சபை வரை சென்று தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இவை மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டு நல்லாட்சி உதயமாகும் வரையே நிலைத்தன.

பின்னர் உள்ளகம், வெளியகம் என குழப்பப்பட்டு இப்போது சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்கின்ற நிலையில் வந்து நிற்கிறது. இதை எமது தமிழ்த் தலைமை சொல்வதுதான் வேடிக்கையின் உச்சம்.

எமது அரசியல்வாதிகளை நம்பிப் பிரயோசனம் ஏதும் இல்லை என்றுணர்ந்த மக்கள் தாமாகவே போராடத் தலைப்பட்டு விட்டார்கள்.

காணாமல் போனவர்களின் உறவுகள் மேற்கொள்ளும் போராட்டம் நூறு நாட்களைக் கடந்தும் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. எமது நிலங்களை இராணுவம் கபளீகரம் செய்து வைத்துள்ளது. அவற்றை எமக்குத் திருப்பித் தரவேண்டும் என்று இராணுவ முகாம்களுக்கு முன்பாகவே மக்கள் ஒன்றுகூடி போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

போராட்டத்தில் என் அப்பாவை விடுதலை செய்யுங்கள் மாமா என்று ஒரு சிறுமி பதாகை ஏந்தியபடி ஏங்கி நிற்கிறாள். காணாமல் போனவர்களின் வலியைச் சொல்ல இதைவிட வேறுசந்தர்ப்பத்தைச் சொல்லமுடியாது.

இவை ஒருபுறமிருக்க ஈழத் தமிழனுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்னல்களுக்கு நீதி வேண்டி புலம்பெயர் நாடுகளிலும் புலம்பெயர் தமிழர்களால் பல போராட்டங்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழர் பூர்வீக நிலத்தில் வாழும் உரிமைவேண்டி வடக்குக் கிழக்கில் நடைபெறும் போராட்டங்களுக்கு படையினராலும் புலனாய்வுத் துறையினராலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல அச்சுறுத்தல்கள் விளைவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நாட்டின் குடிமகன் ஒருவன் தனது சொந்த நிலத்தைத் தரச் சொல்லி வீதியில் இருந்து அறவழியில் போராடுகிறான். ஆனால் அவனுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படு கிறது.

அவன் விசாரிக்கப்படுகிறான். விசாரணைக்கு அழைக்கப்படுகிறான்.

ஆயுதம் ஏந்திப் போராடிய ஒரு இனம் அது அடக்கி ஒடுக்கப்பட்டதன் பின்னும் அறவழியில் போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதை இந்த நாட்டின் அரசாங்கமோ எமது தமிழ்த் தலைமையோ அல்லது சர்வதேசமோ கண்டுகொள்ளவேயில்லை.

உணவு, உடை, உறையுள் என்கின்ற அடிப்படை உரிமைக்காகவே அவனின் அறவழிப் போராட்டம் வீதியில் நடந்து கொண்டிருக்கிறது.

அவனின் அடிப்படை உரிமை மீட்புக்கான போராட்டத்திற்கே அச்சுறுத்தல் விடுக்கும் அளவில் ஜனநாயகம் இருக்கிறது.

அண்மையில் இலங்கையின் எழுபதாவது சுதந்திர தின நிகழ்வு நடைபெற்றது.

பிரித்தானியாவில் இந்நிகழ்வு அந்நாட்டு இலங்கைக் கான தூதரகத்திலும் நடைபெற்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இலங்கை மனிதவுரிமை மீறல்களுக்கு பன்னாட்டு நீதி மன்றத்தில் விசாரணை நடைபெற வேண்டும் என வலியுறுத்தி புலம்பெயர் ஈழத் தமிழர்கள் பிரித்தானியாவில் இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ என்கின்ற உயர் படை அதிகாரி சர்வ சாதாரணமாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தமிழர்களைப் பார்த்து கழுத்தை அறுப்பேன் எனச் சைகை காட்டுகிறார்.

இவரின் செயற்பாடு சமூக வலைத்தளங்களில் வெளியாகியதும் அது புலம்பெயர் தேசமெங்கும் பெரும் போராட்டங்களுக்கு வழிவகுத்தது.

உடனடியாக அந்த உயர் படை யதிகாரிக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் வெடிக்க இலங்கை அரசாங்கத்தால் அந்த உயரதி காரி இலங்கைக்குத் திருப்பி அழைக்கப்பட்டிருக் கிறார்.

தமிழினம் தனது உரிமைக்காக ஆயுத வழியில் போரிட்டு தோற்றுப் போனபின்பு நீதிக்காய் அமைதி வழியில் அறவழிப்போர் செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில்,

ஈழத்திலும் தமிழரின் போராட்டங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அவற்றை அடக்கி ஒடுக்கும் அதேவேளை புலம்பெயர் நாடுகளிலும் தமிழருக்கான ஆதரவுப் போராட்டங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நிலையே இருக்கிறதெனின் தமிழினம் இனி எங்கு போவது, யாரை நம்புவது, யார் யார் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பினோமோ அவர்கள் கைவிட்ட நிலையில் தமிழினம் நிர்க்கதியாய் நிற்கிறது.

இந்த நிலை மாறவேண்டும். இவற்றுக்கு ஒரே வழி தமிழர் தம் பிரச்சினையை சர்வதேச தலையீட்டினூடாக பெற்றுத் தருவது மட்டுமே.

-அபிமன்யு-



# சிரிக்காயோ சிரியா

## துடிக்கும் வெள்ளை ஹெல்மெட் போராளிகள்

இளைஞர்களும் இளம்பெண்களும் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த அந்த வளாகத்தில், 50 வயது மதிக்கத்தக்க முதியவர் நுழைந்தார். எல்லோரும் அவரைப் புரியாமல் பார்த்தனர். "நானும் பயிற்சி பெற வந்துள்ளேன்" என்றார். "ஏன்?" என்று கேட்டார், பயிற்சி கொடுப்பவர். "நேற்றுவரை என் மகன் உங்களுடன் இருந்தான். குண்டுவீச்சில் நேற்றிரவு அவன் இறந்துவிட்டான். அவனைப் புதைத்து விட்டு இங்கே வந்திருக்கிறேன்.


அவனது பணியை இனி நான் தானே செய்ய வேண்டும்" என்றார் முதியவர். எல்லோரும் ஓடிப் போய் கண்ணீருடன் அவரைக் கட்டிக் கொண்டனர்.


தங்கள் நாட்டில் ஜனநாயகம் மலர வேண்டும் என்று சிரியாவில் இயங்கிவரும் குழு அது. அவர்கள் போர்ப் பயிற்சி எடுக்கவில்லை. கைகளில் துப்பாக்கி இல்லை. அவர்களுக்கு 'போராளிகள்' என்றோ, 'தீவிரவாதிகள்' என்றோ அடையாளம் இல்லை. அவர்கள் 'வெள்ளை ஹெல்மெட்' தொண்டர்கள். குண்டு வீச்சில் சிதைந்து போகும் கட்டடங்களிலிருந்து, காயம் பட்ட மனிதர்களைக் காப்பாற்றுபவர்கள்.

2013 ஆம் ஆண்டு தொடங்கிய சிரியா உள்நாட்டுப் போர், இந்த மார்ச் மாதத்தில் எட்டாம் ஆண்டைத் தொடுகிறது. இரண்டாம் உலகப் போர்கூட இவ்வளவு நீண்ட காலம் நடந்ததில்லை. போரில் இதுவரை 4 இலட்சத்து 65 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இது வெறும் எண் அல்ல; அத்தனையும் உயிர்கள். 10 இலட்சம் பேர் காயமடைந்துள்ளனர். சுமார் ஒரு கோடியே 20 இலட்சம் பேர், தங்கள் வீடுகளை இழந்து அகதிகளாக அலைகின்றனர். இது, சிரியாவின் மக்கள் தொகையில் சரிபாதி. 'அரபு வசந்தம்' வளைகுடா நாடுகளில் ஜனநாயகப் போராட்டங்களைத் தூண்டிய போது வீதிக்குவந்த சிரிய மக்களை, ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் இரும்புக்கரம் கொண்டு அடக்கினார். வளைகுடா நாடுகளின் உள்நாட்டுப் பகைமை உசுப்பிவிட, பல நாடுகளும் இங்கு போராளிக்குழுக்களை வளர்த்துவிட்டன. அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசுகள் தங்கள் ஆயுதங்களைப் பரிசோதிக்கும் போர்க்களமாக சிரியா ஆகியுள்ளது. அந்த நாட்டு அரசாங்கமோ, விஷ வாயு செலுத்தி சொந்த தேசத்து மக்களையே கொடூரமாகக் கொல்கிறது.

பச்சிளம் குழந்தைகளும், பெண்களும், முதியவர்களும் கொத்துக்கொத்தாக செத்துக் கொண்டிருக்கும் நிலையில், உலகச் சமூகமோ நிராகரிப்பை மட்டுமே சிரிய மக்களுக்குத் தந்திருக்கிறது. இந்த நிலையில், அந்த மக்களின் ஒரே நம்பிக்கை 'வெள்ளை ஹெல்மெட்'. Syrian Civil Defence என்ற பெயரில் செயற்படும் இந்த அமைப்பில், இப்போது 2,790 பேர் உள்ளனர். "அவர்கள் இதற்காகச் சம்பளம் வாங்குகிறவர்களோ, டாக்டர்களோ கிடையாது. நேற்றுவரை கடை ஊழியராக, ஆசிரியராக, மாணவராக, டாக்சி டிரைவராக இந்தச் சமூகத்தில் இருந்தவர்களே. பெண்களும் உள்ளனர். தங்கள் நாடு வளமாக வேண்டும் என்ற வெறியில் வீதிக்கு வந்தவர்கள்.














இப்படி வந்த நிறைய பேர் துப்பாக்கி ஏந்திப் போரிடுகிறார்கள். இவர்கள், ஸ்ட்ரெச்சரைத் தூக்கிக் கொண்டு போய் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவது அதைவிட முக்கியம் எனப் புரிந்துகொண்டு இங்கு வந்திருக்கிறார்கள்" என்கிறார், ஜேம்ஸ் லெ மெசூரியே. முன்னாள் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான இவர்தான், இந்த அமைப்புக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறார்.

சிரியாவின் பெரும்பகுதி, அந்த நாட்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. பல ஆயுதக் குழுக்களின் ஆளுகையில் இருக்கும் அங்கெல்லாம் தினம் தினம் சிரிய மற்றும் ரஷ்ய விமானங்கள் குண்டுமழை பொழிகின்றன. முந்தின நிமிடம்வரை உறுதியாக நின்றிருந்த அடுக்குமாடிக் கட்டடம் அப்படியே சிதைந்து விழுந்து, அத்தனை பேரும் உள்ளே சிக்கிக்கொள்ள, அந்த நிமிடங்களில் போய்க் காப்பாற்றுவது இவர்கள்தான். 'அடிபட்டவர் எந்த இனம் என்று பார்ப்பதில்லை.

ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பற்றது' எனும் இவர்கள், இதுவரை சுமார் 24 ஆயிரம் பேரைக் காப்பாற்றியுள்ளனர்.

ஒரு போர் விமானம் குண்டுவீசி விட்டுப் பறந்து சென்று, 15 நிமிடங்களில் திரும்பி அதே இடத்துக்கு வந்து மீண்டும் குண்டு வீசும்.

அந்த இடைப்பட்ட நேரத்துக்குள் செயற்பட வேண்டும். வலியில் கதறும் குழந்தைகள், காலை இழந்து கதறும் இளைஞர்கள், பயத்திலும் புகையிலும் தடுமாறித் தவிக்கும் முதியவர்கள், கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டு ஓலமிடும் பெண்கள்... யாரை முதலில் காப்பாற்றுவது என யோசித்தால்கூட ஒரு நிமிடம் வீணாகிவிடும். இரண்டு கைகளிலும் இரண்டு குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்து காப்பாற்றிய தொண்டர்களும் உண்டு. இடிபாடுகளில் சிக்கிய பெண்ணைக் காப்பாற்றப் போய் அடுத்த ரவுண்டு குண்டுவீச்சில் சிக்கிச் செத்துப் போனவர்களும் உண்டு. வெள்ளை ஹெல்மெட் அணிந்து வீதிக்கு வந்தவர்களில், நான்கில் ஒருவர் செத்துப்போயிருக்கிறார்கள். நொறுங்கிச் சரிந்த வீட்டுக்குள் சென்று பலரைக் காப்பாற்றிவிட்டு ஆசுவாசமாக வீட்டுக்குத் திரும்பிப் போய், தங்கள் வீட்டில் அத்தனை பேரும் குண்டுவீச்சில் இறந்து கிடப்பதைப் பார்த்துத் திக்பிரமை அடைந்தவர்களும் இவர்களில் உண்டு.

காலித் என்ற இளைஞரின் கதை எவரையும் கலங்கச் செய்யும். இரவு முழுக்க பணி புரிந்துவிட்டுத் திரும்பித், தூங்க நினைத்தவரை போர் விமானத்தின் குண்டு வீச்சு ஓசைதான் எழுப்பியது. அவர் வீட்டுக்குப் பக்கத்து கட்டடம் நொறுங்கிச் சரிந்துகொண்டிருந்தது.

சக நண்பர்களுடன் சென்று 12 பேரைக் காப்பாற்றியவர், தூக்கம் கண்களை அழுத்தியதால், அந்த இடிபாடுகளின் நடுவிலேயே தூங்கிவிட்டார். ஒரு குழந்தையின் அழுகுரல் மெல்லிய ஓசையாகக் கேட்டதும், சட்டென தூக்கம் தொலைந்தது.

நண்பர்களுடன் சேர்ந்து இடிபாடுகளின் நடுவே அந்த அழுகுரலைத் தொடர்ந்து, கட்டடச் சிதைவுகளை அகற்றி, 12 மணி நேரம் போராடிக் குழந்தையை நெருங்கினர். பிறந்து 10 நாட்கள் மட்டுமே ஆன குழந்தை. இலேசான சிராய்ப்புகளுடன் அழுது கொண்டிருந்த அந்தக் குழந்தையைப் பத்திரமாக மீட்டுக் கொடுத்து விட்டு வெளியேற முயன்ற போது, இடிபாடுகள் நொறுங்கி விழுந்து காலித்தைச் சாகடித்தது.

இவ்வளவையும் கடந்த இந்த எளிய மனிதர்கள், அசாதாரணமான செயல்களைச் செய்கிறார்கள். சர்வ வல்லமை படைத்த தலைவர்களோ, சிரியாவுக்கு ஆயுதங்களையும் மரணத்தையும் மட்டுமே பரிசாக அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜூனியர் விகடன்

# அழுகை சிரிப்பு சைகை

# பிடர் கொண்ட சிங்கம் பேச்சிழந்து தவிக்கின்றது

முதுமையடைந்த கருணாநிதி இப்போது குழந்தையாகிவிட்டார். சிரிப்பும் அழுகையுமே அவரது இப்போதைய மொழி. அரசியல் விளையாட்டில் தேர்ந்த கருணாநிதி, பேரனோடு கிரிக்கெட் விளையாடுவதில் மகிழ்கிறார். ‘ஓய்வறியாச் சூரியன்’ என்று தி.மு.க. தொண்டர்களால் கொண்டாடப்பட்டவர். இப்போது கோபாலபுரம் வீட்டில் ஓய்வில் இருக்கிறார்.

ஓராண்டுக்கு முன் ஏற்பட்ட ஒவ்வாமைத் தொற்று, அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட மூச்சுத்திணறல், அதனால் வைத்தியசாலையில் நடந்த அறுவை சிகிச்சை என ஒரே ஆண்டில் கருணாநிதிக்கு ஏற்பட்ட சோதனைகள் அதிகம். அவற்றிலிருந்து மீண்டிருக்கும் கருணாநிதியின் உடல் நிலையில் தற்போது நல்ல முன்னேற்றம் தெரிகிறது என மகிழ்கிறார்கள் குடும்பத்தினர்.

தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன். கருணாநிதியின் ஆத்மார்த்த நண்பர். வீட்டுக்கு அவர் வந்துவிட்டாலே கருணாநிதி உற்சாகமாகி விடுகிறார். அன்பழகனைப் பக்கத்தில் அமரச் சொல்லி சைகை காட்டி, அவரின் கையைப் பிடித்துக்கொள்கிறாராம். அன்பழகன் பேசுவதைக் கூர்ந்து கவனிக்கிறார். அவரால் பதில் சொல்ல முடியாவிட்டாலும், தன்னுடைய உணர்ச்சிகளை சைகையாகப் பதிவு செய்கிறார் கருணாநிதி. அவர்கள் இருவரும் சந்தித்தாலே அங்கே நெகிழ்வுக் காட்சிகள்தான்.

கருணாநிதியையும், தயாளுவையும் அருகில் இருந்து பார்த்துக் கொள்வது அவர்களின் மூத்த மகள் செல்வி. “அப்பா, என்ன வேணடும்?” என்று செல்வி கேட்டால், சைகையாலே பதில் சொல்விடுகிறார். சிலநேரம் பேசுவதற்கு முயன்றாலும், கழுத்தில் போடப்பட்ட துளையால் பேச முடிய வில்லை. அதே போல், மு.க. தமிழரசுகருணாநிதியைப் பார்க்க வந்தால், கருணாநிதி சைகையால் தமிழரசிடம் கேட்கும் முதல் கேள்வி “பேரன் எங்கே?” என்பது தான். தமிழரசின் பேரன் மகிழன்தான் இப்போது கருணாநிதிக்குப் புத்துணர்வைக் கொடுக்கும் மருந்து.

வீட்டின் கீழ்ப் பகுதியில் இருக்கும் தயாளு அம்மாளும், கருணாநிதியும் பத்து நாட்களுக்கு ஒரு முறை சந்தித்துக் கொள் கிறார்கள். கருணாநிதியை தயாளு அம்மாள் பார்த்ததுமே, கண்ணீர் வந்து விடுகிறதாம். அதனால் இருவரையும் அடிக்கடி சந்திக்க வைப்பதில்லை. ஞாபக மறதியால் தயாளு அம்மாள், கருணாநிதிக்கு என்ன நடந்தது என்பதே தெரியாமல் இருக்கிறார்.





கருணாநிதியை மீண்டும் பேச வைப்பதற்கான சிகிச்சையை சமீபத்தில் ஆரம்பித்துள்ளார்கள். இப்போது சிறிய அளவில் முன்னேற்றமும் இருக்கிற தாம்.

கருணாநிதியின் தற்போதைய பொழுது போக்கு என்றால் ரி.வி பார்ப்பது. அதே போல், பேப்பர் படிக்கவும் முயற்சி செய்கிறார். கண் பார்வை தெளிவாக இருப் பதால், எழுத்துகளை வாசிக்க முடிகிறது. அதை தாண்டி அவரை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அவருடைய பேச்சுகள் அடங்கிய சி.டிகளை ரி.வியில் போடுகிறார்கள். அவருடைய குரலை அவரே கேட்கும்போது, முகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள் அவரின் குடும்பத்தார்.

திரவ உணவு உட்கொள்வதால் உடல் எடை குறைந்து விட்டது. ஆனால், மூளையின் செயற்றிறனில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக வைத் தியர்கள் சொல்கிறார்கள். அதனால்தான், அடிக்கடி பார்த்த முகங்களை உடனே கண்டு கொண்டு ரியாக்‌ஷன் காட்டுகிறார் என்கிறார்கள்.

கரகரக் குரலால் தமிழகத்தைக் கட்டிப்போட்ட கருணாநிதியின் குரல் மீண்டும் ஒலிக்கும் என்ற நம்பிக்கையில் “பிடர் கொண்ட சிங்கமே பேசு’ என்று கவிதை எழுதியுள்ளார் வைரமுத்து. அவர் கவிதை உண்மையாகட்டும்!



## வியாசரின் வியாக்கியானம்

*பிள்ளை: அக்கா, அம்மா, அப்பா அவர்கள் சுகமா?*

*காக்கை: பொங்கலன்று வருவாராம்*
*புத்தகம் வாங்கி வருவாராம்*
*பந்தும் வாங்கி வருவாராம்*
*பாவை உமக்குத் தருவாராம்*
*மிகவும் நல்லாய்ப் படியென்று*
*கடிதம் நேற்றுப் போட்டாராம்*
*காகா என்று கரையட்டாம்.*

*பிள்ளை: காக்கையாரே காக்கையாரே எங்கே போனீர்?*

*காக்கை: காணாத இடமெல்லாம் காணப் போனேன்*
*கண்டு வந்த புதினங்கள் சொல்லக்கேளும்*
*செட்டியார் வீட்டிலே கலியாணம்*
*சிவனார் கோயில் விழாக்கோலம்*
*மேரி வீட்டிலே கொண்டாட்டம்*
*மீன் பிடித்துறையிலே சனக்கூட்டம்*
*கண்டிப் பக்கம் குளிரோ கடுமை*
*காங்கேசன்துறையில் வெயிலோ கொடுமை*

நாங்க சின்னப் பிள்ளையா இருக்கேக்க எங்க ரீச்சர் சொல்லித் தந்த பாட்டு இது.

இப்பவும் பசுமரத்தில ஆணியாய் நிலைச்சு நிக்குது.

இப்ப வரைக்கும் காங்கேசன் துறையில வெயில் எண்டும். கண்டியில கடும் குளிர் எண்டும் தான் என்ர நினைவு ஓடுது.

அவ்வளவுக்கு அந்தப் பாட்டு என்னில தாக்கத்தைச் செலுத்திட்டு.

கண்டி எண்டுற வசனத்தை எங்க கேட்டாலும் எனக்கு ‘‘காக்கையாரே...’’ பாட்டுத்தான் ஞாபகம் வரும்.

ஒரு முறையாவது கண்டி போக வேணும் எண்ட நீண்டநாள் ஆசையும் இருந்தது. அது இண்டுவர நிறைவேற வில்லை.

இனி நிறைவேறுமெண்டு நான் சிந்திக்கவும் இல்லை.

ஓம்... கண்டியில இப்ப நடக்கிற கொடுமையள் பற்றித்தான் சொல்லுறன்.

இரண்டு பேருக்குள்ள வந்த வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறி அந்தக் கைகலப்பு கொலையில முடிஞ்சு அது இரண்டு குழுக்களுக்குள்ள மோதலாகி இப்ப இனக் கலவரமா விஸ்வரூபமெடுத்து எரியுது.

கடவுளே உனக்கு உண்மையில் கண் இல்லையோ. இலங்கை ஒரு அழகான சிறிய தீவு. அதிலை மக்களை நிம்மதியா வாழ வைக்க உனக்கு மனமில் லையோ?

காலம் காலமா இனங்களுக்குள்ள முரண்பாட்டை வளர்த்து விட்டு குளிர் காயிறது யார் எண்ட கேள்வியும் இங்க எழத்தான் செய்யுது. எல்லாத்துக்கும் ஒரு முடிவு இருக்குத்தானே?

அடித்தது முஸ்லிம் இனத்து இளைஞன் ஒருத்தன். இறந்தது சிங்கள இனத்து இளைஞன் ஒருத்தன்.

இது எப்படி இனக் கலவரமா மாறும்? இங்கதான் நாம் எல்லோரும் விழிப்பா இருக்கவேணும்.

இந்த வன்முறைகளுக்கு பின்புலமாக யாரோ இருக்கினம். நிச்சயமா அவர்கள் தண்டிக்கப்பட வேணும்.

இரண்டு இனம் அடிபட்டு எரிபட, அதிலை குளிர் காயிறத்துக்கெண்டு ஒரு கூட்டம். சீசீ... இதுவும் ஒரு புழைப்போ.. உலகத்தில முக்கால்வாசி நாடுகளில சண்டைதான் நடக்கு.

எங்கை பார்த்தாலும் ஒரே செத்த செய்திதான். யார் செத்ததெண்டு பாத்தா பொதுமக்கள்.

அதிகார வர்க்கங்கள் தங்கடை அதிகா ரத்தை நிலைநாட்ட வேணுமெண்டா சகாராப் பாலைவனத்திலை போய் சண்டை பிடிச்சுச் சாகுங்கோவன். அப்பாவி மக்களை ஏன் பலிக்கடா ஆக்குறீங்கள்.

இப்ப இங்க இலங்கையில கூட பௌத்த மதகுரு ஒருத்தர் அடிச்சா நாங்களும் அடிப்பம். கொலை செய்தா நாங்களும் கொலைசெய்வம் எண்டு அறிக்கை விடும் அளவில இருக்கு மதகுரு மாரின்ர நிலை. அன்பையும் அறிவையும் மனிதாபிமானத்தையும் மனிதம் எண்டால் என்ன எண்டு மக்களுக்குப் போதிக்கிறவை. இப்பிடி கொள்ளிக் கட்டையை எடுத்துக் குடுத்தா இந்த நாடு விளங்கின மாதிரித்தான்.

# ஐ.பி.எல் தொடருக்காக டெஸ்ட் போட்டிகள் புறக்கணிக்கப்படுகின்றனவா?

VIVO IPL 2018



நேர்த்தியான கிரிக்கெட் போட்டிகளை ரசிக்க வேண்டுமெனில், டெஸ்ட் கிரிக்கெட்டைப் பாருங்கள் என்றுதான் பலரும் சொல்வர். அத்தகைய கிரிக்கெட் போட்டிகளின் எதிர்காலம் என்னவாகும்?" என்ற கேள்வியும் வெகுநாட்களாகவே விவாதிக்கப்பட்டு வருகிறது.

இப்போது அந்தச் சந்தேகம் வலுப்பெற்றுள்ளது. ஐந்து நாட்கள் போட்டி என்பது, ரசிகர்களுக்கு ஒருவித சலிப்பை ஏற்படுத்துகிறது. டெஸ்ட் போட்டிகள் பெரும்பாலானோர் தங்கள் பணிகளில் இருக்கும் நேரத்தில் நடைபெறுவதால் அவற்றை காண்பதற்கான நேரம் கிடைக்கவில்லை எனப் பலரும் காரணம் சொன்னாலும், ஐந்து நாட்கள் முடிவுக்காகக் காத்திருக்கும் பொறுமையை நாம் இழந்து விட்டோம் என்றே சொல்ல வேண்டும்.

இவற்றோடு கூடவே, டெஸ்ட் போட்டிகளின் முடிவுகள் முன்னரே கணிக்கும் வகையில் இருக்கின்றன. பெரும்பாலும் போட்டிகளை நடத்தும் நாடே வெற்றி பெறுவதும், அதற்கு ஏற்ப ஆடுகளங்களை அமைத்துக் கொள்வதும் போட்டியின் சுவாரஷ்யத்தை வெகுவாகக் குறைத்து விடுகிறது.

### டெஸ்ட் கிரிக்கெட்

நிமிடத்துக்கு நிமிடம் அதிகரிக்கும் பரபரப்பு, எந்த நேரத்திலும் ஒரு சிக்ஸர், ஒரு நோ போல், ஒரு மிஸ்ஃபீல்டு ஆட்டத்தின் போக்கை மாற்றுவது ரசிகர்களை வெகுவாகக் கவர்கிறது. கேள்விப்படாத ஒரு நபர் அற்புதமாக விளையாடி ஹீரோ ஆவது, அதிகபட்சம் நான்கு மணி நேரம், அடுத்த நொடியில் என்ன நடக்கும் என்ற பரபரப்பு போன்றவை கிட்டத்தட்ட ஒரு திரைப்படம் பார்ப்பதுபோன்றே இருக்கிறது. டெஸ்ட் கிரிக்கெட் ரசிகர்களால் புறக்கணிக்கப்பட்டது போல், தற்போது கிரிக்கெட் வீரர்களாலும் புறக்கணிக்கப்படுகிறது.

இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ரஷித் மற்றும் பட்ஸ்மேன் ஹேல்ஸ் ஆகியோர் இனி வெள்ளைப் பந்து போட்டிகளில் (லிமிட்டெட் ஓவர் போட்டிகள்) மட்டுமே கவனம் செலுத்தப்போவதாகவும், நீண்டவகை போட்டிகளில் விளையாடப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளனர்.

வீரர்கள் இதுபோன்று சொல்வது புதியதல்ல. ஏதேனும் ஒரு வகையான போட்டிகளில் மட்டும் கவனம் செலுத்தி பயிற்சிகள் எடுத்தால், சிறப்பாகச் செயற்பட முடியும் என்கிறார்கள் அவர்கள்.

அப்படியே இருந்தாலும் அதற்கு டெஸ்ட் கிரிக்கெட்டைத் தேர்ந்தெடுக்காமல் ஏன் இருபது ஓவர் போட்டிகள்? ரசிகர்களுக்குப் பிடித்தது என்று சொல்வதைவிட, பணம் அதிகம் கொழிக்கும், அதிக அளவு கடினம் இல்லாத இருபது ஓவர்களை விட்டுவிட்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவார்களா என்ன? இப்படியே எல்லா வீரர்களும், டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு முழுக்குபோட்டால் தரமான, சிறப்பான, நேர்த்தியான டெஸ்ட் கிரிக்கெட் எதிர்காலத்தில் எப்படி இருக்கும்?

ரசிகர்களின் பொழுதுபோக்குக்காகத்தான் கிரிக்கெட் விளையாடுகிறோம். அதற்குத் தகுந்தவை இருபது ஓவர் போட்டிகள்தான்" என்று அதிரடி மன்னன் கிறிஸ் கெயில், இந்திய தலைவர் விராட் கோலி போன்றோர் பலமுறை சொல்லியுள்ளனர்.

இவர்கள் ரசிகர்களுக்காக விளையாடுவது ஒருபுறம் எனினும், பணத்துக்காக விளையாடுகின்றனர் என்றும் சொல்லலாம்.

ஐ.பி.எல்.போட்டிகளுக்காக இவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தொகை, நாட்டின் தேசிய அணிக்கு வருடம் முழுவதும் விளையாடுவதால் கிடைக்கும் சம்பளத்தைவிட பல மடங்கு அதிகம். தென்னாபிரிக்க அதிரடி வீரர் டி வில்லியர்ஸ், தனக்கு ஓய்வு தேவை என்று ஓர் ஆண்டு முழுக்க டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதை விட்டுவிட்டார். ஆனால், அந்த ஆண்டு நீண்ட தொடரான ஐ.பி.எல் போட்டிகளிலிருந்து அவர் ஓய்வுபெறவில்லை. ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடுவதற்காக டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார் இலங்கையின் வேகப்புயல் மலிங்க. ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடத் தயாராவதற்காக காயம் எனச் சொல்லி வீரர்கள் ஓய்வுபெறுவதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் தங்கள் நாட்டு வீரர்களைக் குறை சொன்னது.




ஐ.பி.எல்.போன்ற போட்டிகளால் வீரர்கள் அதிக அளவில் பணம் சம்பாதிப்பது மட்டுமன்றி, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமும், பெரு முதலாளிகளும், அதைஔிபரப்பும் தொலைக்காட்சி சனல்களும் கொள்ளை இலாபம் பார்க்கின்றன. ஐ.பி.எல் போட்டிகளுக்காக சர்வதேச கால அட்டவணையை இந்திய கிரிக்கெட் வாரியம் மாற்றியமைத்தது.

ஐ.பி.எல்.போட்டிகளுக்கு முன் இந்திய அணிவிளையாடும் தொடர்களைப் பாருங்கள். சிம்பாவே, மேற்கு இந்திய தீவுகள், வங்கதேசம் என ஏதாவது ஒரு சிறிய அணியுடன் விளையாடுகிறார்கள். அந்தத் தொடர்களில் முக்கிய வீரர்களுக்கு பெரிய போட்டிகளுக்குத் தயாராக என்று சொல்லி ஓய்வு வழங்கப்படுகிறது. பெரும்பாலும் இளம் வீரர்களைக் கொண்ட இந்திய அணி, இந்தப் போட்டிகளில் பங்கேற்கிறது. பெரிய போட்டிகளுக்குத் தயாராக, முக்கிய வீரர்கள் ஐ.பி.எல் போட்டிகளின்போது ஓய்வெடுப்பார்களா, என்ன?

ஐ.பி.எல்.போட்டிகள் தொடங்கிய காலத்தில், இந்தப் போட்டிகளுக்குக் கிடைக்கும் வரவேற்பையும் வீரர்களின் சம்பளத்தையும் தெரிந்துகொண்ட பிறகு, டெஸ்ட் கிரிக்கெட்டின் எதிர்காலத்தை நினைத்துப்பார்க்கவே பயமாக இருக்கிறது" என்றார் கவாஸ்கர். ஒருவேளை டோனி, கோலி, பாண்டியா ஆகியோர் ஐ.பி.எல் போட்டிகளுக்குத் தயாராகத்தான், இலங்கையில் நடக்கும் தொடரிலிருந்து ஓய்வுபெறப்பட்டதோ என்னவோ?

என்னதான் இருபது ஓவர் போட்டிகள் அதிக பணத்தைப் பெற்றுத் தந்தாலும், உண்மையான கிரிக்கெட் வீரர் என்கிற பெருமை டெஸ்ட் போட்டிகளில் சாதிக்கும் வீரர்களுக்கே கிடைக்கும். ஐந்து நாட்கள் களத்தில் நின்று போராட உடல்தகுதி மிகவும் அவசியம். அதேபோல் டெஸ்ட் போட்டிகளில் பந்துவீச்சு நுட்பங்கள்,களத்தடுப்பு அமைப்பு போன்றவை வேறு வகையானவை. அங்கு ஓட்டங்களை விட விக்கெட்டுக்களே முக்கியம். ஒரு ஓவரில் சிறப்பாகப் பந்துவீசி, இரண்டு விக்கெட்டுக்களை எடுத்தால் அல்லது மூன்று அல்லது நான்கு சிக்ஸர்களை அடித்தால் குறுகிய ஓவர் போட்டிகளில் வெற்றிக்கு வித்திட்டுவிடலாம். ஆனால், டெஸ்ட் போட்டிகளில், குறிப்பிட்ட ஒரு நேரம் மட்டுமன்றி ஒட்டுமொத்த ஐந்து நாட்களும் ஆதிக்கம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு செஷனையும் வெல்வது போட்டியில் வெற்றி பெற முக்கியமானது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில சிறப்பாக விளையாடிய ஆண்டுகளில்தான் அஸ்வின் மற்றும் விராட் கோலி ஆகியோர் ஐ.சி.சி சிறந்த வீரர் விருது பெற்றனர். விராட் கோலி ஒருநாள் மற்றும் இருபது ஓவர் போட்டிகளில் நீண்ட நாட்களாக சிறப்பாக விளையாடிய போதும், டெஸ்ட் போட்டிகளில் நன்கு விளையாடிய பிறகே சிறந்த வீரராக ஒப்புக்கொள்ளப்பட்டார். மற்ற வகை போட்டிகளில் எங்கு இருக்கிறார் என்றே தெரியாத ஸ்டீவ் ஸ்மித், டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடுவதாலே, ஆகச் சிறந்த வீரராகப் போற்றப்படுகிறார்.

ஆக, கிரிக்கெட்டின் ஆகச் சிறந்த ஃபார்மெட்டாக மதிக்கப்படும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு வீரர்கள் முழுக்குப்போடுவது ஆரோக்கியமான போக்கல்ல! (மு)

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : பாகப்பிரிவினை
இசை : விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர் : டி.எம்.சௌந்தரராஜன்
வரிகள்: கண்ணதாசன்



ஏன் பிறந்தாய் மகனே... ஏன் பிறந்தாயோ...

ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ
ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ
இல்லை ஒரு பிள்ளையென்று
ஏங்குவோர் பலரிருக்க
இங்கு வந்து ஏன் பிறந்தாய் செல்வ மகனே
இல்லை ஒரு பிள்ளையென்று
ஏங்குவோர் பலரிருக்க
இங்கு வந்து ஏன் பிறந்தாய் செல்வ மகனே

ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ

நான் பிறந்த காரணத்தை
நானே அறியும் முன்னே
நீயும் வந்து ஏன் பிறந்தாய் செல்வ மகனே
நான் பிறந்த காரணத்தை
நானே அறியும் முன்னே
நீயும் வந்து ஏன் பிறந்தாய் செல்வ மகனே

கை கால்கள் விளங்காத கணவன் குடிசையிலும்
காதல் மனம் விளங்க வந்தாள் அன்னையடா
காதலிலும் பெருமை இல்லை
கண்களுக்கும் இன்பமில்லை
கடமையில் ஈன்றெடுத்தாள் உன்னையடா

ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ

மண் வளர்த்த பொறுமையெல்லாம்
மனதில் வளர்த்தவளாய்
கண் மலர்ந்த பெண் மயிலை நானடைந்தேன்
நீ வளர்ந்து மரமாகி நிழல் தரும் காலம் வரை
தாய் மனதை காத்திருப்பேன் தங்க மகனே
நீ வளர்ந்து மரமாகி நிழல் தரும் காலம் வரை
தாய் மனதை காத்திருப்பேன் தங்க மகனே

ஆராரோ ஆரோ ஆரிரரோ...
ஆராரோ ஆரோ ஆரிரரோ...

# இந்தியாவில் கொடிகட்டிப் பறக்கிறது யாழ்ப்பாணத்து உணவுக் கடை

மதுரையின் புதிய அடையாளங்களில் ஒன்று "அப்பம் ஹாப்பர்ஸ்" தேங்காயால் ஆசீர்வதிக்கப்பட்ட அசல் இலங்கை உணவுகளை மதுரை கே.கே.நகர், எம்.ஜி.ஆர். சிலைக்கு அருகில் இருக்கிற "அப்பம் ஹாப்பர்ஸ்" உணவகத்தில் ருசிக்கலாம்.

இலங்கையின் பாரம்பரிய உணவான அப்பங்கள், அதற்கு சைட்-டிஷ்ஷாக பொல் சம்பல், சீனிச் சம்பல், நூல் நூலாகப் பிரிகிற பூப் போன்ற இடியப்பம்... அதற்கு சைட்-டிஷ், மணக்க மணக்கத் தேங்காய் சொதி, முட்டை ஸ்டஃப் செய்யப்பட்ட அசல் சிலோன் ரொட்டி, திகட்டாத வாழைப்பழ இனிப்பு ரொட்டி, முழு விளைமீன் ஃப்ரை, மொத்தி மொத்தியான இறால் வறுவல், வித்தியசமான நண்டு ஆம்லேட் என ருசி விரும்புபவர்களுக்கு வேறுபட்ட அனுபவத்தைத் தருகிறது இந்த உணவகம்.

அப்பம் ஹாப்பர்ஸ் உணவகத்தின் உரிமையாளர் சுபா. இலங்கை மருமகள். கணவர் கோபால் அங்கு தொழிலதிபர். சமையலில் தீவிர ஆர்வம் கொண்ட சுபா, பிள்ளைகளின் படிப்புக்காக சொந்த ஊருக்கு வந்தார். கூடவே, லங்கா உணவையும் இங்கே கொண்டு வந்து விட்டார். இரவு உணவு மட்டும்தான். இரவு 7 மணிக்குத் தொடங்கி 11 மணிக்கு முடித்து விடுகிறார்கள். 20 பேர் உட்கார்ந்து சாப்பிடலாம். மிதமான மஞ்சள் விளக்கொளி... சுவர்களில் புன்னகை உதிர்க்கும் புத்தர். சிலோன் மனோகரின் அழுத்தமான குரலில் 'பட்டு மாமியே...' பாடல் உறுத்தாமல் ஒலிக்கிறது. சாப்பிட வருபவர்களை வாசலில் நின்று, யாழ்ப்பாணத் தமிழில் இன்முகத்தோடு வரவேற்று அமர வைக்கிறார் சுபா.

இலங்கையில் பக்கத்து வீடுகளில விசேடங்கள் நடக்கிறப்போ கூப்பிடுவாங்க. போய் சமைச்சுக் கொடுப்பேன். சின்னச் சின்னதா சமையல் செஞ்சோம். மதுரை வந்தபிறகு, என் சமையலைச் சாப்பிடுற உறவுக்காரங்க, நீங்க ஹோட்டல் நடத்தினா நல்லாப் போகும்னு சொல்வாங்க... ஒரு முறை, மதுரையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில, லங்கா உணவுகள் சமைச்சு ஸ்டால் போடுங்கன்னு கூப்பிட்டாங்க. அதுக்குக் கிடைச்ச வரவேற்புலதான் இந்த உணவகத்தைத் தொடங்கினேன்..." என்கிறார் சுபா.



வெரைட்டிகள் அதிகமில்லை. அப்பத்தில் நான்கு வகை... பிளைன், முட்டை, சிக்கன், சீஸ் அப்பங்கள். வெள்ளை வெளேரென அரைவட்டத்தில் அப்பங்கள் ஈர்க்கின்றன. நடுவில் முட்டையோ, சிக்கனோ, சீஸோ. பொல் சம்பல், சீனிச் சம்பல், சைட்-டிஷ். துவையல் மாதிரித்தான். ஆனால், அப்பத்துக்குத் தகுந்த தனித்துவ டேஸ்ட். உதிரி உதிரியாக இருக்கிறது. தேங்காய்த் துண்டுகள், சின்ன வெங்காயம், காய்ந்த மிளகாய், உப்புச் சேர்த்துக் கல்லுரலில் போட்டு இடித்துச் செய்வதுதான் பொல் சம்பல்... சீனிச்சம்பலில் கொஞ்சம் சீனி சேர்க்கிறார்கள். இனிப்பும் காரமும் சரிவிகிதத்தில் இருக்கின்றன.

"பல பண்பாட்டு வேறுபாடுகள் இருந்தாலும், இலங்கையில் எல்லாப் பகுதிகளுக்கும் இருக்கிற பொதுவான அம்சம் உணவுதான். கொழும்பில என்ன சாப்பிடுவாங்களோ, அதைத்தான் யாழ்ப்பாணத்துலயும் சாப்பிடுவாங்க. மசாலாவுல மட்டும் சின்ன வித்தியாசம் இருக்கும். கொழும்பில மல்லி, காய்ந்த மிளகாய் அதிகம் சேர்ப்பாங்க. யாழ்ப்பாண மசாலாவில சீரகம், மிளகு அதிகம் மணக்கும். நிறத்துக்கு எந்தக் கூடுதல் பொருளும் சேர்க்கிறதில்லை. காரம், வாசனை, மென்மை... இது மூணுக்கும் முக்கியத்துவம் இருக்கும். ஏலக்காய், பட்டை, ரம்பை இலையும் மசாலாவில இருக்கும். எங்களோடது யாழ்ப்பாணம் ஸ்டைல். ரம்பை இலை மாதிரி மசாலாவுக்குத் தேவையான பொருட்களை அங்கிருந்து கொண்டு வர்றோம்" என்கிறார் சுபா.




சுபா

முழு விளைமீன்... மிளகு, பூண்டு, இஞ்சி சேர்த்து பேக்கிங் ஸ்டைலில் 'ஃப்ரை' செய்கிறார்கள். இயல்பான நிறம்... கைகளில் ஒட்டாத அளவுக்குத்தான் எண்ணெய் சேர்க்கிறார்கள். மிதமான காரத்தில் கேக் மாதிரி உள்ளிறங்குகிறது. தூத்துக்குடியிலிருந்து வருகிறது சிங்கி இறால். அரைவேக்காடாக வேகவைத்து மிதமான மசாலாவில் பரப்பி வைக்கிறார்கள். லேசான இனிப்பு, மெல்லிய உறைப்பு என வெரைட்டி டேஸ்ட்.

இலங்கை ரொட்டி, அப்படியே மதுரை லாப்பாவின் மறு அவதாரம். பரோட்டாவுக்கு நடுவில் முட்டை மசாலாவை ஸ்டஃப் செய்து முக்கால் வேக்காட்டில் வேகவைக்கிறார்கள். சைட்-டிஷ் தேவையில்லை. பெரும்பாலான இளைஞர்கள் இதற்காகவே அப்பம் ஹாப்பர்ஸ் வருகிறார்கள்.

# புகையிரதம் பிறந்த கதை

தரைவழிப் போக்குவரத்தில் முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்ட மோட்டார் வாகனம் புகையிரதம்தான். கார், பேருந்துகள் இதற்கு பின்னால் அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டவைதான். புகையிரத இயந்திரம் கண்டுபிடிப்பதற்கு சில ஆயிரம் வருடங்கள் முன்பே தண்டவாளங்கள் உபயோகத்துக்கு வந்து விட்டன. மின்சாரம் கண்டுபிடிக்கப்படாத அந்தக் காலத்தில், விறகும் நிலக்கரியும் தான் மனிதனின் முக்கியமான எரிபொருட்கள். சுரங்கங்களிலிருந்து நிலக்கரியை வெட்டி எடுத்து தொழிற்சாலைக்கு அனுப்ப, இரும்பாலான புகையிரதத் தண்டவாளத்தை பயன்படுத்தி, அதன் நிலக்கரி ஏற்றிய வேகன்களை குதிரைகளின் உதவியுடன் இழுக்க ஆரம்பித்தார்கள். இப்படிப் போய்க்கொண்டிருந்த வேளையில் குதிரைக்கு பதிலாக புகையிரதப் பெட்டிகளை இழுப்பதற்கு ஒரு இயந்திரத்தை கண்டு பிடித்தால் என்ன என்று யோசித்தார்கள். அதன் விளைவாக நீராவி இயந்திரம் பிறப்பெடுத்தது. 1829 இல் சுரங்க முதலாளிகள் முன்னிலையில் நீராவி இயந்திரங்களை இயக்கிக்காட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அப்போது இயந்திரங்கள் புறப்பட்ட வேகத்தில் நின்று விட்டன. அதைத் தொடர்ந்து ஜார்ஜ் ஸ்டீவன்சன் கண்டுபிடித்த நீராவி இயந்திரம் கொண்டுவரப்பட்டு இயக்கப்பட்டது. அந்த இயந்திரம் குபுகுபு என்று புகையை கக்கிக்கொண்டு மணிக்கு 47 கி.மீ. வேகத்தில் தண்டவாளத்தில் ஓட ஆரம்பித்தது. கூடியிருந்தவர்கள் பிரமிப்பில் வாயடைத்து நின்றார்கள். இதேபோல் எட்டு நீராவி இயந்திரங்கள் தயாரிக்க ஜார்ஜ் ஸ்டீவன்சனுக்கு ஓடர் கிடைத்தது. அவர் இரவு-பகலாக கடுமையாக உழைத்து 1830 செப்டெம்பர் 15 ஆம் திகதி இங்கிலாந்தின் மான் செஸ்டரில் இருந்து லிவர்பூல் நகருக்கு முதன் முதலான புதிய புகையிரத இயந்திரம் வெள்ளோட்டம் விடப்பட்டது.




ஜார்ஜ் ஸ்டீவன்சன் தயாரித்த எட்டு புகையிரத இயந்திரங்கள் ஒரு சேர அணிவகுத்து இயக்கிக் காட்டப்பட்டன. ஒரு இயந்திரத்தை ஸ்டீவன்சன் இயக்கினார். மற்றொன்றில் இங்கிலாந்து பிரதமர் அதற்கடுத்து ஸ்டீவன்சன் உதவியாளர் ஜார்ஜ், நண்பர் ஹஸ்கிசன் என்ற அதிகாரி ஆகியோர் இயக்கிச் சென்றனர். இந்தக் காட்சியை 50 ஆயிரம் பேர் கூடி நின்று பார்த்தார்கள். ஒரு குதிரை வீரன் முன்னால் கொடி பிடித்தபடி, தண்டவாளத்தின் குறுக்கே யாரும் வராதபடி எச்சரித்தபடி செல்ல அவருக்குப் பின்னே நீராவி இயந்திரங்கள் ஊர்வலமாகச் சென்றன.


இந்த முதல் புகையிரத ஊர்வலத்திலும் ஒரு சோகம் நடந்தது. புகையிரத ஊர்வலத்தின் போது ஒரு புகையிரதம் எதிர்பாராதவிதமாக நின்றுவிட்டது. அப்போது ஸ்டீவன்சனின் நண்பர் ஹஸ்கிசன் தனது புகையிரதத்திலிருந்து கீழே இறங்கிய போது, பக்கத்தில் வந்து கொண்டிருந்த இன்னுமொரு புகையிரதம் மோதி கொல்லப்பட்டார். உலகின் முதல் புகையிரத விபத்து இதுதான். அதுவும் வெள்ளோட்டம் அன்றே ஏற்பட்டது. அதுவரை குதிரை வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகள் புகையிரத வண்டியில் ஏறி பயணிக்க தொழில்புரட்சியும் நாகரிகமும் உச்ச வேகத்தில் வளரத் தொடங்கின.

வி.பிரணவன்-யாழ்ப்பாணம்

# ஈழத்து மண்வாசனையில் மர்மக்குழல் நெடுந்தொடர்








யுத்தம் நிறைவடைந்த பின்னர் பல்வேறு அபிவிருத்திகளின் மூலம் ஈழம் மீண்டெழுந்து வருகிறது. அந்த வகையில் ஈழத்தின் சினிமா சார் செயற்பாடுகளும் படிப்படியான வளர்ச்சியின் அடிப்படையில் குறுந்திரைப்படங்கள், ஆவணப்படங்கள், முழுநீளத்திரைப் படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் என பல்வேறு தொடர் செயற்பாடுகள் சினிமா சார்ந்து ஆரம்பமாகியுள்ளன.

இந்த வரிசையில் ஈழத்தில் முதல் நெடுந்தொடராக IBC தமிழ் தயாரிப்பில் மர்மக்குழல் நெடுந்தொடர் வெளிவருகிறது.

ஈழத்தின் சினிமா சார் செயற்பாடுகளில் மிகவும் முக்கியம் வாய்ந்த இந்த நெடுந்தொடர் தற்போது 100ஆவது பகுதிகளைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது. ஈழ சினிமாவை பொருத்தமட்டில் முற்று முழுதான ஈழத்துக் கலைஞர்கள் ஒன்றிணைந்து ஈழத்து வாழ்வியலை ஈழத்து மொழிநடையில் முதல் முதலாக வெளிக்கொண ரும் படைப்பாக இப்படைப்பு காணப்படுகிறது. இத்தொடரின் தனித்துவத்தை மர்மக்குழலின் தொடக்கப் பாடலும் அதற்கான நடன ஒழுங்கமைப்பும் வெளிப்படுத்தி நிற்கிறது.

படைப்பாளி என்பவன் காலத்தின் தேவை அறிந்து அதற்கு ஏற்ப தன் படைப்புகளை சிருஸ்டிப்பவன் என்பர். இக்கருத்தில் இருந்து சற்றும் மாறாது காணப்படுகிறார் மர்மக்குழலின் இயக்குநர் அபயன் கணேஸ்.

இந்த கதைகள் ஒவ்வொன்றும் கற்பனைக்கு அப்பாற்பட்டதும் அல்ல விதண்டாவாதமாக உட்புகுத்தப்பட்டவையும் அல்ல. கணவன் காணாமல் ஆக்கப்பட்ட மாலதி குடும்பம், மகளை பிரிந்து வாழ்வை தொலைத்த வெற்றி, 90 ஆம் ஆண்டு கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மகாலிங்கம், நாகரிக மோகத்தால் வாழ்வின் அழகியலை உணர மறுக்கும் டென்சி, ஈழ சினிமாவை நேசிக்கும் இளைஞர்கள், தமிழினியை தேடியலையும் மாறன் என சமூகத்தின் அனைத்து பக்கங்களையும் அங்கிருக்கும் பிரச்சினைகளையும் நேர்மையான முறையிலும் நடு நிலமையாகவும் வெளிப்படுத்தி நிற்கும் இயக்குநரின் திறமை பாராட்டுக்குரியதே.



தனித்துவிடப்பட்டு வேலைக்கு போகும் பெண் எதிர் நோக்கும் பாலியல் சுரண்டல், தன் மருமகளின் வாழ்வை வளப்படுத்த நினைக்கும் மாமியார், தன்னுடைய பிரச்சினை விட்டு வெற்றி உதவும் மாறன், மாறனுக்கு உதவி செய்ய நினைக்கும் மித்திரன் மற்றும் திலீபன் என சமூகத்தின் அனைத்து நிதர்சன முகங்களையும் இயக்குநர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.



வெறும் பத்து பேர் கொண்ட இளைஞர் அணி தான் மர்மக்குழலின் அங்கங்கள் என கூறினால் நீங்கள் நிச்சயமாக ஆச்சரியப்படுவீர்கள். இந்த பத்துப்பேரின் அயராத உழைப்பு மர்மக்குழலின் இயக்கம், கதை, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, இசை, ஒலிச்சேர்க்கையாகவிருக்கிறது. கலையினையும் ஈழத்தையும் ஆழமாக நேசிக்கும் இவர்களின் உணர்வு இப்படைப்பின் ஊடாக வெளிவருவதை உங்கள் ஒவ்வொருவராலும் அவதானிக்க முடியும்.

ஐம்பத்தைந்திற்கு மேற்பட்ட நடிகர், நடிகைகள் இத்தொடரில் நடிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தொழில்முறைக் கலைஞர்கள் அல்லர். இருப்பினும் நடிப்பினை தொழில் முறையாக கொண்ட கலைஞர்களுக்கு இணையாக நடிப்பினை வெளிப்படுத்துகின்றனர்.

ஈழத்தில் சினிமா சார்ந்த ஒரு செயற்பாட்டிற்கு முதலீடு செய்வதற்கு பலர் யோசித்துக் கொண்டிருக்கும் போது, ஈழத்தின் த்னித்துவங்களை, அதன் அடையாளங்களை புலம்பெயர் தேசமெங்கும் கொண்டு செல்லும் நல்லெண்ணத்தில் IBC தமிழ் மேற்கொண்ட இம்முயற்சி ஏனைய சினிமா சார் முதலீட்டாளர்களுக்கு மிகப்பெரிய முன்னுதாரணமாகும்.

### மர்மக்குழல் கதைச்சுருக்கம்

மர்மக்குழல் நெடுந்தொடரானது 100ஆவது பகுதியை கடந்து வந்திருக்கிறது.

இதில் மாறன் என்றவர் கனடாவில் இருந்து தன்ரை சின்ன வயசு Friend தமிழினி மேலை இருக்கிற காதலாலை அவரை கலியாணம் செய்ய தாயகத்துக்கு வாறார். இங்க வந்து பாத்த தமிழினி பற்றிய எந்த தகவலும் அவருக்கு கிடைக் கேல்லை. அதோடை அவவின்ரை எந்த தொடர்பும் இல்லாமல் போகுது. குழப் பத்தோடை தமிழினியை தேடும் முயற்சியில ஈடுபடுறான். கடைசி யில தமிழினி இறந்து போனதா கவும் அவளின் தோழி, தமிழினி வேடமிட்டு ஏமாற்றியதாகவும் தெரிந்து கொள்கிறான்.

யாழினி என்ற சுட்டித்தனமான பிள்ளையோடையும் மாமி பூரணத்தோடையும் காணாமல் ஆக்கப்பட்ட கணவனை தேடிக்கொண்டிருக்கிறாள் மாலதி. அவளுக்கு உதவி செய்வதாக நடித்துக்கொண்டிருக்கும் கருணா. மாலதியை அடையுறதுக்கு மாலதியின் பக்கத்து வீட்டில இருக்கிற ரூபியின் உதவியை கேக்கிறார்.

கருணாவின் உண்மை முகம் தெரியாத அனைவரும் கருணாவை நல்லவர் எண்டு நம்பி உதவி செய்யினம்.

உழைக்கிற திமிரால், உண்மையான அன்பை உதாசீனம் செய்கிறாள் டென்சி. HR இன் போலி உறவை நம்பி தடம்மாறிப் போற டென்சியின் செயல்களை அறிந்து கொள்ளும் சர்வா வழமை போலவே இருக்கிறான். திருந்தி விட்டதாக நடிக்க ஆரம்பிக்கிறாள் டென்சி.

கடந்த கால நினைவுகளுடன் காலத்தில் வசிக்கும் மகாலிங்கம் ஐயாக்கு இரண்டு பிள்ளையள், சுதா, நளாயினி இந்த குடும்பத்துக்கு உதவியாக இருக்கிற சிவம் சுதா மேல் தனிப்பட்ட அன்பை அடிக்கடி காட்டுறார்.

வீதியோரத்தில் பைத்தியமா இருந்த வெற்றி, மாறனுக்கு தன்ரை கதையை சொல்கிறான். அப்ப தான் வெற்றிக்கு ஒரு குடும்பம் இருக்கிறது தெரிய வருகுது. மகளை தேடுற வெற்றிக்கு தான் உதவி செய்வதாக மாறன் சொல்கிறான்.

*(பொ.சோபிகா)*

# ஓவியா இப்படித்தான் மனம்திறந்த ஆரவ்





கடந்த ஆண்டு மக்களால் அதிகம் பேசப்பட்ட ஒரு நிகழ்ச்சி என்றால் அது பிக்போஸ்தான்.

அதில் போட்டியாளராக அறிமுகவானவர்தான் ஆரவ். இதில் போட்டியாளராக பங்கேற்ற நடிகை ஓவியாவும் ஆரவும் நெருங்கி பழகினர். ஒரு கட்டத்தில் இருவருக்கும் காதல் இருப்பதாக கூறப்பட்டது. ஆனால் சில காரணங்களால் ஓவியாவிடமிருந்து ஆரவ் விலகினார்.

இதனால் மனமுடைந்து ஓவியா தற்கொலை வரை சென்று அதன் பின் நிகழ்ச்சியிலிருந்து வெளியேறினார். பரபரப்பாக பேசப்பட்ட இந்த விடயம் தற்போது மக்களால் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தனக்கு ஏன் ஓவியாவை பிடிக்கும் என்பதற்கான காரணத்தை ஆரவ் மனம் திறந்து பேசியுள்ளார்.

நாம் நாமாக இருப்பது இந்த உலகத்தில் மிகக் கஷ்டமான விடயம். ஏதோ ஒரு வகையில் பெரும்பாலான இடங்களில் நாம் நடித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

ஆனால் அப்படி இல்லாமல் ஓவியா எல்லா இடத்திலும் அவராகவே இருக்கிறார். அதனால் தான் அவரை மக்களுக்கு பிடித்திருக்கிறது. ஆர்மி அளவுக்கு ரசிகர்கள் கிடைக்கும் அளவுக்கு புகழ் பெற்றதற்கும் இதுதான் காரணம் என்று கூறியுள்ளார் ஆரவ்.

# வடசென்னை பற்றிய சில தகவலை வெளியிட்ட ஐஸ்வர்யா ராஜேஷ்



வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் தயாராகி வரும் படம் வடசென்னை. ரசிகர்களிடம் பெரிய எதிர்ப்பார்ப்பில் இருக்கும் இப்படத்தின் பஸ்ட் லுக் அண்மையில் வெளியாகி ரசிகர்களிடம் அமோகமான வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில் வட சென்னை படம் பற்றி சில விடயங்களை ஒரு பேட்டி மூலம் பகிர்ந்துள்ளார் ஐஸ்வர்யா ராஜேஷ். வட சென்னை மிகவும் வித்தியாசமான அனுபவத்தை கொடுத்தது. ஒரு செட் போட்டு படப்பிடிப்பு நடத்தாமல் வட சென்னை சென்று நிஜ இடத்திலேயே படப்பிடிப்பு நடத்தியது எல்லாம் புதிய அனுபவம்.

படம் முழுவதும் அந்த இடத்திலேயே நடந்தது செட் இல்லாமல். பேசுவது கூட வட சென்னை பாஷையிலேயே பேசியுள்ளோம், பக்கா வட சென்னை படம் இது என்றார்.

# நல்லாட்சியின் நல்லிணக்கம்

## திகனவில் தீக்கிரை!







நாடு, வன்முறைச் சம்பவங்களால் பெரும் அல்லோல கல்லோலப்பட்டு சற்று அமைதியடைந்துள்ளது.

ஊடரங்குச் சட்டம்; ஆயுதப் படைகள் குவிப்பு ; ரோந்து; கைது நடவடிக்கைகள் என்பன இந்த அமைதிக்கு வித்திட்டுள்ளது.

ஆனால், இந்த அமைதிச் சூழல் நிரந்தரமானதல்ல. நிரந்தரமானதாக மாற்றப்பட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் அவா. இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை சமாதானச் சூழலுக்கு சங்கடங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

இலங்கையைப் பொறுத்த மட்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பானது.

பல் இனச் சமுதாயங்களைக் கொண்ட நாட்டில் முரண்பாடுகள் இருக்கத்தான் செய்யும். முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருதல் என்பது உடனடியாகச் சாத்தியமாகக் கூடியதல்ல.

நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தையும் சகோதரத்து வத்தையும் ஏற்படுத்த அரசாங்கம் பாடுபட்டாலும் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் மனநிலை உள்ளவர்கள் உள்ளவரை அவை சாத்தியப்படாது என்பது நிதர்சனம்.

நல்லாட்சி என்று சொல்லப்படும் மைத்திரி – ரணில் தலைமையிலான இந்த அரசாங்கம் நல்லிணக்கம் மீது அதிகளவு கரிசனை கொண்டுள்ளது.

மகிந்த ஆட்சிக் காலத்தில் நிலவிய நெருக்கடிகள் தற்போது இல்லை. குறிப்பாக தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் முற்றுமுழுதாக இல்லாமல் போகவில்லை என்றாலும், குறைந்துள்ளன.

அதேவேளை இந்த அரசாங்கம் மீது தமிழ் மக்கள் எத்தனையோ எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தனர். அவற்றில் சிலவற்றில் சிறு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பலவற்றை தொட்டும் பார்க்கவில்லை.

குறிப்பாக, காணி விடுவிப்பு விடயத்தில் ஒரு சில ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் காணி விடுவிப்பை வலியுறுத்தி மாதக்கணக்கில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆயுதப் படைகளின் ஆக்கிரமிப்பில் தமது பூர்வீகக் காணிகள் கையகப்பட்டுக் கிடக்க தாமோ நலன்புரி முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் கால் நூற்றாண்டுக்கு மேலாக அகதிகளாக வாழ்ந்துவரும் நிலை என்ற ஏக்கத்துடன் காலத்தைக் கடத்துகின்றனர்.

சர்வதேச விசாரணை , காணாமல் ஆக்கப்பட்டோர், தமிழ் அரசியல் கைதிகள், போரால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்து பிறரின் உதவிக்காக ஏங்குவோர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்று இந்தப் பட்டியல் நீண்டு செல்கிறது.

இது ஒருபுறம் இருக்க, சிறுபான்மையினர் என்று சிங்களவர்களின் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் தமிழ் - முஸ்லிம் மக்கள் தங்களுக்குள் பிளவுபட்டு அல்லது பிளவு படுத்தப்பட்டு நிற்கின்றனர்.

அண்மையில் அம்பாறை அட்டப்பள்ளம் பகுதியில் தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக மயான பூமியாக பாவித்துவந்த காணியை முஸ்லிம் நபரொருவர் தனக்குச் சொந்தமானது என எல்லையிட்டு உரிமை கோரியுள்ளார்.

அதனைத் தட்டிக்கேட்ட தமிழ் மக்கள் 21 பேர் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புபடாத பலரும் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிங்களமா? முஸ்லிமா? என்று வரும்போது சிங்களவர்களுக்கு ஆதரவாகவும் தமிழா? முஸ்லிமா? என்று வரும் போது முஸ்லிம்களுக்குச் சாதகமாகச் செயற்படுவதையும் பொலிஸார் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸார் தமது பொறுப்பை உணராது இனவாதச் சிந்தனையுடன் செயற்படுவதை ஏற்கமுடியாது.

சிங்களப் படையாக முப்படை இயங்குவதைப் போன்று பொலிஸாரும் இயங்கினால் நல்லிணக்கம் நாசமாய்போய் விடும்!

பக்கம் சாராது சட்டத்தில் உள்ளது படி செயற்பட வேண்டும். பெரும்பான்மையின் பக்கம் நின்று செயற்படுவதை பொலிஸார் தவிர்க்க வேண்டும்.

நல்லாட்சி அரசின் காலத்தில் கண்டி திகன பகுதியில் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு தீ வைத்து சேதப்படுத்தப்பட்டது.

இங்கே தீயில் கருகிச் சாம்பலாய்ப் போனது முஸ்லிம் மக்களின் வர்த்தக நிலையங்களோ , வீடுகளோ அல்ல.

நல்லிணக்கத்திற்கு என்று பிரத்தியேகச் செயலகம் ஒன்றை உருவாக்கி அதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைத் தலைவராக நியமித்து தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சராகவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் திட்டங்களே!

அம்பாறையில் மா உருண்டையில் ஆரம்பித்த பிரச்சினை திகன வரை சென்று ஊரடங்கு உத்தரவு; உயிர்ச்சேதம் ; பொருட்சேதம் ஏற்பட்டு இன முரண்பாடுகளுடன் உள்ளது.

கடந்த 27 ஆம் திகதி அதிகாலை வேளை அம்பாறையிலுள்ள முஸ்லிம் ஹோட்டலுக்குச் சென்ற சிங்கள இளைஞர்கள் சிலர் மாட்டிறைச்சி கொத்து கேட்டுள்ளனர்.

அதற்கமைய வழங்கப்பட்ட அந்தக் கொத்துரொட்டியில் மாத்திரை கலக்கப்பட்டதாகவும் அந்த மாத்திரை இனவிருத்தியைக் கட்டுப்படுத்தும் மாத்திரை என்று உடனடியாக குற்றம்சாட்டப்பட்டு அங்கு பணியாற்றிய ஒருவரை வைத்து காணொலியும் சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்பப்பட்டது.

மாத்திரை விவகாரம் பூதாகரமாக உருவெடுத்து பெரும் கலவரத்திற்கும் வித்திட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் நிறுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு உடனடியாக பிணை வழங்கப்பட்டமை முஸ்லிம்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்ற பாரிய கலவரத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக பிணையில் விடக்கூடிய வகையில் பொலிஸார் குற்றச்சாட்டு பதிவு செய்தமையால் முஸ்லிம் மக்கள் மனவேதனையடைந்தனர். அதேவேளை பொலிஸார் மீது நம்பிக்கையிழந்து விட்டோம் என்பதை அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் உள்ளிட்ட முஸ்லிம் அரசியல்வாதிகளும் வெளிப்படுத்தியிருந்தனர்.

அம்பாறையில் கலவரம் நடந்து ஒருவாரத்திற்குள் கண்டி திகனப் பகுதியில் (கடந்த 5 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியவில்) முஸ்லிம்களின் சொத்துக்களுக்கு தீ மூட்டப்பட்டது.

இந்தத் தீ திகனவுடன் நின்றுவிடாது மக்கள் மனங்களில் ஆழமாகப் புரையோடிக்கிடக்கும் இனவாதத்துடன் கலந்து, கண்டி முழுவதும் பரவி, மட்டக்களப்பு , அம்பாறை, கல்முனை, வவுனியா வரை வந்தது.

இதில், பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் பல எரிந்து சாம்பலாகின. கண்டி திகனவைச் சேர்ந்த 23 வயது முஸ்லிம் இளைஞன் தீயில் கருகிப் பலியானான். தனது குடும்பத்ினரை காப்பாற்றும் முயற்சியில் வெற்றிபெற்ற அந்த இளைஞன் தன் உயிரைப் பறிகொடுத்தான்.

சொத்துக்கள் அழிவு! உயிரிழப்பு இடம்பெற்ற பின்னர் பொலிஸார் குவிக்கப்பட்டு, அதிரடிப் படை , இராணுவம், கடற்படை என்பன கவச வாகனங்களுடன் கண்டியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள சூழ்நிலையில் நேற்றுவரை 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறையில் நடந்தது போன்று இவர்களுக்கும் உடனடியாகப் பிணை வழங்கப்படுமாக இருந்தால் கலவரத்தை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை; மாறாக கலவரத்தை ஊக்குவிக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

அரசு மீதும் அரச படைகள் - சட்டதிட்டங்கள் மீதும் தமிழ் மக்கள் எப்போதோ நம்பிக்கை யிழந்து விட்டனர். ஆனால், முஸ்லிம் மக்கள் அவ்வாறில்லை. சிங்களப் படைகள் மீது அவர்கள் பற்றுக்கொண்டுள்ளனர்.

அதனால் தான் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக உளவு வேலை பார்த்தனர். இதனை சிங்களக் கூட்டுப்படைகளின் பிரதானி ரியல் அட்மிரல் ரவீந்திர விஜேயகுணவர்த்தன உறுதிப்படுத்தியதோடு, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உளவு பார்த்து (மொழியறிவு மூலம்) உதவிய முஸ்லிம் மக்கள் மீது வன்முறைகள் தூண்டப்பட்டது கவலையளிப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆக, சிறுபான்மை - தமிழ் பேசும் மக்களாக ஒன்றுபட்டு நிற்பதைக் காட்டிலும் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியை (மகிந்த ஆட்சிக்கு வந்தாலும் மைத்திரி ஆட்சிக்கு வந்தாலும்) பெறுவதில் முஸ்லிம் தலைமைகள் காட்டும் கரிசனை போன்று, சிறுபான்மைக்குள் சிறுபான்மையாக தமிழ் மக்களை மாற்றவும் சிங்களப் படைகளுக்கு ஆதரவாகவும் செயற்படும் முஸ்லிம்களுக்கு ஏற்படும் துன்பத்தை துடைத்தெறிய அரசு காட்டிய அக்கறையை அனைத்து சிறுபான்மையினர் மீதும் காட்ட வேண்டும்.

அதேவேளை இனிவரும் காலங்களில் இனவன்முறைகள் ஏற்படுவதைத் தடுக்க காத்திரமான நடவடிக்கைகளை அரசு எடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அனைத்து நடவடிக்கைக்கும் மகிந்த அணி மீது பழி சுமத்திவிட்டு அரசால் தப்பிக்க முடியாது.

வன்முறைகளால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உரிய நிவாரணத்தை அரசு வழங்க வேண்டும்.

கண்டி மாவட்டத்தில் கட்டுகஸ்தோட்டம், உருரெசபிட்டிய, தெல்தெனிய, திகன போன்ற பகுதிகளில் வன்முறை ஏற்படக் காரணமாக இருந்த சிங்கள இளைஞனான குமாரசிங்கவின் மரணம் தொடர்பிலும் உரிய விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தோடு பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ள குமாரசிங்கவின் தாயார் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.


வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது ஏற்பட்ட சிறு விபத்துச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அடித்துப் படுகொலை ( குமாரசிங்க-வயது 35) செய்யப்பட்ட விவகாரத்தை சாதாரணமான சம்பவமாகக் கருத முடியாது.

அந்த வன்முறைச் சம்பவத்துடன் முஸ்லிம் இளைஞர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் உரிய விசாரணை முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் தான் சட்டம் ஒழுங்கு மீது சகல மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும். நம்பிக்கை ஏற்படுத்தப்படுமா?

எஸ்.ஆர்.கரன்

facebook

# யானையின் அடக்கம்



கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றி யல்பட்டை தீட்டிக் கொண்டு சுத்த மாக வந்து கொண்டிருந்தது.

ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது வரும் போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி வாலை ஆட்டிக்கொண்டே வந்தது.

யானை ஒரு ஓரத்தில் ஒது ங்கி நின்று அதற்கு வழி விட் டது. அந்தப் பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றி யிடம், பார்த்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்து விட்டது! என்று சொல் லிச் சிரித்தது.

அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை, அப்படியா, நீ பயந்து விட்டாயா? என்று கேட்டது. அதற்குக் கோவில் யானை கீழ்க் கண்டவாறு பதில் சொன்னது,

நான் தவறி இடறி விட்டால் பன்றி நசுங்கி விடும். மேலும் நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என் மேல் விழுந்து நானும் அசுத்தமாகி விடுவேன். இந்தக் காரணங் களால், நான் ஒதுங்கிக் கொண் டேன்.

தன் பலம், பலவீனம் தெரிந்த வர்கள் அடக்கத்தில் சிறந்தவர் களாக இருப்பார்கள்.

# கணவன் - மனைவி



மனைவி :- மாமூ! நான் உங்களை கல்யாணம் பண் ணிக்க ரொம்பவே கொடுத்து வெச்சிருக்கேன்னு ஊருக் குள்ள பேசிக்கறாங்களாம்!

கணவன்:- குட்டிம்மா! இப்ப புரியுதா, இந்த மாமு வோட மகிமை!

மனைவி:- க்கும்! நீங்க என்னை கல்யாணம் பண் ணிக்க, என் அப்பாக்கிட்ட ரொக்கப்பணம், நகை நட்டு, பாத்திர பண்டம், சொத்து பத் துன்னு ஏகப்பட்டதை வாங் கினதைத்தான் அப்படி சொல் றாங்க!

கணவன் :- ஹாஹா ஹாஹா ஹாஹா ஹாஹா

கணவன் :- இப்பத்தான் எனக்கு ஒரு உண்மை புரியுது!

மனைவி :- "வரதட்சணை" வாங்கறது தப்புங்கறதுதானே!

கணவன்:- அட, அதில்ல! உன்னோட டார்ச்சரை எல் லாம் தாங்கிக்கிட்டு, எங்கே யும் ஓடிப் போயிடாம, உன் கூட மாரடிக்கத்தான் உங் கப்பன் இதை எல்லாம் எனக்கு கொடுத்திருக் கிறாருங் கிறது!

மனைவி :- ஹாஹா ஹாஹா ஹாஹா ஹாஹா

# பணக்காரன்

ஒரு பணக்காரனும் அவன பெண்டாட்டியும் ஒரு பூசணித் தோட்டம் வழியா நடந்து போய் கிட்டு இருந்தாங்களாம். அந்தம் மாவுக்கு பூசணிக் காய் மேல ஆசை வந்துச் சாம்.

இப்பவே வேணும்னு அடம்புடிசாங்களாம். சுற்றும் முற்றும் பார்த்திட்டு ஒரு காயை அந்த பணக்காரர் பறிச்சுகிட்டு வீட்டுக்கு போய் குழம்பு வச்சு சாப்பிட்டாங்களாம்.

ஊரில் அரசல்புரசலாக பணக் காரர் பூசணிக்காயைத் திருடி விட்டார் என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தார்களாம். இதை மறைக்க ஊரில் உள்ள எல்லோரையும் அழைத்து வடை பாயாசத்துடன் சுவை யான விருந்து ஒன்றை அந்த பணக்காரர் வைத்தாராம்.

இவ் வளவு பணம் செலவு செய்து விருந்து வைக்கும் இவரா கேவலம் ஒரு பூசணிக காயைப் போய்த் திருடி யிருப் பார், இருக்கவே இருக்காது" என்று பேசிக்கொண்டார் களாம். இதுதான் முழுப்பூ சணிக்காயை சோற்றில்மறைத்த கதை.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1353

Search for people, places and things | Nagendram Home

### சுதன்



மரமண்டை என்கிறது இது தானோ?


### குணவதி

உடல் நிலை சரியில்லை என்றால் மருந்து தேவையில்லை



அடிக்கடி வந்து தொட்டுப் பார்க்கும் அம்மாவின் கை போதும்...!

### குணா



என்னையா பெரிய ஆடி கார்? இரண்டு பேருக்கு மேல படுக்க முடியல

### சுதர்சினி

வாய்ப்பும் நேரமும் டீயில தொட்டுச் சாப்பிடுற பிஸ்கட் மாதிரி



டைமிங் மிஸ் ஆச்சினா அவ்வளவுதான்...

### ராஜினி

வெளியூர்ல வேலை பார்க்கிற எல்லோரும் லீவுக்கு வீட்டுக்குப் போறப்ப...



மைன்ட்ல இருக்கிற முதல் விசயம் சோறுதான்...

### குணால்

பெண்கள் வயசு கம்மியா தெரிய ஹேர்கட், மேக்கப், பேசியலுனு ஆயிரம் பண்ணனும்



பட் ஆண்களுக்கு மீசையை ட்ரிம் பண்ணாலே இளமையாத்தான் தெரிவாங்க...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 123



**கேள்வி: கர்ப்பிணித் தாயாகிய நான் எனது உடல் நிறையைப் பேணுவது முக்கியமானதா?**

**பதில்:** கர்ப்பிணித் தாய்மார்களும் உடற்பருமன் பற்றி அக்கறை கொள்வது முக்கியமானதாகும்.

உடற்திணிவுச் சுட்டி அதிகரிக்கும் போது ஆபத்தான சிக்கல் நிலைகள் தாய்க்கும் சிசுவிற்கும் ஏற்படும் வாய்ப்பும் அதிகரிக்கிறது. உடற்திணிவுச் சுட்டி 35 இலும் கூடியவர்கள் மகப்பேற்றில் நிபுணரின் நேரடி கவனிப்பிற்குட்படுத்தப்பட வேண்டியவர்களாவர்.


- சுவாசப்பை மற்றும் கால்களிலுள்ள நாளங்களில் குருதி உறைதல் இந்த நிலை மரணத்திற்கு இட்டுச்செல்லலாம்.
- கர்ப்பகால நீரிழிவு — உடற்பருமனானோர் சாதாரண உடல்நிறை கொண்டவர்களை விட மூன்று மடங்கு கூடிய வாய்ப்புக் கொண்டவர்கள்.
- கர்ப்பகால உயர்குருதி அழுத்தமும் சிறுநீரில் புரதம் வெளியேறலும் (PRE-ECLAMPSIA)


**உடற்பருமனான தாய் பெற்றெடுக்கும் சிசு பின்வரும் பாதிப்புகளை எதிர்நோக்கலாம்.**

- சிசுவின் நரம்புத் தொகுதிப் பாதிப்புக்கள்.
- கருச்சிதைவு - உடற்பருமனானோரில் 25 வீதமானோர் கருச்சிதைவுக்கு உட்படுகின்றனர்.
- உடற்பருமன் கூடிய சிசுவை ஈன்றெடுத்தல் (4 Kg இலும் கூடிய)- இது தாயின் பிறப்பு வழிச்சேதம், சிசுவின் நரம்புத் தொகுதி பாதிப்பு என்பவற்றை ஏற்படுத்தும்.
- சிசு இறந்து பிறத்தல் அல்லது பிறந்தவுடன் இறத்தல்- சாதாரண உடல்நிறை கொண்ட தாய்மாரை விட உடற்பருமனானோரில் இருமடங்கு அதிகம்.
- பிள்ளையும் உடற் பருமனாதல் மற்றும் நீரிழிவு நோய்க்குட்படும் வாய்ப்பு அதிகம்.

**உடற்பருமனாதலால் பிள்ளைப் பேறின்போது ஏற்படும் ஆபத்துக்கள்.**

குறைமாத / முதிராக் குழந்தைப்பேறு. நீண்ட நேரப் பிரசவம். சிசுவின் நரம்புத் தொகுதிப் பாதிப்பு. அவசர சிசேரியன் சத்திர சிகிச்சையும் ஆபத்தான பின் விளைவுகளும் சத்திர சிகிச்சைக் காயத்தில் கிருமித்தொற்றேற்படல். மயக்க மருந்தூட்டலில் ஏற்படும் ஆபத்தான சிக்கல் நிலைகள். குருதிப்பெருக்கு.





**கர்ப்ப காலத்தில் ஏற்படும் உடற் பருமனாதலை தவிர்க்கும் முறைகள்**

**1. போசாக்கான உணவு**

தானிய உணவு, கிழங்கு வகை, அரிசி போன்ற மாப்பொருள் உணவு, பிரதான உணவு மற்றும் இடை உணவு வகைகளை முறைப்படுத்தல் . கொழுப்பு மற்றும் எண்ணெய் கூடிய உணவு.அதிகளவு சீனி சேர்த்த உணவு ஆகியவற்றைக் குறைத்தலும் நிறுத்தலும்.

- நார்ச்சத்துக்கொண்ட உணவுகளான அவரை, பழங்கள், காய்கறிகள் ,முழுத்தானியம், தீட்டாத அரிசி ஆகியவற்றை அதிகம் பயன்படுத்தல்.
- உணவுஉண்ணாதுவிடுதல். விரதமிருத்தல் என்பவற்றைத் தவிர்த்து மூன்று வேளையும்முக்கியமாக காலை உணவை உண்ணுதல் வேண்டும்.

**2. உடற்பயிற்சி மேற்கொள்ளல்**

- நடத்தல், துவிச்சக்கரவண்டி ஓடுதல், நீந்துதல், தோட்ட வேலை, மாடிப்படி ஏறுதல் நல்ல உடற்பயிற்சிகளாகும். இவற்றை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும்
- உடல் உழைப்பில்லாத நீண்ட நேர வேலைகளைத்தவிர்த்தல். (தொலைக்காட்சி பார்த்தல்)
- உடற்பயிற்சியை 15-30 நிமிடங்கள் ஒவ்வொரு நாளும் ஒழுங்காக மேற்கொள்ளலாம்.

Dr:யோ. சிவாகரன்







**கேள்வி : எனது உடல் தொடர்ந்தும் மெலிவாகவே இருக்கின்றது. எவ்வளவு தான் சத்தான உணவுகளை எடுத்தாலும் பயனில்லை. இதற்கு என்ன காரணம்? எனது உடல் நிறையை கூட்டிக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?**

முதலில் நீங்கள் எப்பொழுதும் மெலிவானவரா அல்லது உங்கள் நிறை அண்மைக் காலமாக குறைவடைந்து செல்கின்றதா என அறிய வேண்டும். நிறை குறைவதற்கு சில நோய் நிலைமைகளும் காரணமாகலாம்.

உதாரணமாக. தைரொக்சின் சுரப்பி அதிகமாக சுரத்தல், உணவு அகத்துறிஞ்சல் குறைவாக உள்ள நோய்கள். அனுசேபத் தொழிற்பாடுகளில் குறைவுள்ள நோய்கள். இவ்வாறான நோய்கள் இல்லை என உறுதிப்படுத்திய பின்பு உங்கள் நிறையை அதிகரிக்கும் முயற்சிகளில் இறங்கலாம்.



நோய்கள் இல்லாத நிலையில் ஒருவரின் நிறை குறைவாக அமைவதற்குப் பின்வரும் காரணிகள் ஏதுவாகலாம்.

**பரம்பரைக்காரணி, உணவின் தரம்குறைவாக இருத்தல், உண்ணும் பழக்கத்தில் குறைபாடு இருத்தல்.**

**கீழ்வருவன உங்கள் நிறையை அதிகரிப்பதற்கு உதவலாம்.**

- காலை உணவை நேரத்திற்கு உண்ணல் (உ+ம்: 7மணி)
- இரவுணவை நேரந்தள்ளி உண்ணல் (உ+ம்: 10மணி)
- உணவுக்கு முன் பால் மற்றும் தேநீர் அருந்துவதைத் தவிர்த்தல்.
- மூன்று வேளை பிரதான உணவிலும் கலோரி நிறைந்த உணவுகளைச் சேர்க்கவும் (உ+ம்: பயறு சேர்ந்த பாற்சோறு - காலை உணவு)
- முற்பகல் 10மணி, பிற்பகல் 4மணி ஆகிய வேளைகளில் உணவு உட்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தவும். (உ+ம்: பாலும், கலோரி கூடிய பிஸ்கட்டுகளும்)
- உங்கள் நிறையை 2 கிழமைகளுக்கு ஒருமுறை அளக்கவும். இவற்றை முயற்சி செய்து பார்த்தபின்பு உங்கள் நிறை குறைந்து கொண்டு சென்றால் வைத்திய ஆலோசனையை மீண்டும் நாட வேண்டும்.

Dr.திருமதி. P.செல்வகரன்



பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்